# IRCVPA - 2024

# PROCEEDINGS

"CONTEMPORARY CHALLENGES IN CREATIVE ARTS"

**1ST INTERNATIONAL RESEARCH CONFERENCE ON VISUAL & PERFORMING ARTS-2024**
**(IRCVPA-2024)**

UNDER THE SPHERE OF JAFFNA UNIVERSITY INTERNATIONAL RESEARCH CONFERENCE - 2024
(JUICE - 2024)

26th July 2024

# University of Jaffna, Sri Lanka

## Sir Ponnambalam Ramanathan Faculty of Visual and Performing Arts

1ST INTERNATIONAL RESEARCH CONFERENCE ON VISUAL & PERFORMING ARTS - 2024

Copy Right : 2024 Sir Ponnambalam Ramanathan Faculty of Visual and Performing Arts, University of Jaffna, Sri Lanka.

Published By : Sir Ponnambalam Ramanathan Faculty of Visual and Performing Arts, University of Jaffna, Sri Lanka.

URL : https://sprpcu.jfn.ac.lk

e-mail : ircpva@univ.jfn.ac.lk

ISBN : 978-624-6150-32-7

## *Contents*

*Editorial Committee* iv

*Organising Committee* v

*Panel of Reviewers* vii

*Message from the Vice Chancellor* viii

*Message from the Dean* ix

*Message from the Convener - IRCVPA-2024* x

*Message from the Chief Editor - IRCVPA-2024* xii

*Message from the Secretary - IRCVPA-2024* xiv

*Summary Fact of Key Note Address - IRCVPA-2024* xv

செஞ்சொற்செல்வரின் ஆசிச்செய்தி xvi

**Music Traditions 02 - 16**

*Musical perspective of Kauthuvam* 2

ஆய்ச்சியர் குரவை வழி அறியலாகும் இசை ஆடல் வளங்கள் 3

கோயிற் கலையாக வளர்ந்த புராணபடனம் சமகாலக் கோயில் அனுட்டானங்களில் காணப்படும் பாங்கு 4

யாழ்ப்பாணப் பல்கலைக்கழக நுண்கலைப்பட்ட பண்ணிசைக் கற்கைநெறி கற்றலினை மேம்படுத்தும் வழிமுறைகள் 5

யாழ்ப்பாணப் பல்கலைக்கழக இசைத்துறை, வாத்திய இசைத்துறைப் பாடத்திட்டங்களில் தமிழிசையின் பங்கு 6

ஆலய வழிபாட்டு மரபில் திருமுறை இசையின் சமகாலப் போக்கு 8

கர்நாடக இசையில் மனோதர்ம சங்கீதத்தில் மாணவர்கள் எதிர்கொள்ளும் பிரச்சினைகள் 9

ஆலயங்களில் இசை 10

பாரம்பரிய வில்லிசையும் ஈழத்தில் அதன் எதிர்கால இருப்பும் 11

தமிழர் கலை கலாசார பண்பாட்டியலில் ஆலயஇசையும், சமகால சூழலின் இசையின் வகிபங்கும். 12

டிஜிட்டல் இசைச் சாதனங்களும் இசைக்கலைஞர்களுக்கான வாய்ப்புக்களும் சவால்களும் 13

நாட்டார் பாடல்களின் கருத்தமைவில் மனிதனின் உளப்பாங்கு குறித்த சமகாலப் போக்கு: நுவரெலியா மாவட்டத்தின் கொட்டகலை பிரதேசத்தை அடிப்படையாகக் கொண்டது 14

## *Folk and Classical Dance 15 - 24*

*பரதநாட்டியக் கற்றல் - கற்பித்தல் கவின்நிலையில் நவீன செல்நெறியின் செல்வாக்கு* *16*

*சமகால நிருத்திய நாடகங்களில் ஆண் பாத்திரங்களை ஏற்கும் ஆண் ஆற்றுகையாளர்கள் மிடுக்கான வெளிப்படுத்தல்களை வழங்குவதில் எதிர்கொள்ளும் இடர்பாடுகள்* *18*

*The Evolution and Significance of Baanis in Bharatanatyam* *19*

*தற்காலத்தில் ஆலயங்களில் நடனக்கலை – ஓர் ஆய்வு.* *20*

*தமிழர் ஆடற் கலை: ஈழத்து சமூகப் பண்பாட்டு நோக்கு* *21*

*நடன நோக்கில் மட்டக்களப்பில் சடங்குக்காக ஆற்றுகை செய்யப்படும் கரகாட்டம்* *22*

*தமிழர் பேயாடல் நடன மரபும் சமூக உறவும்: காப்பிய, திருப்பதிக இலக்கியங்களினூடான ஆய்வு.* *23*

*நவீன தொழில்நுட்ப சாதனங்களைப் பயன்படுத்தி நடன பாடம் கற்பிக்கும் திறனை மேம்படுத்தல்* *24*

## *Painting and Sculpture 25 - 41*

*இயற்கையின் மேலாதிக்கம் : ஓவியர் ஆசை இராசையாவின் நிலக்காட்சி ஓவியங்களை அடிப்படையாகக் கொண்ட ஆய்வு.* *26*

*பாரம்பரிய மரச் சிற்பப் படைப்புக்களின் அழகியல்: யாழ்ப்பாணத்தின் திருநெல்வேலிப் பிரதேசத்தை மையமாகக்கொண்ட ஆய்வு* *28*

*இலங்கைச் சமகால கருத்துருவாக்கக் காண்பியக் கலை வெளிப்பாடுகளில் உள்ள சவால்கள்* *30*

*மட்டக்களப்புக் கோட்டையில், ஒல்லாந்தரின் கோட்டை வடிவமைப்பும், நுட்பமுறைகளும்* *31*

*புகைப்படக்கலையில் செயற்கை நுண்ணறிவு.* *32*

*யாழ்ப்பாணத்தின் மெய்யுரு ஓவிய வரைதலும் சவால்களும்* *34*

*Research Landscape of "European Sculpture'' - A Bibliometric Analysis Based on Web of Science Database (2000 - 2024)* *36*

*யாழ்ப்பாணக் கிறிஸ்தவ சிற்பக் கலைஞர்களும் சமகால சவால்களும்* *37*

*காண்பிய வெளியில் விலங்குடல்களின் வேறுபட்ட குறியீட்டுத்துவ வெளிப்பாடுகள் : விநாயக வடிவங்களினை அடிப்படையாகக் கொண்ட ஆய்வு* *39*

*இந்துக் கோயிற் திரைச்சீலை ஓவிய முறையின் மரபும், மாற்றங்களும்: யாழ்ப்பாண நல்லூர் பிரதேசத்தை மையமாக கொண்டது.* *41*

## *Theatre and Performance* *42 - 50*

*சமகாலத்தில் கூத்துப் பிரதிகளும் அதன் இலக்கிய மதிப்பீடும்: மட்டக்களப்பு வடமோடித் தென்மோடிக் கூத்துப்பிரதிகளை அடிப்படையாகக் கொண்ட ஆய்வு* 43

*பாரம்பரிய கத்தோலிக்கக் கூத்துக்களின் தோற்றத்தில் தேசியவாதத்தின் தாக்கமும், சமகால நிலைத்திருப்பும் சவால்களும்: யாழ்ப்பாணப் பாரம்பரியக் கத்தோலிக்கக் கூத்துக்களை அடிப்படையாகக் கொண்ட ஆய்வு.* 44

*இலங்கைத் தமிழ் அரங்க மரபில் 'கூத்துருவ நாடக' முயற்சியும், எதிர்கொள்ளும் சவால்களும். (கொல் ஈனும் கொற்றம், கூத்துருவ நாடகத்தை அடிப்படையாகக் கொண்டது.)* 45

*தேசிய அரங்கக் கற்பனைகளும், ஈழத்தமிழ் அரங்கச் சூழலில் கூத்தைத் தகவமைத்தலும்* 46

*சமகாலத் தமிழரங்கச் சூழலில் அரங்கக் குழுவாக இயங்குதலின் சவால்களும் சாத்தியப்பாடுகளும்: வவுனியா அரங்காலயா சுதந்திர அரங்க வலையமைப்பினை அடிப்படையாகக் கொண்ட ஆய்வு* 47

*உடலுளத் தாக்கத்தில் செல்வாக்குச் செலுத்தும் தொலைக்காட்சித் தொடர் நாடகங்கள் குறித்த சமகாலப் போக்கு* 49

*அனுபவங்களில் இருந்து சமகால ஆற்றுகைக்கான பனுவலிக்கு மை நேம் இஸ் தமிழ் ஆற்றுகையை அடிப்படையாகக் கொண்ட ஆய்வு.* 50

## *Text and Performance* *51 - 60*

*The Performative Divine: Velichappadu's Role in Challenging Marginalization in Malabar* 52

*Music as a Textual Enhancer: A Study of Utirippūkkaḷ* 53

*Translating Text to Cinema: A Comparative Study of Chetan Bhagat's Novels and Their Film Adaptations* 54

*மரபின் காலனியவாக்கமும் காலனிய நீக்கமும்: கோடை நாடகத்தை அடிப்படையாகக் கொண்ட ஆய்வு* 55

*Exploring the Extinct Folk Art forms of Birbhum District, West Bengal, India* 57

*சமகால இசைநோக்கில் கைசிகப் பண்ணும் ஏகாதசியும்* 58

*நிமித்தமறிதலில் கோடிழைதல் குறித்த நம்பிக்கை வழக்கம் : தமிழ் பக்தி இலக்கியங்களை முன்னிறுத்திய நோக்கு* 59

# Editorial Committee

**Chief Editor** Dr. Mrs. Shiyamala Jeyakumar

**Editorial Members**
Mrs. Kirupasakthy Karuna
Mrs. Janani Nadesamoorthy
Dr. Mrs. Shylaja Ilanchellian
Dr. S. Ketheeswaran - Cyber Advisor
Mr. V. Balamurugan
Mr. M. Manokar

# Organising Committee

| | |
|---|---|
| **Chair** | Mr. S. Sivaruban |
| **Co-Chair** | Dr. Mrs. N. Karunakaran<br>Ms. Mythili Arulaiah<br>Mr. T. Robert Arudsegaran<br>Mrs. Sujatha Niranjan<br>Dr. Mrs. A. Nagaboosani<br>Dr. Ms. S. Ananthajothy<br>Mrs. Jananie Shenthuran<br>Mr. V. Balamurugan<br>Mr. M.Manokar |
| **Convener** | Dr. K. Rathitharan |
| **Secretary** | Dr. S. Suriyakumar |
| **Assistant Secretary** | Mr. N. Paranthaman |
| **Treasurer** | Dr. Mrs. S. Aravinthon |
| **Technical Session & Arrangement** | Mr. N.Arumugathash<br>Ms. J. Sherin Judina |
| **Inauguration Ceremony Incharge** | Ms.R.Thavachchelvy |
| **Publication Support Committee** | Mr. A. Kangeyan<br>Mrs. Lathagini Sulaxan |
| **Publicity and Advertisement Committee** | Mr.N.Sanjeevan<br>Mr.J.M.K.Nicholas |
| **Technical Support Incharge** | Mrs. Lathagini Sulaxan |
| **Food and Accommodation Incharge** | Dr. Ms.S.Ananthajothy |
| **Cultural Event Committee** | Mrs.Thushyanthi Sugunan<br>Mr.P.Prashanth<br>Mr.S.Gobithas<br>Mr.T.Justin Jelood<br>Mrs.P.Vasantharuban<br>Mr.P.Sivamaitnthan |

| | |
|---|---|
| **Design & Decoration Committee** | Mr.V.Balamurugan<br>Mr.M.Manokar<br>Ms.R.Thavachchelvy<br>Mr.Pavithrakanthan<br>Mr.S.Sasitharan |
| **Transport and Accommodation Incharge** | Mr.M.Ketheeswaran |
| **Chairs for Technical Session** | Prof. A.Shanmugathas<br>Prof.N.Shanmugalingan<br>Dr.S.Karpagam<br>Dr.G.Jeyaranjinee<br>Dr.Ms.K.Siyamalangi<br>Dr.T.Pratheepan |
| **Technical Session Facilitators** | Ms. Mythili Arulaiah<br>Mrs.R.Ragavan<br>Mrs.J.Shenthuran<br>Mr.N.Paranthaman<br>Ms.R.Thavachchelvy<br>Mr.A.Kangeyan |
| **Designer** | Mr. A. Kangeyan |
| **Stage Managers** | Mr.A.Prashanth<br>Mr.P.M.K.Nicholas |

# Panel of Reviewers

1. **Prof. A. Shanmugathas,** Emeritus Professor (University of Jaffna), Srilanka
2. **Prof. S. Jeyasankar,** Department of Fine Arts, Eastern University, Srilanka
3. **Prof. K. Visakaruban,** Department of Tamil, Faculty of Arts, University of Jaffna
4. **Prof. (Mrs.) S. Kesavan** , Department of Hindu Civilization, Eastern University , Srilanka
5. **Dr. T. Pratheepan**, Swami Vipulananda Institute of Aesthetic Studies,Eastern University , Srilanka
6. **Dr. V.L.VSudharsan,** Annamalai University, India
7. **Dr T.Sankaranarayanan,** Sri Sathguru Sangeetha Vidyalayam College of Music & Research Centre ( Affiliated to the Tamil Nadu DR.J Jayalalithaa Music and Fine Arts University), India.
8. **Dr. Arimalam S Padmanabhan**, Central Institute of Classical Tamil, Government of India, Chennai.
9. **Dr.S.Kawsalya**, Fine arts Center , Tamil College of Canada,Toronto.
10. **Dr.Madhavi Natarajan**, Music Department, Tamil University
11. **Dr.S.Karpagam** Tamil University , Thanjavur
12. **Dr. (Ms).K.Siyamalangi** , Swami Vipulananda Institute of Aesthetic Studies,Eastern University , Srilanka
13. **Dr. Lakshmi Ramaswamy ,** Madras University , India
14. **Dr.M.S.Sarala,** Alagappa University ,Karaikudi,Tamil Nadu,India
15. **Dr. Manoranjana Herath Bandara,** Department of Sculpture, University of Visual and Performing Arts, Colombo, SriLanka.
16. **Dr.K.R.Rajaravivarma ,** Department of performing Arts, Pondicherry University, Puducherry, India.
17. **Dr.V.Arumugham ,** School of Performing Arts, Pondicherry University, India.
18. **Dr. (Mrs.) S. Srimuralitharan,** Department of Hindu Civilization, Faculty of Hindu Studies, University of Jaffna
19. **Dr.T.Balachandran,** Annamalai University, India
20. **Dr.G.Jeyaranjinee** Swami Vipulananda Institute of Aesthetic Studies, Eastern University , Srilanka
21. **Dr. A. Vimalraj ,** Swami Vipulananda Institute of Aesthetic Studies,Eastern University , Srilanka
22. **Ms.S. Vignamohan,**Jaffna National College of Education.
23. **Mr. R. Pragash**, Swami Vipulananda Institute of Aesthetic Studies, Eastern University , Srilanka

# Message from the Vice Chancellor



I am extremely delighted in extending well-wishing message to the First International Conference of Sir Ponnambalam Ramanathan Faculty of Visual and Performing Arts, 2024.

Research is an important endeavor of the Academic community. It is an admiring commitment exhibited by the academic community of the Sir Ponnambalam Ramanathan Faculty of Visual and Performing Arts (SPRFVPA) to expand the research culture.

The outcomes of the research studies should be involved into critical discussions, and suitable solutions have to be taken based on the constructive arguments. The articles presented at this conference are authored by famous researchers in five disciplines, Music (Vocal), Instrumental Music, Dance, Drama & Theatre, Sculpture and Painting which are the preliminary disciplines catered by SPRFVPA.

I am sure on my instinct that this International Conference of Performing and Visual Arts would be a best platform to discuss about the research outcomes critically and come up with effective solutions as well as this would be a smoother path to establish a good collaboration between universities and performing platforms located nationally and internationally to address the current issues encountered by the Performing and Visual Art community.


It is impressive that the theme of this conference has been designed as ‘Contemporary challenges in creative arts’, which fits for today’s world. In this contemporary world, researchers related with aesthetic and stage performers are facing challenges to sustain themselves for a long time.This is the perfect time to invent platforms for their continued existence, all over the world. I really hope that this conference would lead a bright path towards achieving the goals of its theme.

In spite of the raise of influences of the latest technology, aesthetics should be enhanced by different modes and not by their base root traditions.

Finally I would like to thank the distinguished keynote speakers, reviewers, sponsors and participants for accepting this conference. My heartiest wishes to the organizing committee of the conference and all the staff members of the Faculty of Performing and Visual Arts for organizing their first conference with sounding success.

**Prof. S. Srisatkunarajah**
Vice Chancellor,
University of Jaffna,
Sri Lanka.

# Message from the Dean



It is with great pride and a sense of accomplishment that we announce the attainment of faculty status for the Sir Ponnambalam Ramanathan Faculty of Visual and Performing Arts. This milestone is the culmination of sustained efforts by the University administration and the collective dedication of our community. Our faculty, with its rich and illustrious history, traces its origins to the 1960s when it was established by the late Nadesapillai on Vijayadasami day in honor of his father-in-law. When the University of Jaffna was founded in 1974, the faculty was incorporated into the Faculty of Arts and became widely recognized as the Ramanathan Academy of Fine Arts (RAFA). For many years, up until the 1990s, RAFA primarily offered diploma programs.

In 2022, we reached a significant milestone by achieving faculty status with six departments, and we are now known as the Sir Ponnambalam Ramanathan Faculty of Visual and Performing Arts. Our faculty members and students have long been celebrated for their performances and exhibitions, although opportunities for research activities have been limited.


Recognizing the importance of fostering a robust research culture, we decided to organize an international research conference within our faculty. This event celebrates diamond jubilee of RAFA's history and the golden jubilee of our university. The conference, held under the guidance of our Vice Chancellor, received generous support from the JUCE fund, KK fund, and private sponsors.

We are honored to have received blessings and support from our Vice Chancellor and Dr. Aruthirumurugan, for this conference. We extend our heartfelt gratitude to Dr. S. Sowmya, the Vice Chancellor of The Tamil Naadu Dr. J. Jayalalithaa Music and Fine Arts University of India, who honored us with a keynote speech for her invaluable contribution.

We express our sincere gratitude to everyone who supported our efforts. I wish all participants and attendees great success in this research conference.
Thank you.

**Mr. S. Sivaruban**
Dean / Sir Ponnambalam Ramanathan Faculty of Visual & Performing Arts,
University of Jaffna,
Sri Lanka.

# Message from the Convener - IRCVPA-2024



It is my great pleasure to present the proceedings of the international conference on “Contemporary Challenges in Creative Arts”. The main goal of this conference is to create a platform for researchers with passion. An opportunity has been given to those who strive to resolve issues through research through this conference.

Addressing issues through creative arts has become indispensable since problems are multi-dimensional and multi-faceted. Research is an ongoing process to address crises and issues worldwide. While many problems have been resolved through research, new challenges have emerged as a result of those solutions. However, research is the only way to resolve unresolved issues.

The recent economic crisis experienced across the world has its roots in various factors like wars between countries, pestilences, and pandemics. Consequently, conflicts and pandemics spread globally, pushing governments to divert funds away from art and aesthetic fields such as visual and performing arts in an attempt to manage the crisis.

In Sri Lanka, at the school level, students are encouraged to pursue subjects other than aesthetic ones, aligning with the demands of labor markets and related disciplines. This approach can mislead communities and stifle the expression of emotions, feelings, imagination, creativity, and cultural appreciation. However, it is crucial to note that expression and creativity encompass emotions, imagination, and feelings, playing a vital role in fostering innovation, mental well-being, and catharsis.

In addition, Artificial Intelligence (AI) may excel in various tasks, like creating paintings, scripts, or poems, but it falls short in developing emotional intelligence since emotional depth is refined through artistic expression in visual and performance arts.

In the evolving global landscape, there is an expectation for artistic expression to help address pressing issues such as global warming, pollution, deforestation, and pandemics. The challenges of the 21st century involve protecting art and aesthetics in educational curricula and within countries.

The main theme of the conference revolves around "Contemporary challenges in creative arts." These challenges can be viewed in two main aspects:

- Challenges in the creative process of artistic creation.
- Challenges in ensuring the survival and flourishing creative arts.

There are several issues involved in both creating and appreciating the creative arts, including material unavailability, high prices, expenses exceeding returns, a surplus of followers compared to innovators, an indirect guru-shishya

(teacher-student) system, as well as issues related to freedom of teaching and learning.

The future of the creative arts must address community concerns and develop alternative arrangements to meet societal or national demands. The rise of social media has significantly popularized online platforms, drawing public attention and consequently affecting traditional forms of entertainment, which are integral to the creative arts. Social media has blurred the lines between traditional creative arts and new art forms emerging in digital spaces.

Educational programs in the creative arts should integrate approaches that enhance quality and address social requirements. For example, liberal arts education combines social sciences, humanities, and creative arts, emphasizing an interdisciplinary approach. The creative arts rely on foundational scientific principles elements such as electricity, lighting, color theory, and instruments are rooted in science and technology.

Resolving challenges in the creative arts necessitates interdisciplinary approaches, incorporating integrative and problem-based learning methods. From addressing climate change to navigating geopolitical tensions, the creative arts must engage with contemporary global issues using appropriate mechanisms.

To address modern challenges, the creative arts must engage with global, local, and social issues. The curricula of future creative arts should aim for a balance that considers the evolving needs, demands, and passions of individuals to propel the field forward.

While a country's growth may heavily rely on its economic conditions, it is imperative that a nation incorporates arts and aesthetics to prosper, enriching its cultural and creative landscape.

The articles chosen for this international conference largely align with the conference theme. The research papers present numerous novel findings that hold significant values for the advancing academic community.

Several research papers are authored within this proceeding, covering various subjects such as Drama, Dance, Music, Instrumental Music, Sculpture, Painting, and Liberal Arts. Traditional customs and rituals have gained significance in the context of modernity, especially when considering the contemporary challenges of today.

Since this marks the inaugural conference, there is a substantial amount of experiential learning taking place, leaving room for enhancements in future iterations.

**Dr. K. Rathitharan**
Convener IRCVPA – 2024
Sir Ponnambalam Ramanathan Faculty of Visual and Performing Arts,
University of Jaffna,
Sri Lanka.

# Message from the Chief Editor - IRCVPA-2024



Dear Esteemed Colleagues and Creative Arts Enthusiasts, It is with great pleasure that I welcome you to the First International Research Conference on 'Contemporary Challenges in Creative Arts', hosted by the Sir Ponnambalam Ramanathan Faculty of Visual and Performing Arts (SPRFVPA) at the University of Jaffna (UoJ), under the sphere of Jaffna University International Research Conference -2024 (JUICe-2024). As the chief editor of this groundbreaking event, I am thrilled to present an opportunity for a thought-provoking dialogue and collaboration at the intersection of contemporary challenges in creative arts and issues.

In an era where the creative landscape is rapidly evolving, this conference serves as a crucial platform to explore the dynamic challenges and opportunities within the realm of the arts. Our gathering aims to bridge diverse perspectives and foster innovative discussions that will shape the future of creative practices globally.

I am delighted to announce that we have received 56 submissions spanning five tracks, including Dance, Music, Painting & Sculpture, Drama and Theatre Arts and Liberal Arts. Following a thorough double -blind review process, 44 research papers have been chosen for presentation showcasing high quality and rigor of the submissions. This iterative approach highlights our dedication to the academic excellence and the advancement of knowledge within the realm of Contemporary Challenges in Creative Arts. Our esteemed reviewers, hailing from local and the international academic spheres, have played a pivotal role in ensuring the excellence of the conference proceedings.

I extend my heartfelt sincere thanks to our Vice Chancellor, Professor S.Srisatkunarajah, General Chair, Mr.S.Sivaruban, the Dean and Conference chair, and Co-Chairs, and Convener. Additionally I would like to acknowledge and thank all our editorial board members, authors, and reviewers for their contributions and cooperation, which have played a vital role in the success of the conference.

The conference will feature a rich array of keynote addresses from a leading expert Dr.Sowmya , the Vice Chancellor of DR.J Jayalalithaa University of Tamil Nadu, India. We are proud to facilitate an environment where artists, scholars, professionals and students can come together to share their insights and contribute to meaningful conversations about the role of contemporary challenges in creative arts in today's world.

I would like to extend my heartfelt gratitude to all participants, speakers, and contributors who have made this event a reality. Your enthusiasm and commitment in the advancement of the field of creative arts are truly inspiring.


As we embark on this journey of exploration and discovery of art fields, I encourage you to engage actively, network with fellow attendees, and embrace the opportunities that lie ahead. Together, we can address the contemporary challenges in creative arts and envision a future where innovation and expression thrive.

Thank you for being a part of this inaugural conference. I look forward to an inspiring and successful event.

Warm regards,

**Dr.S.Jeyakumar,**
Chief Editor, IRCVPA – 2024
Sir Ponnambalam Ramanathan Faculty of Visual and Performing Arts,
University of Jaffna,
Sri Lanka.

# Message from the Secretary - IRCVPA-2024



Dear Colleagues and Participants,

It is with immense pleasure and pride that I welcome you to the 1st International Research Conference on Visual & Performing Arts (IRCVPA-2024), hosted by the Sir ponnambalam Ramanathan Faculty of Visual & Performing Arts at the University of Jaffna. This conference marks a significant milestone in our journey towards fostering academic excellence and global collaboration in the fields of visual and performing arts.

Our conference theme, encompassing a broad spectrum of artistic disciplines, aims to provide a vibrant platform for researchers, practitioners, and scholars from around the world to present their work, exchange ideas, and inspire one another. We are honored to have Dr. S. Sowmya, Vice-Chancellor of J. Jayalalithaa Music & Fine Arts University, India, as our keynote speaker, whose contributions to the field are both profound and inspiring.

The diverse program of IRCVPA-2024 includes technical sessions, cultural performances, and networking opportunities designed to stimulate engaging discussions and forge meaningful connections among attendees. This conference is not only a celebration of artistic achievements but also a forum for critical reflection on the role of the arts in contemporary society.

I extend my heartfelt gratitude to our esteemed guests, speakers, and participants for their enthusiastic response and support. Your presence here is a testament to the vibrancy and importance of the visual and performing arts community. I would also like to thank the organizing committee, volunteers, and sponsors for their relentless efforts in making this event a reality. Without their dedication and hard work, this conference would not have been possible.

I am confident that IRCVPA-2024 will serve as a catalyst for innovative research and creative endeavors, fostering new collaborations and friendships that will shape the future of visual and performing arts. The insights and ideas generated here will undoubtedly contribute to the advancement of our fields and inspire future generations of artists and scholars.

Thank you for your participation, and I wish you a productive and enriching conference. May this event leave you with lasting memories and a renewed passion for the arts.

Warm regards,

**Dr. S. Suriyakumar**
Secretary, IRCVPA-2024
Sir Ponnambalam Ramanathan Faculty of Visual & Performing Arts,
University of Jaffna,
Sri Lanka.

# Summary Fact of Key Note Address - IRCVPA-2024



Balancing tradition and changing trends in arts is crucial. Tradition provides a foundation, preserving cultural heritage and authenticity. However, art must evolve to stay relevant, incorporating new perspectives, techniques, and technologies. Blending classical methods with contemporary styles leads to innovative creations that bridge generations. Education and community support are key in maintaining this balance, helping artists appreciate historical contexts while embracing modern advancements. By respecting the past and adapting to the future, artists ensure that their work remains dynamic and meaningful, enriching our cultural landscape.

**Dr. S. Sowmya**
Vice Chancellor
Tami Nadu Dr.J.Jayalalithaa Music and Fine Arts University,
Chennai 600 028,
India.

# செஞ்சொற்செல்வரின் ஆசிச்செய்தி



யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம் கலைப் பாரம்பரியத்தைக் காப்பதற்காக சேர். பொன். இராமநாதனின் பெயரில் உருவாக்கப்பட்ட இராமநாதன் அக்கடமி என்னும் கலை நிறுவனத்தை பல்கலைக்கழகத்தோடு இணைத்து பல்கலைக்கழகத்தின் முக்கிய நுண்கலைப்பீடமாக செயற்பட்டு வந்தது. நீண்ட நாட்களாக பல்கலைக்கழகச் சமூகம் எடுத்த முயற்சியின் பயனாகத் தற்போது சேர்.பொன்னம்பலம் இராமநாதன் காண்பிய ஆற்றுகைக் கலைகள் பீடம் என தனிப்பீடமாக சிறப்பு பெற்றுள்ளது. இது பெருமைக்குரிய விடயமாகும்.

இப் பீடத்தவர்கள் முதலாவது பன்னாட்டு ஆய்வு மாநாடு நடாத்துவது அறிந்து மிகவும் ஆனந்தமடைகின்றேன். ஆக்கக் கலைகளின் சமகாலச் சவால்கள் என்ற தலைப்பில் கற்றோர் ஒன்று கூடி ஆராய்வது அரிய செயற்பாடாகும். இம்மாநாடு மிக வெற்றிகரமாக அமைய துர்க்கை அம்மனைப் பிரார்த்திக்கின்றேன். ஆண்டு தோறும் இவ்வறிவியல் மாநாடு தொடர்ந்து இடம்பெற வேண்டும் எனத் துறைசார்ந்த அனைவரையும் கேட்டுக்கொள்கின்றேன். மாநாடு சிறக்க அயராது உழைத்த அனைவருக்கும் பாராட்டுக்களைத் தெரிவித்துக் கொள்கின்றேன்.

**கலாநிதி ஆறு திருமுருகன்,**
தலைவர்,
ஸ்ரீ துர்க்காதேவி தேவஸ்தானம்.
தலைவர்,
சிவபூமி அறக்கட்டளை.

# Music Traditions

# Musical perspective of Kauthuvam

**Dr. M. Subhasree**
*Department of Indian Music, University of Madras*

**Abstract**

*Kauthuvam* or *Kavithuvam* or *Kauttam* is a prominent form in the present day Bharatanatya *Margam*. Earlier, this was a form that was a dedicated ritual composition performed by the traditional dancers in temples. For decades now, this form has evolved with inevitable modifications, alterations and innovations. This paper will focus on the musical aspects of this Bharatanatyam form and the historical perspective in the rendition through the years. Though there are many oral sources with regard to this subject, the study will deal with the few available textual sources in order to understand the historical development of the form. The structure of the *Kauthuvam* is generally a combination of solkattu syllables or the rhythmic syllables, that generally do not have any meaning and the meaningful *sahitya* part. The *sahitya* is generally in praise of a deities, King, patron and other specific themes. From the Bharatanatyam point of view, *Kauthuvam* is one of the invocatory compositions in present day *margam*. This form has a combination of both *nrtta* and *abinaya* components. The melodic structure, rhythmical components, distribution of the rhythmic syllables, text or the *sahitya* have scope for analytical study, so as to evaluate the significant changes that has been created in this dance form till date. The main objective of this paper shall be the musical components of the form *Kauthuvam*, based on the documentation available in various printed sources.

**Keywords:** *kauthuvam*, melody, *raga*, *solkattu*, structure, *tala*

# ஆய்ச்சியர் குரவை வழி அறியலாகும் இசை ஆடல் வளங்கள்

**முனைவர் செ.கற்பகம்**
*இசைத்துறை, தமிழ்ப்பல்கலைக்கழகம், தஞ்சாவூர்*

**ஆய்வுச்சுருக்கம்**

*செந்தமிழ் மொழியின் முதன்மைக்காப்பியம் சிலப்பதிகாரம். முத்தமிழ்க்காப்பியம், பெண்மையைப் போற்றிய காப்பியம். இசைக்கலை, ஆடற்கலையின் அருஞ்சுரங்கம். பழந்தமிழின் இசை நாட்டியக் கருவூலங்களைத் தொகுத்துரைத்த காப்பியம். தொன்மையான இசைப்பாடல்களைக் கொண்டுள்ள காப்பியம். வளமார் இசை, நாடக மரபுகளை மீட்டெடுத்த காப்பியம். அரும்பத உரையும், அடியார்க்கு நல்லார் இக்காப்பியத்தைக் கண்டுணரத் துணை நிற்கின்றன. இக்காப்பியம் உரைத்துள்ள கலைச்சுரங்களை வெளிக்கொணர முயன்றவர்களாகப் பலர் உள்ளனர். தஞ்சை மு.ஆபிரகாம் பண்டிதர், யாழ்நூல் விபுலானந்த அடிகளார், மதுரை பொன்னுசாமி பிள்ளை, க.வெள்ளை வாரணார், குடந்தை ப.சுந்தரேசனார், டாக்டர். எஸ்.இராமநாதன், முனைவர் வீ.ப.கா.சுந்தரம், சேலம் எஸ் ஜெயலெட்சுமி போன்றோர் இந்நூலுள் அமைந்துள்ள கலைச்சுரங்கங்களை வெளிக்கொணர்ந்துள்ளனர். இக்காப்பியத்தின் முப்பது காதைகளுள் ஆய்ச்சியர் குரவை 17வது காதையாகும் பண்டைய பண்ணுப்பெயர்ப்பு முறையினையும், முல்லைப்பண் மற்றும் முல்லையம் தீம்பாணி தோன்றிய முறையினையும் வெளிக்காட்டும் காதையாக ஆய்ச்சியர் குரவை திகழ்கின்றது. இக்காப்பியத்தினை ஆராய்ந்த இசை வல்லுநர்கள் முல்லைப்பெரும்பண் என்பது அரிகாம்போதி என்றும், முல்லையம் தீம்பாணி என்பது மோகனம் என்றும் கருத்துரைத்து பெரும்பண் பண்ணுப்பெயர்ப்பு முறையினையும், சேய் இராகப் பண்ணுப்பெயர்ப்பு முறையினையும் கூறியுள்ளனர். இவ் ஆய்வு விளக்க முறை ஆய்வாகவும், பகுப்பு முறை ஆய்வாகவும், ஒப்பீட்டு முறை ஆய்வாகவும் அமைந்துள்ளது. இக்கட்டுரையின் வாயிலாக முல்லைத்தீம்பாணியின் வாயிலாக மோகன இராகம் கண்டெடுத்த வரலாறினையும், முல்லைப்பண்ணிற்கு இணையான இராகமாக அரிகாம்போதி கண்டெடுக்கப்பட்ட செய்திகளைக் காணலாம்.*

**திறவுச் சொற்கள் -** *பண்ணுப்பெயர்ப்பு,முல்லையம் தீங்குழல், குரவைக்கூத்து, வலிவு, மெலிவு, சமன் இயக்குகள்,பண், இராகம்*

# கோயிற் கலையாக வளர்ந்த புராணபடனம் சமகாலக் கோயில் அனுட்டானங்களில் காணப்படும் பாங்கு

**கிருபாசக்தி கருணா**
*இசைத்துறை, SPRFVPA, யாழ்.பல்கலைக் கழகம், இலங்கை.*

**ஆய்வுச்சுருக்கம்**

*கிராம மக்களின் வாழ்க்கைமுறையில் முக்கிய இடம்பெறுகின்ற கடவுள் வழிபாட்டிற்கும் கலைக்கும் நெருங்கிய தொடர்பு இருந்துள்ளது. இதுவே கோயிற் கலைகள் தோன்றுவதற்குக் காரணமாயிற்று. இவ்வாறு கோயில்கள் வளர்த்த கலைகளுள் புராணபடனம் வாழ்வியல் விழுமியங்களின் அடிப்படையில் முக்கியமானதாகக் காணப்பட்டது. இப்புராணங்கள் மனிதரை நெறிப்படுத்தி, வழிப்படுத்தும் ஆன்மீக வாழ்வியல் விழுமியங்கள் கொண்ட சைவக் கலாசாரம் ஒன்றினைக் கட்டி எழுப்ப உறுதுணையாக விளங்கின. புராணங்களைப் படித்தல், புராணங்களை வாசித்தல், பயன் சொல்லல் என்பது ஈழநாட்டுக்குக் குறிப்பாக யாழ்ப்பாணத்துக்கே உரிய சிறப்பு முறையாகும். ஈழத்திலே புராணங்களைப் படித்துப் பயன் சொல்லும் நிகழ்வானது ஆறுமுகநாவலர் காலத்திலே புராணபடனம் என்ற உயர்நிலையைப் பெற்றது. யாழ்ப்பாணத்தில் புராணபடனம் செய்யப்பட்டு வரும் நூல்களில் கந்தபுராணம் முதன்மையானது. இந்நூல் சைவ மக்களின் சமய கலாசார மறுமலர்ச்சியில் முக்கிய பங்கினை வகித்தது. யாழ்ப்பாண மக்கள் கந்த புராணத்தைத் திருமுறை வரிசையிலேயே வைத்துப் போற்றி வருகின்றனர். இப்புராணபடனம் கோயில்களிலும் பிற இடங்களிலும் காலையிலும் மாலையிலும் நடைபெற்று வந்துள்ளது. இப் புராணபடன முறைகளுக்கு இராகம் தொடர்பான சிறப்பான விதிகள் கூட அமைக்கப்பட்டுள்ளன. இக்கலைகளுக்கு யாழ்ப்பாண சைவ மக்களிடையே இருந்த ஈடுபாடு, தற்போதுள்ள சூழ்நிலை, இக்கலையை அழியவிடாமல் பாதுகாப்பதற்குரிய வழிமுறைகள் ஆகியன இந்த ஆய்வின் மூலம் வெளிக்கொணரப்படுவது இவ்வாய்விற்குரிய நோக்கங்களாகக் கொள்ளப்படுகிறது. ஈழத்திற்கே தனித்துவமான இம்மரபிற்குத் தற்போது மக்களிடையேயுள்ள வரவேற்பு தாழ்ந்தநிலையிலுள்ளமை இவ் ஆய்விற்குரிய பிரச்சினையாகக் குறிப்பிடப்படுகிறது. கோயில் அதிகாரிகளும் ஊர் மக்களும் இணைந்து மேற்கொள்ளும் செயல்வடிவங்கள் மூலம் படித்தோர்களையும் இளையோர்களையும் பெண்களையும் புராணபடனக் கலையில் ஈடுபடுத்தமுடியும் என்பது இதற்குரிய கருதுகோளாக முன்வைக்கப்படுகிறது. நூல்களையும் பத்திரிகைச் செய்திகளையும் அடிப்படையாகக் கொண்டு விவரண ஆய்வாக இவ்வாய்வு நகர்த்தப்படுகிறது. எழுதப் படிக்கத் தெரியாத மக்களுக்கும் சமயம் சார்ந்த கதைகளையும் அருள் உபதேசங்களையும் இசைக்கலையுடன் இணைத்து சேர்க்கும் ஓர் ஊடகமாக விளங்கிய இப்புராணபடனக் கலையை மீளுருவாக்கம் செய்வதற்கு இவ்வாய்வு பயனளிக்கும்.*

**திறவுச்சொற்கள்** - *புராணபடனம், இராகம், இசைக்கலை, கோயிற்கலை, பயன் சொல்லல்*

# யாழ்ப்பாணப் பல்கலைக்கழக நுண்கலைப்பட்ட பண்ணிசைக் கற்கைநெறி கற்றலினை மேம்படுத்தும் வழிமுறைகள்

**முனைவர். ஸ்ரீநாகபூஷணி அரங்கராஜ்**
*இசைத்துறை, SPRFVPA, யாழ்.பல்கலைக் கழகம், இலங்கை.*

**ஆய்வுச்சுருக்கம்:**

*யாழ்ப்பாணப் பல்கலைக்கழக இராமநாதன் காண்பிய அரங்காற்றுக் கலைகள் பீடத்தில் சுமார் 50 வருடங்களுக்கு முன்பிருந்தே பண்ணிசைக் கற்கை நெறி, பட்டச் சான்றிதழ், பட்டயக் கற்கை நெறியாக இருந்து 1992ம் ஆண்டிலிருந்து பண்ணிசைப்பட்ட நெறியாக பல சவால்களின் பின்னர் புத்துயிர் பெற்று விளங்கியது. இவ் ஆய்விற்குரிய பிரச்சினைகளாகப் பண்ணிசைப் பட்டம் என்பது தரம் குறைவானது என்ற எண்ணம் சமூகத்தில் உள்ளமை. இக் கற்கைநெறி யாழ்ப்பாணப் பல்கலைக்கழக இசைப்பீடத்தில் தனி அலகாக 1992ம் ஆண்டு முதல் கற்பிக்கும் நடைமுறையில் இருந்தாலும், பண்ணிசைப் பாடத்தை விரும்பும் மாணவர்கள் வரவு குறைவாக உள்ளமை கடந்த காலங்களிலும், தற்போதைய நிலையிலும் உணரப்பட்டது. வேலைவாய்ப்பு என்பது இசைத்துறையில் கல்வி கற்கும் அனைத்து மாணவருக்கும் சுலபமாக ஒரு சில வருடங்களில் கிடைக்கக்கூடிய ஒன்றாகும். பண்ணிசைத் துறையில் பட்டம் பெற்றால் தங்களுக்கு வேலை கிடைக்காமல் போய்விடும் என்ற தப்பான அபிப்பிராயங்களை மாணவர்கள் கொண்டுள்ளமை கண்டறியப்பட்டது. இவ் ஆய்வின் பயனாக எதிர்வரும் காலங்களில் கர்நாடக சங்கீதத்திற்குரிய பாடத்திட்டம் இருப்பது போன்று இலங்கை கல்வி அமைச்சுப் பாடத்திட்டத்திலும், உயர்கல்வி அமைச்சுப் பாடத்திட்டத்திலும் அறிஞர் குழுக்களால் பண்ணிசை (வாய்ப்பாட்டு) அறிமுறை எனும் பாடாந்தரம் தரம் - 6 முதல் 11 வரையிலும், பின்னர் 12 – 13 வரையான உயர் கல்வியிலும் மாணவர்கள் தெரிவு செய்து விருப்பப் பாட அலகாக பண்ணிசை அறிமுறை, செய்முறைப் பாடத்தரத்தை உருவாக்கவும், மாணவர்கள் அதனை விரும்பிக் கற்கவும் துணைபுரிய வேண்டும். எதிர்காலத்தில் பல்கலைக்கழகங்களிலும், தேசிய கல்வியியற் கல்லூரிகள், அழகியல் கல்வி நிறுவகங்களில் இசைத்துறைக்கான பாட விதானத்தினை ஏற்படுத்தும் பொழுது தனிப்பட்ட ஒரு அலகாகப் பண்ணிசைப் பாடத்திட்டத்தினைக் கொண்டுவர வேண்டும். ஆய்வு முறைமையாக பண்புசார் ஆய்வாக இவ் ஆய்வு நகர்கின்றது. யாழ். பல்கலைக்கழக இசைத்துறையிலிருந்து ஓய்வுபெற்ற முன்னால் துறைத்தலைவர்கள் மற்றும் விரிவுரையாளர்களிடம் பெற்ற தகவல்களை வைத்தும், ஆய்வாளரே தகவல் தருநராக இருக்கும் முறையைப் பயன்படுத்திக் கள ஆய்வாகவும், இவ் ஆய்வுக்குரிய ஏனைய சான்றுகளான இவ் ஆய்வு சார்ந்த நூல்கள், மலர்களினூடாகப் பெறப்பட்ட தகவல்களை வைத்து விபரண ஆய்வாகவும் இவ் ஆய்வு நகர்கின்றது. அடுத்த சில வருடங்களிலாவது இலங்கை அரச கல்விப் பாடத்திட்டத்தில் தரம் 6-11 வரை சைவசமயம் என்னும் பண்பாட்டு நூல் உள்ளதோ அதே போன்று தமிழர் போற்றும் அச் சிறப்பை வளர்க்கும் உன்னதமான பண்ணிசைக் கலையை மேம்படுத்தி எதிர்காலத்தில் நற்பிரஜைகளாக உருவாகப் பண்ணிசைப் பாடாந்தரம் அறிமுறை, செய்முறைப் பாடமாக உள்வாங்க வேண்டும். பாடத்திட்ட அறிஞர் குழுக்களால் இவை உடனடியாகச் செய்யப்பட வேண்டும் என்பதே தீர்வாக இனங் காணப்பட்டது. இதேபோல் தரம் 12-13 இலும் பண்ணிசை – அறிமுறை செய்முறைப் பாடவிதானங்களாக தகுந்த வளவாளர்களைக் கொண்டு கர்நாடக சங்கீதம் எவ்வாறு உள்ளதோ, அவ்வாறு செய்முறை, அறிமுறைப் பாடங்களைக் கொண்டுவர வேண்டும்.*

**திறவுச் சொற்கள்** – *பண்ணிசை, மாணவர், ஈழம், யாழ் பல்கலைக்கழக இராமநாதன் காண்பிய அரங்காற்றுக் கலைகள் பீடம், பட்டநெறி, பாடத்திட்டம்.*

# யாழ்ப்பாணப் பல்கலைக்கழக இசைத்துறை, வாத்திய இசைத்துறைப் பாடத்திட்டங்களில் தமிழிசையின் பங்கு

**ஜனனி நடேசமூர்த்தி**
*இசைத்துறை, SPRFVPA, யாழ்.பல்கலைக் கழகம், இலங்கை.*

**ஆய்வுச்சுருக்கம்:**

*ஈழத்துத் தமிழ் மக்களின் கலை பண்பாட்டு வளர்ச்சியில் மிகப்பெரிய தாக்கத்தையும் செல்வாக்கையும் கொண்டு விளங்குகின்ற யாழ்ப்பாணப் பல்கலைக்கழக சேர்.பொன்னம்பலம் இராமநாதன் காண்பிய அரங்காற்றுக் கலைகள் பீட இசைத்துறை மற்றும் வாத்திய இசைத்துறைப் பாடத்திட்டங்களில் தமிழிசையின் பங்கு எந்தளவில் உள்ளது என்று இவ்வாய்வு விளக்கி நிற்கின்றது. 1960 ஆம் ஆண்டு இராமநாதன் இசைக்கல்லூரி திரு.சு.நடேசபிள்ளை அவர்களால் ஆரம்பிக்கப்பட்டது. அன்றைய காலகட்டத்தில் அண்ணாமலை சர்வகலாசாலையிலும் சென்னை கர்நாடக சங்கீதக் கல்லூரியிலும் பயிற்றுவிக்கப்படும் இசைக் கல்விக்கு ஒப்பாக யாழ்ப்பாண இளைஞர்களுக்கும் பயிற்றுவிக்கப்படல் வேண்டும் என்ற நோக்கத்துடன் இராமநாதன் இசைக்கல்லூரியைச் சேர்ந்த பெரியோர்களால் சங்கீதரத்தினம் என்னும் பட்டப் படிப்பிற்கான பாடத்திட்டம் 1967 இல் உருவாக்கப்பட்டது. இந்த சங்கீதரத்தினம் படிப்பும் பட்டமும் அண்ணாமலை சர்வகலாசாலை சங்கீதபூஷணம் அல்லது சென்னை கர்நாடக சங்கீதக்கல்லூரி சங்கீதவித்வான் தரத்திற்குச் சமனாக அமைக்கப்பட்டது. 1968 இல் பண்ணிசையும், 1973 இல் நடனமும் அறிமுகப்படுத்தப்பட்டது. 1974 இல் இராமநாதன் இசைக் கல்லூரியை அரசாங்கம் பொறுப்பேற்றது. 1975 இல் இலங்கைப் பல்கலைக்கழகத்தின் யாழ் வளாகத்தினால் உள்வாங்கப்பட்டு இராமநாதன் நுண்கலைக்கழகம் என்ற பெயருடன் இயங்கத் தொடங்கியது. பல்கலைக்கழகத்துடன் இணைந்ததன் பின்னர் சங்கீதரத்தினம் பட்டத்திற்குப் பதிலாக, 1976 ஆம் ஆண்டு தொடக்கம் நான்கு வருடக் கற்கைநெறியின் பின்னர் இசைக்கலைமணி பட்டம் வழங்கியது. 1993 இலிருந்து சிறப்புப் பட்டப்படிப்புக் கற்கைநெறி ஆரம்பிக்கப்பட்டது. எனினும் இசைக்கலைமணி (டிப்ளோமா) கற்கைநெறியும் 2001ஆம் ஆண்டுவரை தொடர்ந்து நடாத்தப்பட்டு வந்தது. 2000 ஆம் ஆண்டில் சித்திரமும் வடிவமைப்பும் என்னும் கற்கைநெறியும் ஆரம்பிக்கப்பட்டது. இவ்வாறு வளர்த்து எடுக்கப்பட்ட இந்நிறுவனமானது 2022 ஆம் ஆண்டில் ஆறு துறைகளைக் கொண்ட ஒரு பீடமாகத் தரமுயர்த்தப்பட்டது. இந்நிறுவனம் ஆரம்ப காலத்திலிருந்து பல பாடத்திட்டங்களை உள்ளடக்கிச் சிறந்த மாணவர்களை உருவாக்கி வந்துள்ளது. வருகின்றது. இத்தகைய பாடத்திட்டங்களின் உள்ளடக்கங்களைப் பற்றி விரிவாக நோக்கும்போது இப்பாடத் திட்டங்களில் பெரும்பாலான பகுதிகள் சமஸ்கிருதம், தெலுங்கு, கன்னடம் போன்ற வேற்று மொழிகளிலேயே அமைந்துள்ளன. தமிழிசைக்கு மிகக்குறைந்தளவே இடமளிக்கப்பட்டுள்ளமை கண்கூடு. இவ்வாய்வானது கடந்தகாலங்களில் கற்பிக்கப்பட்ட பாடத்திட்டங்களிலிருந்து பெறப்பட்ட தகவல்களை அடிப்படையாகக் கொண்டும், ஆய்வாளரே தகவல் தருணராக இருந்து தகவல்களைத்திரட்டியதுடன் மாணவர்களுடனான கலந்துரையாடல்களிலிருந்து பெறப்பட்ட தகவல்களைக் கொண்டு விபரிப்புப் பகுப்பாய்வு முறையிலும், மற்றும் மாணவரை அவதானித்துக் கண்டறிதல் மூலம் பெற்ற அனுபவத்தைக் கொண்டு பகுப்பாய்வு முறையிலும் மேற்கொள்ளப்பட்டது. தாய் மொழியில் கற்ற பாடல்களையோ அல்லது அறிமுறைப்*

*பாடங்களையோ மிக இலகுவாகப் புரிந்து வெளிப்படுத்தும் திறனை மாணவர் கொண்டிருந்தமையையும், வேற்றுமொழிப் பாடல்களையோ அறிமுறைப் பகுதிகளையோ கற்கும் பொழுது பல இடர்ப்பாடுகளை எதிர்கொண்டமையையும் கள ஆய்வு மூலம் கண்டறியக் கூடியதாயுமிருந்தது. வேற்றுமொழிப்பாடல்களிலமைந்த பாடல்களைக் கற்கும்போது மாணவர்கள் ஒரு இயந்திரத்தைப் போலவே தாம் கற்ற பாடல்களை, மொழியையோ அவற்றின் சிறப்பையோ அறியாமலேயே அப்படியே ஒப்புவித்து வருகின்றனர். ஆனால் தமிழ்வாக்கேயகாரர்களால் இயற்றப்பட்ட பாடல்களை அதிகளவில் கற்று வந்தார்களாயிருந்தால் அவர்களின் கற்றல் செயற்பாடுகள் வினைத்திறன் மிக்கனவாய் அமையும். இவ்வாய்வானது தமிழிசையின் சிறப்பினை வெளிப்படுத்துவதுடன் மாணவர்க்கும், தமிழிசை ஆர்வலர்க்கும், தமிழிசை ஆய்வாளர்களுக்கும், பட்டக் கற்கைநெறிக்குரிய இசைப் பாடத்திட்டங்களைத் தயாரிப்போருக்கும் பயனுடையதாய் அமையும்.*

***திறவுச்சொற்கள்*** *- பாடத்திட்டம், நுண்கலைக்கழகம், கற்கைநெறி, தமிழிசை, நிறுவனம்.*

# ஆலய வழிபாட்டு மரபில் திருமுறை இசையின் சமகாலப் போக்கு

**சந்திரிகா சுஜித்குமார்**
*இசைத்துறை, SPRFVPA, யாழ்.பல்கலைக் கழகம், இலங்கை.*

**ஆய்வுச்சுருக்கம்**

*திருமுறைகள் சைவசமயத்தவர்களின் முதன்மையானதோர் பக்தி இலக்கியமாகும். இப்பாடல்கள் முறையான பண்ணோடு வழுவின்றி ஓதப்படும் போது சிறப்படைகின்றன. நாளும் இன்னிசை பாடி ஆன்மீக உணர்வை அடைந்து பேறு பெற்றவர்கள் பலர். அவர்களுள் சம்பந்தர், அப்பர்,சுந்தரர், மாணிக்கவாசகர் அருளிய திருமுறைகள், அருணகிரிநாதர் அருளிய திருப்புகழ், திருவருட்பேறு பெற்ற பெரியார்கள் அருளிய பாடல்களை முறைப்படி ஓதினால் அதற்குரிய பயன்களை அடையலாம் என துறை சார்ந்தவர்கள் கூறி வருகின்றார்கள். ஈழத்தில் திருமுறை ஓதுவோர் ஆலயங்களில் நியமிக்கப்படுவதில்லை. ஓதுவார்க்கு இருக்க வேண்டிய பண்புகள், திருமுறை ஓதுகின்றபோது கடைப்பிடிக்க வேண்டியவை என்பன சமகாலத்தில் பெரும் சவாலாகக் காணப்படுகின்றன. சைவசமயத்தவராகிய ஒவ்வொருவருக்கும் திருமுறை பற்றிய அறிவு அவசியம். தற்காலத்தில் இவ்விடயம் சார்ந்த சிந்தனைகள் இருப்பதில்லை எனலாம். திருமுறைகள் பக்தியின்றி கடமைக்காகவும் சில இடங்களில் இசைக்கப்படுகின்றதுடன் அதற்குரிய முறைகள் பின்பற்றப்படாமலும் பாடப்படுகின்றன. மரபுவழி பாரம்பரியமாக வகுக்கப்பட்ட பண் முறைகள் மாற்றிப் பாடப்படுகின்றன. திருமுறையின் நோக்கம் அதை ஓதுபவர்களால் நிறைவேற்றப்படவில்லை. இசை நிகழ்ச்சிகளில் பண்ணிசைக் கச்சேரிக்கு முக்கிய இடம் கொடுக்கப்படுவதில்லை. மாறாக தமிழகத்திலிருந்து திரையிசைப் பாடகர்கள் வரவழைக்கப்பட்டு அவர்களுக்கான நிகழ்வை ஆலயங்களில் நிகழ்த்துவது எதிர்காலத்தை கேள்விக்குறியாக்கியுள்ளது. அத்துடன் இளைஞர் மனங்களையும் தவறான பாதைக்கு இட்டுச் செல்கின்றது. திருமுறை இசையின் ஆன்மீக ஆழத்தினை அறியும் நோக்குடன் இவ் ஆய்வு மேற்கொள்ளப்படுகின்றது. இவ்விடயம் தொடர்பாக வரலாற்றுத் தரவுகளை முன்வைத்து இந்த ஆய்வு நகர்த்தப்படுவதுடன் விவரண, விமர்சன ஆய்வாகவும் முன்னெடுக்கப்படுகின்றன. திருமுறை ஓதுகின்றபோது அதற்கென வகுக்கப்பட்ட கட்டளைகளை யாரும் உணராதவர்களாய் காணப்படுகின்றமை இவ் ஆய்வின் சிக்கலாகக் காணப்படுகின்றது. திருமுறை ஓதுவார்களுக்கு இருக்கவேண்டிய ஒழுக்க விழுமியங்களையும், திருமுறை ஓதும் போது கவனத்தில் கொள்ளப்பட வேண்டிய விடயங்களையும் அறிந்து கொள்ளப் பயனுடையதாய் இவ் ஆய்வு அமையும். இவ்வாறாக ஆலய வழிபாட்டு மரபில் திருமுறை இசையின் சமகாலப்போக்கு என்னும் கருத்தியலின் அடிப்படையில் இந்த ஆய்வு மேற்கொள்ளப்படுகின்றது.*

**திறவுச் சொற்கள்** - *திருமுறை, இசை, ஓதுவார், ஆலயம், பண், சைவம், வழிபாடு*

# கர்நாடக இசையில் மனோதர்ம சங்கீதத்தில் மாணவர்கள் எதிர்கொள்ளும் பிரச்சினைகள்

**பரமேஸ்வரி கணேசகம்பர்**
*இசைத்துறை, SPRFVPA, யாழ்.பல்கலைக் கழகம், இலங்கை.*

**ஆய்வுச்சுருக்கம்**

*இசை என்பதற்கு 'இசைந்து வாழுதல்' என்றபொருள் உண்டு. இது ஒழுங்குபடுத்தப்பட்ட ஒரு அழகு ஒலியாகும். வடமொழியில் இதனை நாதம் என அழைப்பார். மனிதனையும் மற்ற உயிரினங்களையும் வசப்படுத்துகின்ற ஆற்றல் இசைக்குண்டு. இனம், மதம், மொழி எல்லாவற்றையும் தன்னகத்தேயடக்கி பண்பாட்டின் வெளிப்பாடாகவும் அமைந்துள்ள இசை, உலகெங்கும் பரந்து விரிந்து காணப்படுகிறது. ஓர் இனம் அந்நாட்டின் கலை, கலாசாரம் என்பவற்றை வளப்படுத்துவதன் மூலமே மேம்பாடடைகின்றது. அந்தவகையில் ஆதிகாலத்தில் மனிதன் இசை, நடனம் மூலமாகவே தனது மகிழ்ச்சியினை வெளிப்படுத்தினான். பின்னர் அனைத்து உணர்வுகளின் வெளிப்பாடாகவும் இசை விளங்கியமையைக் காணலாம். இறைவனையடைவதற்குரிய தோத்திரங்கள் அனைத்தும் இசைவடிவாகவே அமைந்துள்ளவை இசைக்கலையின் மேன்மையை மேலும் வலுப்படுத்துகின்றது. இசைக்கலையின் ஒரு பிரிவே கர்நாடக சங்கீதமாகும். இந்த இசையினை மனோதர்ம சங்கீதம், கல்பித சங்கீதம் என மேலும் இருபிரிவுகளாக்கலாம். ஆரம்ப பாடங்களான ஸ்வரவரிசை, ஜெண்டைவரிசை, மேல்ஸ்தாயி வரிசை, அலங்காரம், கீதம், வர்ணம் ஆகியவை கல்பித சங்கீதப் பிரிவில் அடங்குபவை. இராக ஆலாபனை, கற்பனை ஸ்வரம், நிரவல் ஆகிய பகுதிகள் மனோதர்ம சங்கீதப் பிரிவினுள் அடங்குபவை. இசைக் கலைஞர்கள் குரலிசையாலும் மற்றும் கருவிசையாலும் நமது கற்பனைத்திறனை இலட்சியம் தவறாது வெளிப்படுத்துவதையே மனோதர்ம சங்கீதம் என அழைக்கின்றோம். இத்தகைய மனோதர்ம சங்கீதத்தைக் கற்பதில் மாணவர்கள் எதிர்கொள்ளும் பிரச்சினைகளையும் அதற்கான தீர்வுகளையும் முன்வைக்கும் நோக்கமாகக் கொண்டு விவரண ஆய்வு முறையில் இவ்வாய்வு அமைந்துள்ளது. துறைசார்ந்த அறிமுறை நூல்கள், ஆய்வாளர் நேரடியாகக் கள ஆய்வின் மூலம் பெற்ற தரவுகள், ஆய்வாளரின் சொந்த அனுபவங்கள் என்பவை ஆய்வு மூலங்களாகப்பயன்படுத்தப்பட்டுள்ளன. இவ் ஆய்வின் பயனாக கர்நாடக சங்கீதத்தின் மேன்மையானது மனோதர்ம சங்கீதத்தின் மூலம் வெளிப்படுத்தப்படுத்தப்படுவதுடன் இவ் ஆய்வு இசை பயிலும் மாணவர்களுக்கும், ஆசிரியர்களுக்கும், இசைக்கருவிகளை பிரதான பாடமாகக் கற்போருக்கும், இசைப் பாடத்திட்டம் உருவாக்கத்தின்போதும் பயன் தரக் கூடியதாய் அமையும். நிரவல் செய்யப்பட வேண்டிய எடுப்பினை அவதானித்தல், நிரவலுக்குரிய பொருத்தமான இடத்தினைத் தெரிவு செய்தல், அனைத்து மத்திமகாலக் கிருதிகளும் நிரவல் செய்யப் பொருத்தமற்றவை என்பதை அறிதல், கிருதியின் பொருளைச் சிதைக்காது நிரவல் அமைத்தல் வேண்டும் போன்றன நிரவலுக்குரிய பரிந்துரைகளாகவும்; கற்பனை ஸ்வரத்தின் முடிவு ஸ்வரமும் கீர்த்தனையும் எடுப்பு ஸ்வரமும் பொருத்தமானதாக இருத்தல் வேண்டும் என்பதுடன் ஸ்வரம் பாடும் போது ¼, ½, ¾, 01, 1½, 02 என ஆவர்த்தனங்கள் என ஏறு வரிசையில் அமைத்தல் வேண்டும். பாடிய ஸ்வரங்களை மீண்டும் பாடுதல், மனனம் செய்து பாடுதல் என்பவை தவிர்க்கப்படுதல் போன்றன கற்பனை ஸ்வரத்திற்குரிய பரிந்துரைகளாகவும் முன்வைக்கப்பட்டுள்ளன.*

***திறவுச் சொற்கள்*** *- கேள்விஞானம், ஸ்வர ஞானம், மனோதர்ம சங்கீதம், சாதகப் பயிற்சி.*

# ஆலயங்களில் இசை

***ர.ராஜா***
*தமிழ்ப் பல்கலைக்கழகம், தஞ்சாவூர்*

***ஆய்வுச் சுருக்கம்***

*ஆயகலைகள் மொத்தம் அறுபத்து நான்கு என்பர். இந்த அறுபத்து நான்கினுள் இசைக்கலை மனிதனின் வாழ்க்கையோடு அமைந்த கலையாகத் திகழ்கிறது. இசை மனதிற்கு இன்பத்தையும், மகிழ்வையும் தருகிறது. இசையைப் பரப்ப மன்னர்கள், கவிஞர்கள் பெரும் பங்கு ஆற்றியுள்ளனர். இசைத்தமிழ் என்பது பண்ணொடு கலந்து, தாளத்தோடு கூடி இயங்கும் செந்தமிழ்ப் பாட்டுக்களாலும், தமிழ்ப் பாட்டுக்களாலும் இயன்ற இலக்கியங்களும், இலக்கணங்களும் ஆகும். அக்காலத்தில் மன்னர்கள் பல கோயில்களைக் கட்டி வைத்து அவற்றில் தினமும் பூசை நேரங்களில் இசையைப் பாட ஓதுவார்களையும், நடன மங்கையர்களையும் நியமித்து இசையை வளர்த்தனர். அவ்வாறு திகழும் ஆலயங்களின் வழிபாடுகள், வழிபாட்டின்போது நடைபெறும் சிறப்புப் பூசைகள், விழாக்கள் ஆகியவற்றில் இசையின் பங்கு அளப்பரியது. இவ் ஆய்வு சமகாலத்தில் ஆலய வழிபாட்டு முறையில் இசையின் வகிபங்கை ஆராயும் நோக்கில் கள அவதானிப்பை அடிப்படையாகக்கொண்டு பண்பு சார்அணுகுமுறையில் ஆராயப்பட்டது. கல்வியலாளர்கள், சமயம் சார்ந்தோர் மற்றும் ஆய்வாளர்கள் போன்றோருக்குப்பயனுடையதாக அமையும்.*

***திறவுச் சொற்கள்*** *– ஆய கலைகள், இசைத்தமிழ், ஓதுவார், வழிபாட்டுமுறை*

# பாரம்பரிய வில்லிசையும் ஈழத்தில் அதன் எதிர்கால இருப்பும்

**மதுராங்கி ஸ்ரீகந்தராசா**
*இசைத்துறை, SPRFVPA, யாழ்.பல்கலைக் கழகம், இலங்கை.*

**ஆய்வுச்சுருக்கம்**

*பாமர மக்களின் சிறந்த அழகியல் உணர்வுகளின் மையமாக விளங்குவது நாட்டுப்புறக் கலைகள் ஆகும். மக்களிடையே நீண்ட காலமாக வெவ்வேறுபட்ட நாட்டுப்புறக் கலைகள் வழக்கத்தில் இருந்த பொழுதிலும் பல கலைகள் வழக்கத்தில் இருந்து அழிந்து போயின. அதில் கிராமத்து மக்களாலும் நகர்ப்புற மக்களாலும் இன்று வரை ரசித்துப் பார்க்கக் கூடிய ஒரு கலையாக வில்லிசைக் கலை சிறப்புப் பெறுகின்றது. இது ஒரு தமிழர் பாரம்பரியக் கலையாகும். தென்னிந்தியாவில் புகழ் பெற்ற வில்லிசைக் கலையானது ஈழத்தில் தமிழர் வாழும் பல பகுதிகளிலும் நீண்ட காலமாக மக்கள் மத்தியில் சிறப்பாக நிகழ்த்தப்பட்ட கலையாகும். ஆனால் அண்மைக்காலமாக இக்கலையானது நலிவடைந்து கொண்டு செல்வதனைக் காண முடிந்தது. இன்று ஈழத்தில் பாடசாலைகள் மட்டத்தில் வில்லிசைக் கலையானது வளர்க்கப்பட்டு வருகின்ற போதிலும், மக்கள் மத்தியில் ஆரம்ப காலத்தில் இருந்த வரவேற்பினை இன்று பெறவில்லையென்றே கூறலாம். அதற்கான காரணங்களை ஆராயும் முகமாகவும் இக்கலையினை அடுத்த சந்ததியினருக்கு வழங்குவதற்கான எத்தகைய வழிமுறைகள் கையாளப்படுகின்றது பற்றியும் இந்த ஆய்வில் ஆராயப்படுகின்றது. கலை அடையாளங்களைப் பாதுகாக்க வேண்டுமானால் அக்கலைகளை அதன் பாரம்பரிய விழுமியங்களும், தனித்துவங்களும் மாறாமல் பாதுகாப்பதே சிறப்பாகும். காரணம் தற்காலத்தில் கலை மட்டும் அல்ல பல்வேறுபட்ட விடயங்களும் கால மாற்றங்களாலும், வெவ்வேறுபட்ட சூழ்நிலைகளாலும், மனிதர்களின் ரசனைகளாலும் மாற்றம் அடைகின்றன. அதேபோல் கலைகளின் வளர்ச்சியிலும் அந்நியக் கலைகளும் மேலைத்தேயப் பாரம்பரியங்களும் உள்ளீர்க்கப்பட்டுத் தாக்கங்களை ஏற்படுத்துகின்றன. பின்னர் ஒரு குறிப்பிட்ட காலகட்டத்தில் அவற்றின் பாரம்பரியத் தன்மையினை இழக்கின்றன. அவற்றிற்கான அடையாளங்கள் மாற்றி அமைக்கப்படுகின்றன. இவ்வாறாகப் பாரம்பரியக் கலைகள் நலிவடைந்து வருகின்றமையை அவதானிக்க முடிகின்றது. அந்த வகையில் இப் பாரம்பரிய வில்லிசையானது அண்மையில் எவ்வாறான சவால்களை எதிர்கொண்டு இன்று வரை நிகழ்த்தப்படுகின்றது? அக்கலையை மீண்டும் மக்கள் மத்தியில் கொண்டு செல்லக் கலைஞர்களால் எவ்வாறான முயற்சிகள் மேற்கொள்ளப்படுகின்றன? இதன் எதிர்காலம் எவ்வாறு அடுத்த சந்ததியினருக்கு கொண்டு செல்லப்படுகின்றது? என்பவற்றினை நோக்கமாகக் கொண்டு இந்த ஆய்வானது ஆராயப்படுகின்றது. இந்த ஆய்வானது வில்லிசை பற்றிய சமூகம் சார்ந்த தரவுகளை ஆராயும் பகுப்பாய்வாகவும், வில்லிசைக் கலைஞர்களின் நேர்காணல், பார்வையாளர்களின் அனுபவங்களையும் அவர்களது கருத்துக்களையும் அடிப்படையாகக் கொண்ட கள ஆய்வாகவும் ஆராயப்படுகிறது.*

**திறவுச் சொற்கள்** - *வில்லிசை, நாட்டுப்புறக் கலைகள், பண்பாடு, வளர்ச்சி, ரசனை*

# தமிழர் கலை கலாசார பண்பாட்டியலில் ஆலயஇசையும், சமகால சூழலின் இசையின் வகிபங்கும்.

**சுதாகரன் லோவிகரன்**
*மகாத்மாகாந்தி பல்கலைக்கழகம், திருபுணித்துரா*

**ஆய்வுச்சுருக்கம்**

*தமிழர் கலை கலாசார பண்பாட்டியலில் ஆலய இசையும், சமகால சூழலின் இசையின் வகிபங்கும் என்னும் தலைப்பினைக் கொண்ட இவ் ஆய்வுக் கட்டுரையானது இசை எவ்வாறு பிறந்தது? அத்தகைய இசை ஆலய இசையாக எவ்வாறு மாற்றம் பெற்றது? என்பது குறித்து ஆராயப்பட்டு, பண்டைய காலம் முதல் தற்காலம் வரை தமிழர்களின் வழிபாட்டு முறையில் இசையின் கட்டமைப்புகள் எவ்வாறு காணப்பட்டிருந்தன? இடைப்பட்ட காலங்களில் அரசாட்சிகளிலும், அரச வீழ்ச்சிகளிலும் எவ்வாறு மாற்றம் பெற்றுக் காணப்பட்டிருந்தன? போன்ற ஆய்வு வினாக்களுக்கு விடை அளிக்கும் வகையில் இது அமைகின்றது. இதற்கான தரவுகளை இலக்கியங்கள், கல்வெட்டுக்கள், ஆராய்ச்சிக் கட்டுரைகள் போன்றன மூலம் பெற்று, விபரண மற்றும் கள ஆய்வுக்குட்படுத்தப்பட்டுள்ளது. ஆலய இசையில் மனிதர்களுடைய அல்லது தமிழர்களுடைய எதிர்பார்ப்பு எத்தகைய அளவிற்கு காணப்படுகின்றது என்பது குறித்தும் இவ் ஆய்வு விளக்கியுள்ளது. அத்தோடு சமகாலச் சூழலில் இசையின் பரிணாமம் ஆலயத்தில் எந்த நிலையில் காணப்படுகின்றது என்பதனையும் ஆராய்வதாக அமைகின்றது.*

***திறவுச் சொற்கள்*** *- ஆலயஇசை, இசையின் வகிபங்கு, சமகாலச் சூழல், தமிழர் பண்பாடு*

# டிஜிட்டல் இசைச் சாதனங்களும் இசைக்கலைஞர்களுக்கான வாய்ப்புக்களும் சவால்களும்

**க.ஹம்ஸவதி**
*வாத்திய இசைத்துறை, SPRFVPA, யாழ்ப்பாண பல்கலைக்கழகம்*

**ஆய்வுச்சுருக்கம்**

*எண் மதிப்புக்களாக இசையைச் சேமிக்கும் ஓர் முறைமையே டிஜிட்டல் இசை ஆகும். இசையின் உற்பத்தி, விநியோகம், நுகர்வு (ரசிகர்களுக்கான தளங்கள்) என்பவற்றில் தொழில்நுட்பங்களை பயன்படுத்துவதை டிஜிட்டல் இசை குறித்து நிற்கின்றது. இசைக்கலைஞர்கள் எளிதில் மக்களோடு தொடர்புபடுவதற்கு ஓர் எளிய முறையாக டிஜிட்டல் தொழில் நுட்பம் காணப்படுகின்றது. இதனால் இசைக்கான பௌதிக ரீதியான தளம் ஒன்று தேவையில்லை என்ற நிலை உருவாக்கப்படுகின்றது. டிஜிட்டல் இசைச்சாதன வருகையால் பக்க வாத்தியக் கலைஞர்களுக்கான வாய்ப்புக்கள் இல்லாமல் போவதே இவ் ஆய்வின் பிரதான பிரச்சினையாக உள்ளது. கர்நாடக இசைக்கலைஞர்கள், கிராமிய மற்றும் பாரம்பரிய நாட்டார் இசைக்கலைஞர்கள், இசை ஆசிரியர்கள், மாணவர்களுடனான நேர்காணல், குழுக் கலந்துரையாடல்கள் மற்றும் இசை நிகழ்வுகளின் போதான நேரடி அவதானம் போன்றவற்றின் மூலம் ஆய்வுக்கான தரவுகள் சேகரிக்கப்பட்டுள்ளன. விபரண மற்றும் கள ஆய்வு முறைகளைப் பயன்படுத்தி இவ் ஆய்வு மேற்கொள்ளப்பட்டுள்ளது. இச் சவால்களை இனங்கண்டு அவற்றுக்கான பரிந்துரைகளை முன்வைப்பது இவ் ஆய்வின் பிரதான நோக்கமாகும். இத்தகைய பிரச்சனைகளை இனம் கண்டு அவற்றைத் தீர்ப்பதன் மூலம் பக்கவாத்தியக் கலைஞர்கள் தம்மை வளப்படுத்துவதன் மூலம் இசைக்கலைஞர்கள், கல்வியியளாலர்கள், ஆய்வாளர்கள் போன்றோர் பயன் பெறுவர்.*

***திறவுச்சொற்கள் -*** *டிஜிட்டல், இசை, வாத்தியங்கள், ஒலி, கோப்புக்கள் , கலைஞர்கள்*

# நாட்டார் பாடல்களின் கருத்தமைவில் மனிதனின் உளப்பாங்கு குறித்த சமகாலப் போக்கு: நுவரெலியா மாவட்டத்தின் கொட்டகலை பிரதேசத்தை அடிப்படையாகக் கொண்டது

**வினோதர்ஷினி. உ**
*மெய்யியல் மற்றும் உளவியல் துறை, யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம்*

**ஆய்வுச்சுருக்கம்**

*நாட்டார் பாடல்கள் மக்கள் வாழ்வியலோடு பின்னிப் பிணைந்தவை ஆகும். மனிதனின் பிறப்பு முதல் இறப்பு வரை வாழ்வின் ஒவ்வொரு கட்டத்திலும் நாட்டார் பாடல்களின் செல்வாக்குக் காணப்படுகின்றது. குறிப்பாக நாட்டார் பாடலானது பழமைவாய்ந்த பாடல்களாகவும் சிறப்புமிக்க பாடல்களாகவும் நோக்கப்படுகின்றது. குறிப்பாக இலங்கையிலும் நாட்டார் பாடல்களின் செல்வாக்கு மனிதர்களின் நடத்தையில் செல்வாக்குச் செலுத்துவதினைக் காணக்கூடியதாக உள்ளது. இதனடிப்படையில் நுவரெலியா மாவட்ட செயலகத்திற்கு உட்பட்ட கொட்டகலை பிரதேசத்திலும் நாட்டார் பாடலின் பரம்பலானது தாலாட்டுப் பாட்டு, கும்மிப் பாட்டு, ஒப்பாரிப் பாட்டு, நடைப்பாட்டு என பரிணமித்து காணப்பட்டதுடன் மக்களின் எளிமையான தேயிலைத் தோட்டத்தைச் சார்ந்த வாழ்வியலை வெளிப்படுத்துவதாகக் காணப்பட்டது. இதன் வெளிப்பாடு தற்காலத்திலும் வேலைக் களைப்பினைப் போக்குவதற்காக வாய்வழிப் பாடல்களாகப் பாடப்பட்டு வருகின்றது. அந்தவகையில் குறித்த பிரதேசத்தில் தமிழ் பேசும் 80 குடும்பங்கள் தெரிவு செய்யப்பட்டு ஆய்வு மேற்கொள்ளப்பட்டது. இவ்வாய்வானது குறித்த பிரதேசத்தில் நாட்டார் பாடலின் பரம்பல் தற்காலத்தில் கிராமத்தில் மற்றும் நகரத்தில் எவ்வாறு நோக்கப்படுகின்றது என்பதனைக் கண்டறிவதாகவும் நாட்டார் பாடல்கள் தற்காலத்தில் மனித நடத்தையில் எவ்வாறு செல்வாக்குச் செலுத்துகின்றன என்றும் எத்தகைய மாற்றத்தை மக்கள் மத்தியில் ஏற்படுத்தியுள்ளன மற்றும் நாட்டார் பாடல்கள் வலுவிழந்து செல்வதற்கான காரணங்களைக் கண்டறியும் பொருட்டு மேற்கொள்ளப்பட்டது. இதில் முதலாம் நிலைத்தரவுகளாக வினாக்கொத்து, நேர்காணல், அவதானித்தல் என்பனவும் இரண்டாம் நிலைத்தரவுகளாக ஆய்வு தொடர்பான ஆய்வுக் கட்டுரைகள், சஞ்சிகைகள், புத்தகங்கள் என்பனவும் பயன்படுத்தப்பட்டதுடன் பெறப்பட்ட தரவுகள் மற்றும் தகவல்கள் பகுப்பாய்வுக்குப் பயன்படுத்தப்பட்டுள்ளது. மேலும் குறித்த பிரதேசத்தில் நாட்டார் பாடல்கள் மனித நடத்தையில் செல்வாக்குச் செலுத்துவதுடன் உளவியல் ரீதியான மாற்றங்களை ஏற்படுத்துகின்றன. அதேசமயம் தொழில்நுட்ப வளர்ச்சியால் நாட்டார் பாடல்கள் வலுவிழந்து செல்லக்கூடிய அபாயநிலையில் காணப்படுகிறது என்பதையும் சமூகத்திற்கு அடையாளப்படுத்துவதாகவும் வருங்காலத்தில் இது தொடர்பான ஆய்வை மேற்கொள்வோருக்கு இலகுவாக அமையும் என்ற நோக்கத்தின் அடிப்படையிலும் இவ்வாய்வு முக்கியத்துவப்படுத்தப்படுகின்றது.*

**திறவுச் சொற்கள்** - *நாட்டார் பாடல்கள், உளப்பாங்குக் காரணிகள், தொழிநுட்ப வளர்ச்சி*

# Folk and Classical Dance

# பரதநாட்டியக் கற்றல் - கற்பித்தல் கவின்நிலையில் நவீன செல்நெறியின் செல்வாக்கு

**தர்ஷினி முத்துராஜா**
*கோப்பாய் ஆசிரியர் கலாசாலை, கோப்பாய், யாழ்ப்பாணம்.*

**ஆய்வுச் சுருக்கம்**

*காலத்திற்குக் காலம் கல்வித் தேவைகள் அதிகரிப்பதால் கல்வியில் மாற்றம் ஏற்படும் வேளையில் நவீன தொழில்நுட்ப முறைகளையும் விஞ்ஞான தொழில்நுட்பத்தையும் பயன்படுத்திக் கற்றல் - கற்பித்தல் செயற்பாட்டில் புதிய மாற்றங்களையும், புதிய நுட்பங்களையும் பயன்படுத்துதல் அவசியமாகின்றது. இவ்வாய்வானது தற்காலச் சூழலில் உருவாகும் முக்கிய பிரச்சினையொன்றிற்குத் தீர்வுகாணும் நோக்கில் முன்னெடுக்கப்பட்டுள்ளது. தொழில்நுட்ப சாதனங்களின் பற்றாக்குறை தற்கால தொழில்நுட்ப உலகிற்குப் பொருத்தமான மாணவர்களை உருவாக்குவதிலும் நவீன கற்றல் - கற்பித்தல் முறையியல்களைப் பிரயோகிப்பதிலும் பல பிரச்சினைகள் ஏற்படுத்தியுள்ளது. எனவே இவ்வாய்வானது தற்கால கற்றல் - கற்பித்தல் முறையியலில் காணப்படும் இப்பிரச்சினைக்குத் தீர்வு காணும் நோக்கில் முன்னெடுக்கப்பட்டுள்ளது. தொழில்நுட்ப சாதனங்களின் பற்றாக்குறை தற்கால தொழில்நுட்ப உலகிற்குப் பொருத்தமான மாணவர்களை உருவாக்குவதிலும் நவீன கற்றல் - கற்பித்தல் முறைகளைக் கையாள்வதிலும் பல பிரச்சினைகள் காணப்படுகின்றன. இப்பிரச்சினைகளுக்குத் தீர்வாக மேற்கொள்ளக்கூடிய வழிமுறைகளையும் ஆலோசனைகளையும் கண்டறிதல் இவ்வாய்வின் நோக்கமாகும். அந்த வகையில் யாழ்ப்பாணக் கல்வி வலயத்தின் கோப்பாய்க் கோட்டப் பாடசாலைகளை நோக்க மாதிரி அடிப்படையில் 6 - 1AB பாடசாலைகளையும் பரதநாட்டிய பாடத்தைக் கற்பிக்கும் இடைநிலைப்பிரிவு ஆசிரியர்களில் 6 ஆசிரியர்களும், மாணவர்கள் படையாக்கம் செய்யப்பட்டு 20 மாணவர்களும் மாதிரியாக ஆய்விற்கு உட்படுத்தப்பட்டுள்ளனர். ஆய்விற்கான தரவு சேகரித்தல் கருவிகளாக வினாக்கொத்து, நேர்காணல் படிவம் போன்றன பயன்படுத்தப்பட்டுள்ளன. இவற்றின் மூலமாக அளவுசார் மற்றும் பண்புசார் தகவல்கள் பெறப்பட்டு பொருத்தமான மென்பொருள் முறைகளினூடாக பகுப்பாய்வு, வியாக்கியானம், கலந்துரையாடல் போன்ற செயற்பாடுகள் உள்வாங்கப்படுவதுடன் பகுப்பாய்வின் மூலம் முடிவுகள் கண்டறியப்பட்டுள்ளன. ஆய்வுக் குடித்தொகையில் உள்ளடங்கும் மாணவர்களது பரதநாட்டிய அறிமுறை சார்ந்த கற்றல் கற்பித்தல் செயற்பாடுகளை அவதானிக்கும்போது மாணவர்களால் சரியான முறையில் பாடவிடயங்களை விளங்கிக் கொள்ள முடியாமை, பயம், பதகளிப்பு, மாணவர்களின் அறிவு, திறன், மனப்பாங்கில் தளர்வுநிலை காணப்படல், பாட ரீதியில் கற்றல் - கற்பித்தல் செயலொழுங்கு சரியான முறையில் அமையப்பெறாமை, மாணவர்கள் அறிமுறைசார்ந்த கற்றல் - கற்பித்தல் செயற்பாடுகளில் நாட்டமற்றுக் காணப்படல் போன்ற காரணங்கள் கற்றல் துணைச்சாதனப் பயன்பாட்டின் முக்கியத்துவத்தினை எடுத்துக் கூறுகின்றன. அதன் அடிப்படையில் தொழில்நுட்ப சாதனங்களின் பற்றாக்குறை நவீன கற்றல் - கற்பித்தல் செயற்பாடுகளில் பாரிய விளைவுகளைத் தோற்றுவிக்கிறன. மாணர்களின் கற்றல் செயற்பாட்டில் ஆர்வத்தினைக் குறைத்தல், மாணவர்களின் தேடிக் கற்றலுக்கான வாய்ப்பினைக் குறைத்தல், ஆசிரியர்கள் காலத்திற்குக் காலம் நவீன கற்பித்தல்சார் சாதனப் பயன்பாட்டை இற்றைப்படுத்தாமை, நேர முகாமைத்துவத்தைப்*

*பேணமுடியாமை, எனப் பல்வேறு சவால்கள் கண்டறியப்பட்டுள்ளன. அதன் அடிப்படையில் பாடசாலையில் கிடைக்கப்பெறும் குறைந்தளவிலான தொழில்நுட்ப சாதனங்களைப் பெற்று கற்றல் - கற்பித்தல் செயற்பாடுகளை முறையாக முன்னெடுப்பதற்கான விதப்புரைகளும் முன்வைக்கப்பட்டுள்ளன. இவ்வாறான சூழ்நிலையில் பாடசாலைகள் தம்மால் பெறக்கூடிய கற்றல் துணைச்சாதனங்களைப் பயன்படுத்துவது முக்கியமானதாகக் காணப்படுவதுடன் அதிபர், முகமைத்துவம், ஆசிரிய ஆலோசகர்கள், நடனபாட உதவிக் கல்விப் பணிப்பாளர்கள், கற்பித்தல் துணைச்சாதனப் பயன்பாடு தொடர்பான நிபுணர்கள் போன்றோர் மூலம் கற்பித்தல் துணைச்சாதனப் பயன்பாடு பற்றிய தெளிவைப் பெற்றுக்கொள்ள வேண்டியதும் அவசியமானதாகக் காணப்படுகிறது.*

**திறவுச் சொற்கள்** - *பரதநாட்டியம், கற்றல் - கற்பித்தல் செயற்பாடு, நவீன சாதனப்பயன்பாடு, அறிமுறை, கற்றல் கவின்நிலை, கற்பித்தல் கவின்நிலை*

# சமகால நிருத்திய நாடகங்களில் ஆண் பாத்திரங்களை ஏற்கும் ஆண் ஆற்றுகையாளர்கள் மிடுக்கான வெளிப்படுத்தல்களை வழங்குவதில் எதிர்கொள்ளும் இடர்பாடுகள்

**லிங்கராசா அனிருத்தன்**
*ஸ்ரீபாத தேசிய கல்வியியற் கல்லூரி, பத்தனை, இலங்கை.*

**ஆய்வுச் சுருக்கம்**

*பாரம்பரியக் கலை வடிவங்கள் நலிவுற்றுச் செல்லும் இன்றைய காலகட்டத்தில் செய்தி ஒன்றினை இரசனை உணர்வுடன் பார்வையாளர்களுக்கு எடுத்துச் செல்லும் ஊடகங்களிலொன்றாக நிருத்திய நாடகங்கள் விளங்குகின்றன. சமகால நிருத்திய நாடகங்களில் ஆண் பாத்திரங்களை ஏற்கும் ஆண் ஆற்றுகையாளர்கள் மிடுக்கான வெளிப்படுத்தல்களை வழங்குவதில் எதிர்கொள்ளும் இடர்பாடுகள் என்ற தலைப்பில் இந்த ஆய்வு அமைந்துள்ளது. நிருத்திய நாடகங்களில் ஆண் ஆற்றுகைக் கலைஞர்களால் ஏற்றுக் கொள்ளப்படும் ஆண் பாத்திரங்களின் இயைபுத் தன்மையற்ற பாத்திர வெளிப்பாடுகள் என்ற ஆய்வுப் பிரச்சினையை மையமாகக் கொண்டு மேற்கொள்ளப்பட்டுள்ள இந்த ஆய்வில் ஆண் கலைஞர்களின் பெண்மை சார்ந்த நளினமான இயல்புகளை வெளிப்படுத்துவதற்கான காரணங்கள் தொடர்பாக ஆராயப்பட்டுள்ளது. காத்திரமான நிருத்திய நாடக உருவாக்கத்திற்கு ஆண் ஆற்றுகையாளர்களில் பெண்மை சார்ந்து நளினத் தன்மையற்றதும் ஆண் பாத்திரங்களுக்குரிய மிடுக்குடன் துலங்கக்கூடியதுமான ஆண் ஆற்றுகையாளர்களை உருவாக்குதலை நோக்கமாகக் கொண்ட இந்த ஆய்வானது யாழ்ப்பாணத்தை ஆய்வுப் பிரதேசமாகக் கொண்டு அமைந்துள்ளது. இங்கு 2000 ஆம் ஆண்டிற்குப் பிற்பட்ட காலத்தில் ஆற்றுகை செய்யப்பட்ட நிருத்திய நாடகங்கள் ஆய்விற்காக எடுத்துக் கொள்ளப்பட்டுள்ளன. ஆண் ஆற்றுகையாளர்கள், நிருத்திய நாடக நெறியாளர்கள், நிருத்திய நாடக விமர்சகர்கள் மற்றும் நிருத்திய நாடகங்களுக்கு மத்தியஸ்தம் வகித்தவர்கள் மாதிரியெடுக்கப்பட்டு நேர்காணல் மற்றும் அவதானிப்பு மூலமான தரவுகள் பெறப்பட்டுள்ளன. இவை விவரண ஆய்வு முறையில் பகுப்பாய்விற்கு உட்படுத்தப்பட்டமையால் இது பண்புசார் அணுகுமுறையில் மேற்கொள்ளப்பட்டுள்ளது. பகுப்பாய்வுகளின் அடிப்படையில் குறித்த ஆய்வு தொடர்பான பிரச்சினைகளும் அதற்கான காரணங்களும் கண்டறியப்பட்டுள்ளன. இதன் அடிப்படையில் ஆண் ஆற்றுகையாளர்கள் சார்பில் 'ஆண்மை' தொடர்பான விழிப்புணர்வு மற்றும் ஆண்மைக்குப் பொருத்தமான ஆற்றுகை முறைகளைப் பின்பற்றுவது தொடர்பாகவும் நெறியாளர்கள் சார்பில் தனித்துவமான அணுகு முறைகளைக் கையாள்தல், உடல் உளரீதியான விழிப்புணர்வுகளை வழங்குதல் மற்றும் பாத்திரத் தெரிவுகளில் பக்கச் சார்பற்றவர்களாகவும் பல்துறை சார்ந்த நுட்பங்களைக் கொண்டவர்களாகவும் ஒவ்வொரு சந்தர்ப்பங்களிலும் தனித்துவமான வசதிகளைச் செய்து கொடுத்தல் போன்ற உத்திகளால் இந்த ஆய்வுப் பிரச்சினைக்குத் தீர்வுகாண இயலும். இதனூடாகச் சமூகத்தில் செழுமையான நிருத்திய நாடகக் கலாசாரத்தினைக் கட்டியெழுப்ப முடியும் என்ற விதப்புரைகள் வழங்கப்பட்டுள்ளன.*

**திறவுச் சொற்கள்** - *நிருத்திய நாடகங்கள், ஆண் பாத்திரங்கள், ஆண் ஆற்றுகையாளர்கள்;, மிடுக்கு, பெண்மைசார் நளினத்தன்மை.*

# The Evolution and Significance of *Baanis* in Bharatanatyam

**Dr. Sakura Asangika Senaviratne, Dr. Pavithra Madubashini Abeynayake**
*Faculty of Dance and Drama, Department of Indian and Asian Dance*
*University of the Visual Arts and Performing Arts*

**Abstract**

This study explores the evolution and significance of *Baanis* in Bharatanatyam, a classical dance form from India. *Baanis,* or stylistic schools, play a pivotal role in shaping Bharatanatyam's repertoire, techniques, and aesthetics, each reflecting distinct regional diversity, historical influences, and creative innovations. The research problem centers on understanding how these stylistic variations have developed and their impact on the continuity and transformation of art forms. This study uses a historical and analytical research design to examine key *Baanis* such as the Tanjavur Quartet's structured compositions and Vazhuvur's narrative richness. Through a review of historical documents, dance literature, and interviews with practitioners, the study analyzes the factors contributing to the evolution of *Baanis*, including migration, patronage, and social change. The findings reveal that each *Baani* offers a unique artistic perspective, serving as an instructional framework and source of individual expression for dancers. The study underscores the role of *Baanis* as custodians of classical heritage while highlighting their adaptability to contemporary context, thus bridging tradition and innovation. Reflecting broader social and national needs, the research emphasizes the importance of preserving these stylistic schools to maintain cultural diversity and promote artistic creativity. By documenting and analyzing the evolution of *Baanis*, this study provides valuable insights for dancers, educators, and cultural historians, fostering a deeper understanding of Bharatanatyam's rich heritage and its dynamic evolution in response to the changing socio-cultural landscape.

**Keywords**: Artistic Evolution, Bharathanatyam, *Baanis*, Cultural Heritage, Stylistic School

# தற்காலத்தில் ஆலயங்களில் நடனக்கலை – ஓர் ஆய்வு.

**சீதாலக்ஷ்மி பிரபாகரன்**
*நடனத்துறை, யாழ்ப்பாணப்பல்கலைக்கழகம்.*

**ஆய்வுச்சுருக்கம்**

*ஆலயங்கள் கலைகளின் நிறைவடிவமாகும். ஆலயங்கள் வாயிலாகக் கலை வடிவங்கள் பண்டைய காலம் தொட்டு இன்றுவரை வளர்ந்து வருகின்றன. கலைகள் அனைத்தும் ஏதோ ஒரு வகையில் இறைவனுடன் தொடர்புபடுகின்றன. ஆலய வழிபாட்டு முறைகளில் சமயம், தத்துவம், கலைகள் எனும் மூன்றும் இழையோடி உள்ளதும் குறிப்பிடத்தக்கதாகும். இக்கலைகள் தெய்வீக அம்சம் நிறைந்து காணப்படுகின்றன. கலைகள் ஒவ்வொன்றும் ஆலயங்களினூடாக வெளிப்படுத்தப்படுகின்றன. ஒரு மனிதனின் அனைத்து உறுப்புக்களின் செயற்பாடும் ஆற்றுகைக் கலைகளில் ஒன்றான நடனக்கலையில் காணப்படுகின்றது. இந்நடனக்கலை உலகெங்கிலும் உள்ள இந்து ஆலய வழிபாட்டில் நடைபெற்று வருவது கண்கூடு. அந்தவகையில் தற்காலத்தில் ஆலய வழிபாட்டு முறைகளில் நடனக்கலை வெளிப்படுத்தப்படும் வகையினை நோக்குவதாகவே இவ்வாய்வு அமைகின்றது. இந்நடன ஆற்றுகைகள் ஆலயங்களில் சாஸ்திர ஒழுங்கு முறைகளுக்கேற்ப ஆற்றுகைப்படுத்தப்படுகின்றதா என்பதை கண்டறிதலே இவ்வாய்விற்குரிய பிரச்சினையாக முன் வைக்கப்படுகின்றது. யாழ்ப்பாணத்தில் உள்ள ஆலயங்களை ஆய்வின் எல்லையாகக் கொண்டு இவ்வாய்வு மேற்கொள்ளப்படுகிறது. இவ்வாய்வில் ஆலயங்களில் இடம்பெறும் நடனங்களைக் கண்டறியவும், அந்நடனங்கள் நிகழும் சந்தர்ப்பங்களை வெளிக்கொணரவும், மற்றும் யாழ்ப்பாணத்தில் எவ்வெவ் ஆலயங்களில் நடனங்கள் நிகழ்கின்றன என்பதை அறிய கள ஆய்வு, விபரண ஆய்வு மற்றும் பகுப்பாய்வு போன்றவை ஆய்வு முறையியல்களாகப் பயன்படுத்தப்பட்டுள்ளன. ஆலயங்களில் நடைபெறும் இந்நடனங்கள் சாஸ்திர நூல்களுக்கு அமைவாக வெளிப்படுத்தப்படுகின்றனவா என்பதைக் கண்டறிவதும், நடனங்கள் ஆலயங்களில் எச்சந்தர்ப்பங்களில் நடைபெறுகின்றன என்பதையும் அறிவதில் இவ்வாய்வு கவனம் செலுத்துகின்றது. இதற்கு மூலங்களாக நாட்டியசாஸ்திரம், காமிகாகமம் முதலான நூல்கள் துணைபுரிகின்றன. இவ்வாய்வு ஆலயங்களில் நடனங்கள் முன்னைய காலங்களில் நடந்தன என்பதை சான்றுகளுடன் வெளிப்படுத்துவதாகவும், நடனம் ஆலயங்களில் நடைபெறாத பட்சத்தில் அவற்றை மீண்டும் நடைமுறைப்படுத்தும் வகையை வெளிப்படுத்துவதாகவும் அமைகின்றது. சாஸ்திரிய நடனம் சார்ந்த மரபுகளும், கிராமிய ஆடல் சார்ந்த மரபுகளும் ஆற்றுகைப்படுத்தப்படும் தன்மையைக் கண்டறிந்து வெளிக்கொணரும் ஆய்வாகவும் காணப்படுகின்றது.*

**திறவுச்சொற்கள்** - *ஆலயம், தெய்வீகம், சாஸ்திரியம், நடனம், கிராமியஆடல்.*

# தமிழர் ஆடற் கலை: ஈழத்து சமூகப் பண்பாட்டு நோக்கு

**முனைவர் அ. கிருபைராஜா**
*நடனத் துறை, யாழ்ப்பாணப்பல்கலைக்கழகம்*

**ஆய்வுச்சுருக்கம்**

*ஒரு நாட்டின் மொழி எவ்வளவு தொன்மை வாய்ந்ததோ அதேபோன்று அந் நாட்டின் கலைகளும் தொன்மை வாய்ந்தவை ஆகும். இக்கலை வடிவங்கள் அந்தந்தச் சமுதாயத்தின் நாகரிகம் மற்றும் பண்பாடோடும் இணைந்தவை ஆகும். ஒரு நாட்டினுடைய பண்பாடு மூலவேர்களை அறிந்து கொள்வதற்கு அந்நாட்டின் கலைப்பாரம்பரியம் உறுதுணை புரிகின்றது என்றால் அது மிகையாகாது. இந்த ரீதியில் ஈழத்துத் தமிழ் மக்களுடைய பண்பாட்டுப் பழக்கவழக்கங்களையும் பண்பாட்டு அம்சங்களையும் விளங்கிக் கொள்வதற்காக தமிழ்ப் பிரதேசங்களில் வழங்கி வந்த தமிழர் கலைப்பாரம்பரியங்களை ஆராய்வது இக்கட்டுரையின் நோக்கமாகும். வரலாற்றுத் தேவை நோக்கி நமது நாட்டிலுள்ள இனக்குழு மக்களின் தனித்துவமான மரபுவழி அடையாளங்கள், பண்பாட்டுப் பெறுமானங்கள் அவற்றினூடாகத் துல்லியப்படும் அடையாளங்கள் என்பனவற்றைக் கொள்ளக்கூடியதாக எமக்கென ஒரு சாஸ்திரிய ஆடல் வடிவம் செயற்படுத்தப்பட வேண்டும். இந் நிலையில் எமது தனித்துவமான கலாசாரத்திற்குரிய குறியீடுகள் உள்ளனவா? இருந்தால் அவை எவை? அதன் அடையாளங்களை எப்படித் துல்லியப்படுத்துவது? அல்லது எதற்கூடாகத் துல்லியப்படுத்துவது? போன்ற வினாக்கள் ஈழத்தமிழரை நோக்கி எழுகின்றது. இந்த வினாக்களுக்கு விடை தேட முற்படும்போது குறிப்பிட்ட இனக்குழுமத்தின் மத்தியில் உள்ள கலை வடிவங்களுக்கூடாகத்தான் துல்லியப்படுத்த முடியும். வடமொழி ஆடற்கலை ஈழத்தமிழருக்குரிய ஆடல் வடிவமில்லை என்பதே இங்கு ஆய்வுப் பிரச்சினையாக முன்வைக்கப்படுகிறது. ஈழத் தமிழர் தமக்கெனக் கலை பண்பாட்டுப் புலங்களிலும் தமக்கான தனித்துவமான தமிழ் ஆடல் அடையாளம் இருப்பதைத் தக்க வைத்துக் கொண்டுள்ளார்கள் என்பதே இவ்வாய்வின் கருதுகோளாகும். ஈழத் தமிழ்ச் சூழலில் உருவான கலைவடிவங்களில் எஞ்சியுள்ள ஆடற் கோலங்களை மீட்டெடுக்க வேண்டியவர்களாகவும் இதனை ஆற்றுகை, அறிகை, ஆய்வுப் புலமை நிலையில் விரிவாக்கம் செய்ய வேண்டிய நிலையில் இருக்கும்போது, தமிழ் ஆடற்கலை என்பதை தமிழ் மரபுடனும் தமிழர் வாழ்வுடனும் இணைத்துச் சித்திரிக்கும் மரபைத் தொலைத்து, பொது வெளியைக் கட்டமைத்து, நாட்டார் நடனங்கள் என்ற பெரும் தளத்திலிருந்துதான் கற்கைநெறி முறைப்பட்ட நடனங்கள் சாஸ்திரிய நடனங்களாக முகிழ்ந்து எழுந்தன என்பதையும் மறந்து, இடைக்காலத்தில் வளர்ச்சியுற்ற வரன் முறையான கல்விச் செயற்பாடுகள் நாட்டார் மரபுகளையும் கலை வடிவங்களையும் தமது வீச்சுக்குள் கொண்டுவரத் தவறி விட்டனர். படித்த மேட்டுக்குடி மனப்பாங்கு சார்ந்த கலை வடிவமாக வடமொழி ஆடற்கலையை நோக்கும் மனநிலையிலிருந்து முதலில் விடுபட வேண்டும். சாதாரண கிராமப்புற விளிம்புநிலை மக்களின் கலையாகவும் தமிழ் ஆடற்கலையை மீட்டெடுப்பது அவசியம். சமகாலத்தில் நாட்டார் கலைகள், கிராமப்புறக் கலைகள் குறித்த புதிய மடை மாற்றம் செய்யப்படுதலும், இலக்கிய மீள்வாசிப்புகளும் புதிய நோக்கு நிலைகளில் பல் பரிமாண நிலையில் வளர்ந்து வருவதனையும், நாட்டார் ஆடல் பற்றிய சிந்தனைகளும் விழிப்புணர்வும் ஈழத் தமிழ்ச் சூழலில் தமிழர் ஆடல்கள் பதிவு பற்றிய தேடுகைக்கான ஆய்வுக் களத்தைத் திறந்துவிட இவ்வாய்வுக் கட்டுரை பயனளிக்கும்.*

**திறவுச் சொற்கள்** - *தமிழ் ஆடற்கலை, ஈழத்தமிழ், தமிழ்க் கலைவடிவம், ஈழத்து நாட்டார் ஆடல்கள்*

# நடன நோக்கில் மட்டக்களப்பில் சடங்குக்காக ஆற்றுகை செய்யப்படும் கரகாட்டம்

**பொடிமாத்தையா வேணுகா**
*கிழக்குப் பல்கலைக்கழகம், இலங்கை*

**ஆய்வுச்சுருக்கம்**

*ஈழத்திருநாட்டில் மட்டக்களப்பு மாவட்டத்திலுள்ள தமிழ் மக்கள் தங்களது வாழ்க்கையில் தொன்று தொட்டுப் பல கலை, கலாசார பாரம்பரிய மரபுகளைத் தம்மகத்தே கொண்டு வாழ்ந்து வருகின்றனர். சடங்குகள் மட்டக்களப்பு மக்கள் வாழ்வில் முக்கியமானதொரு சமூக, சமய நிகழ்வாக நோக்கப்படுகின்றன. சமூகங்கள் காலத்திற்குக் காலம் சமூக வளர்ச்சியில் மாற்றங்களைப் பெற்று வளர்ச்சியடைந்து நாகரிக சமூகங்களாக மேம்பட்டுக்கொண்டாலும் சமூகங்களில் நிலைகொண்டுள்ள சடங்குகளுடன் தொடர்புடைய ஆடல்கள் பல உயிர்ப்பான அம்சங்களை உள்ளடக்கிய வடிவங்களாகத் தொழிற்படுகின்றன. அந்தவகையில் இந்த ஆய்வு மட்டக்களப்பில் சடங்குக்காக ஆற்றுகை செய்யப்படும் கரகாட்டம் தொடர்பாக ஆராய முற்படுகின்றது. மட்டக்களப்பில் சடங்குக்காக ஆற்றுகை செய்யப்படும் ஆடல் வடிவங்கள் பற்றி நாடக ஆய்வாளர்களினால் நாடகம் சார் நோக்கிலே ஆய்வுகள் செய்யப்பட்டுள்ளன. நடனம் சார் நோக்குடன் இவை ஆய்வுக்கு உட்படுத்தப்படவில்லை. இவற்றை அந் நோக்குடன் ஆய்வு செய்கின்ற போது கரகாட்டதின் ஆட்டக் கோலங்கள் எவ்வகைப்பட்டன, இவற்றின் அழகியல் என்ன? இக் கலை வடிவங்கள் தமிழ் மக்களின் வரலாற்றோடு எவ்வாறு முக்கியம் பெறுகின்றன என்பன பற்றியெல்லாம் அறியமுடியும். சமகாலத்தில் மட்டக்களப்பு சமூகத்தில் நிகழ்த்தப்படும் சடங்குகள் பற்றிய அவதானிப்புக்களை அடிப்படையாகக் கொண்டு ஆய்வு முடிவுகள் முன்மொழியப்பட்டுள்ளன. இதன் மூலம் கரகத்தின் அழகியல் மரபின் இடையறாத் தொடர்ச்சியும் அவற்றின் இயல்புகளும் விவாதிக்கப்பட்டு எடுத்துரைக்கப்பட்டுள்ளன. இது ஒரு பண்புசார், விபரண ஆய்வாக அமைந்துள்ளது. மட்டக்களப்புப் பிரதேசச் சடங்கு தொடர்பான நேரடி அவதானிப்புத் தகவல் வழங்கிகளினூடாகவும் குழுநிலைக் கலந்துரையாடல் என்பன தகவல்களை உறுதிப்படுத்த ஆய்வுக் கருவிகளாகப் பயன்படுத்தப்பட்டுள்ளன. பண்புசார் அடிப்படையில் முடிவுகள் பெற்றுக் கொள்ளப்பட்டுள்ளதுடன் பரிந்துரைகளும் முன்வைக்கப்பட்டுள்ளன. தமிழர் பாரம்பரியத்தில் சடங்குகள் காலம் காலங்காலமாகக் கரகத்தில் ஒரு அழகியல் மரபு பேணப்பட்டு வந்துள்ளது என்பது ஆய்வின் மூலம் உறுதிப்படுத்தப்பட்டுள்ளது. பாரம்பரியக் கலைகள் வயோதிபர் மத்தியில்தான் காணப்படுகிறன. இதற்கான பதிப்புகள் போதிய அளவில் இல்லை. இன்றைய காலகட்டத்தில் சடங்கு சம்பிரதாயங்கள் மறைந்து கொண்டிருப்பதால் கிராமிய நடனங்கள் ஆங்காங்கே சிதறிக் கிடப்பதைக் காணக் கூடியதாக இருப்பது என்பது வருந்தத்தக்க விடயமாகும். எனவே இவ்வாய்வு சடங்குகள் தொடர்பாக இதுவரை காலமும் செய்யப்பட்ட ஆய்வு முறைமைகளில் இருந்து வேறுபட்டுக் கரக ஆட்டத்தை நடனம் சார்ந்த நோக்கில் ஒரு சடங்கியல் ஆய்வாக வேறுதளத்திற்குக் கொண்டு சென்றுள்ளது.*

***திறவுச் சொற்கள் -*** *சடங்குகள், பாரம்பரியம், சமூகம், கரகாட்டம், மட்டக்களப்பு*

# தமிழர் பேயாடல் நடன மரபும் சமூக உறவும்: காப்பிய, திருப்பதிக இலக்கியங்களினூடான ஆய்வு.

**யோகநாதன் துஷாந்தினி**
*கிழக்குப் பல்கலைக்கழகம்,இலங்கை.*

**ஆய்வுச்சுருக்கம்**

*மிருகவின வளர்ச்சியின் உயர் மட்டத்தில் மனித இனமும் அம்மனித இனத்தின் உழைப்பின் தொடர்ச்சியில் அவனது சிந்தனை வளர்ச்சியும், பேச்சும் சீராக்கப்பட்டது. காலப்போக்கில் அவற்றிலிருந்து மனிதக் குழுக்களுக்கான தனித்துவ மொழிகளும், அக்குழுக்களின் நம்பிக்கைகளிலிருந்து சடங்குகளும், அதனோடு தொடர்புடைய கலை வடிவங்களும் தோன்றின. அக்கலை வடிவங்களுள் தென்னிந்திய தமிழ்ச் சமூகத்துள் நிலவிய பேயாடல் எனும் நடன வடிவமும் ஒன்றாகும். தாய்வழிச் சமூகத்தில் தோன்றிய தாய்த்தெய்வ வழிபாட்டை அடிப்படையாகவுடைய இப்பேயாடல் நடன வடிவானது தென்னிந்திய வரலாற்றுக் காலகட்டங்களில் வெவ்வேறு மாற்றங்களுக்கு உள்ளாகியிருக்கிறது. பேயாடல் என்பது மனிதரால் ஆற்றுகை செய்யப்படும் ஒரு நடன வடிவின் பெயராக அமையாமல் பேய்களால் நிகழ்த்தப்படும் ஆடல் ஆற்றுகை பற்றியதாகவே அமைகிறது. இது மனிதக் குழுக்களின் இறப்பு மீதான நம்பிக்கைகளின் அடிப்படையிலிருந்து புனையப்படுகிறது. இப்பேயாடல் சார்பான புனைவுக் கதைகள் காலத்துக்குக் காலம் மாற்றமடைந்து வந்திருக்கின்றமை கண்கூடு. பேய்கள், பேய்மகள், பேய் பற்றிய நம்பிக்கைகள் மீதான நோக்குநிலை ஆய்வுகள் பல வெளிவந்தபோதும் கி.பி.3ஆம் நூற்றாண்டிலிருந்து கி.பி.9ஆம் நூற்றாண்டு வரையாக இடம்பெற்றுள்ள பேயாடல் மாற்றங்கள் எவையென்பதும், அம்மாற்றங்களில் சமூக உற்பத்தி உறவுக்குள்ள தொடர்பு என்னவென்பதும், உற்பத்தி உறவு மாற்றங்களினூடு இவ்வாடல் மாற்றங்களை எவ்வாறு நோக்கலாம் என்பதும் இன்றுவரை பகுத்தாய்வு செய்யப்படாத பகுதியாய் அமைகிறது. இவ்வாறு மேற்குறிப்பிடப்பட்டுள்ள காலத்துக்குட்பட்டு எழுந்த இலக்கியங்கள் கூறும் பேயாடல் செய்திகள் அவை சார்ந்த சமூக பொருளாதார பின்புலத்தினூடு நோக்கப்படாமலும், ஆராயப்படாமலும் இருக்கின்றமையினை ஆய்வுப் பிரச்சினையாகக் கொண்டுள்ள இவ்வாய்வு இக்காலப்பகுதியில் எழுந்த பேயாடல் மாற்றங்களை இனங்கண்டு, அவற்றுக்கும் அக்காலச் சமூகத்துக்கும் இடையிலான தொடர்பினை வெளிப்படுத்தும் நோக்கில் பதிக இலக்கியமான திருவாலங்காட்டு மூத்த திருப்பதிகமும், காப்பிய இலக்கியமான மணிமேகலையும் கூறும் பேயாடல் செய்திகளைப் பண்புசார்முறை, விபரணப் பகுப்பாய்வு முறைகளூடு அணுகுகிறது. இதனூடாகப் பேயாடல் தொடர்பான நம்பிக்கைகளையும், அதன் மீதான புனைவுக்கதைகளையும், அவ்வுருவாக்கத்துக்கான சமூகப் பின்புலங்களையும், சமூக அடிக்கட்டுமானத்திலிருந்து சமூக மேற்கட்டுமானமாக விளங்கிய பேயாடல் பற்றிய கலைக் கருத்துக்களின் மாற்றங்களை அறியும் வகையையும் கண்டு கொள்ளக் கூடியதாக அமையும் இக்கட்டுரை இனிவரும் காலங்களில் வரலாற்று ரீதியிலான நடனாம்ச மாற்றங்களைக் கற்கும் கலைஞர்களுக்கும், ஆய்வாளர்களுக்கும் ஒவ்வொரு காலகட்டத்திலும் மறுமலர்ச்சியடைந்தோ, நலிவடைந்தோ சென்ற நடனாம்சங்களை அவற்றின் பொருளாதார அடிக்கட்டுமானத்தினூடு நோக்கும் விதத்தினை அறிந்துகொள்வதற்கும், இதற்கு முற்பட்ட, பிற்பட்ட காலங்களின் நாட்டிய மாற்றங்களை அவைசார்ந்த சமூக உற்பத்தி உறவுகளின் மாற்றங்களோடு ஒப்பீட்டாராய்வு செய்வதற்கும் முன்னோடியாக அமையுமெனலாம்.*

**திறவுச் சொற்கள் -** *மணிமேகலை, திருப்பதிகம், பேயாடல், பேய்மகள், சடங்குகள்*

# நவீன தொழில்நுட்ப சாதனங்களைப் பயன்படுத்தி நடன பாடம் கற்பிக்கும் திறனை மேம்படுத்தல்

**சுபாதினி சத்தியேந்தரம்பிள்ளை, S.R.சத்தியேந்தரம்பிள்ளை**
*யாழ்ப்பாணம் தேசிய கல்வியியற் கல்லூரி*

**ஆய்வுச்சுருக்கம்**

*இலத்திரனியல் கற்பித்தல் சாதனங்களைப் பயன்படுத்தும் திறனை மேம்படுத்தல் என்ற இவ்வாய்வில் தேசிய கல்வியற் கல்லூரி 2ஆம் வருட நடனத்துறை ஆசிரிய மாணவர்களே ஆய்விற்கு உட்படுத்தப்பட்டுள்ளனர். கற்பித்தல் சாதனங்கள் பற்றிய கோட்பாட்டறிவு ஆசிரிய மாணவர்களிடம் எந்தளவு காணப்படுகின்றது, இலத்திரனியல் கற்பித்தல் உபகரணங்களைக் கையாளுவதில் மாணவர்கள் எவ்வகையான இடர்களை எதிர்கொள்கின்றார்கள்?, இந்த இடர்பாடுகளைத் தீர்த்து முன்னேற்றத்தை ஏற்படுத்துவதற்காக மேற்கொள்ளக்கூடிய நடவடிக்கைகள் யாவை என்பன இவ்வாய்வு வினாக்களாக அமைகின்றன. இவ்வாய்வு ஒரு செயல் நிலை ஆய்வாகும். கற்பித்தல் சாதனங்களைப் பயன்படுத்தும் திறன்கள் தொடர்பான கோட்பாடுகளும் எண்ணக்கருக்களும் இவ்வாய்வில் அறிமுகம் செய்யப்பட்டுள்ளன. இவ்வாய்வு இது தொடர்பாக முன்னெழுந்த ஆய்வுகளின் ஆய்வுக்களம், ஆய்வுமாதிரி, ஆய்வுக்கருவி, பகுப்பாய்வு முறை என்பனவற்றிலிருந்து வேறுபட்ட அணுகுமுறையைக் கொண்டுள்ளது. அத்தோடு இலக்குக் குடித்தொகையாக யாழ்ப்பாணத் தேசிய கல்வியற் கல்லூரி 2ஆம் வருட நடனத்துறை முகிழ்நிலை ஆசிரிய மாணவர்கள் பத்துப் பேர் உள்ளடக்கப்படுகின்றனர். தரவுகள் சேகரிப்பதற்காகச் செயன்முறைத் திறன் சோதனை வினாக்கொத்து, அவதானிப்பு, கலந்துரையாடல் போன்ற தரவு சேகரிப்பு நுட்பங்களும் தரவுப் பகுப்பாய்வில் நூற்றுவீதம் வரைபுகள் மூலமான ஒப்பீடு, தரவு அளவுச் சட்டம் என்பனவும் பயன்படுத்தப்பட்டுள்ளன. இவ்வாய்வை மேற்கொண்டதன் கண்டறிதல்களாகப் புதிய மாற்றங்கள் தொழில்நுட்பம் பற்றிய அறிவு குறைவாக உள்ளமை, நடனபாடச் செய்முறை அலகுகளிற்கு இலத்திரனியல் சாதனங்களைப் பயன்படுத்தும் நாட்டமின்மைக்கு ஆசிரியர் கற்பித்தல் சாதனங்களைப் பயன்படுத்திக் கற்காமையும் காரணியாக இருந்துள்ளது. இவ்வாய்வின் பெறுபேறுகளாக எதிர்கால ஆய்வாளர்களுக்கான விதப்புரைகள் முன்வைக்கப்பட்டுள்ளன. இவ்வாய்வுக் காலத்தில் ஆய்வாளர் தனது கற்றல் கற்பித்தல் செயற்பாட்டை மேற்கொள்ள வேண்டியிருந்தமை, பாடவேளை நேரம் தவிர்ந்த ஏனைய வேளைகளில் ஆய்வு தொடர்பாக ஆசிரிய மாணவர்களிடம் ஒத்துழைப்புக் காணப்படாமை, கற்பித்தல் சாதனங்களின் OHP மற்றும் கணனி மட்டும் பயன்படுத்தல் என்பன இவ்வாய்வின் பிரதான மட்டுப்பாடுகளாக அமைந்திருந்தன. எனினும் இத்துறை தொடர்பான விரிவான ஆய்வுகள் மாணவர்களின் உயர்விற்கு உதவும் என இவ்வாய்வு உணர்த்தியுள்ளது.*

***திறவுச் சொற்கள்*** *: நவீன தொழிநுட்பம் , நடனபாடம், கற்றல் - கற்பித்தல் முறை*

# Painting and Sculpture

# இயற்கையின் மேலாதிக்கம் : ஓவியர் ஆசை இராசையாவின் நிலக்காட்சி ஓவியங்களை அடிப்படையாகக் கொண்ட ஆய்வு.

**வ.பாலமுருகன்,**
*ஓவியத்துறை, SPRFVPA, யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம்*

**ஆய்வுச் சுருக்கம்.**

*மனிதனுக்கும் இயற்கைக்குமான உறவு மிக இறுக்கமானது. பண்டைய காலத்திலிருந்தே கலைஞர்கள் நிலவுருவை வரைந்து வருகின்றனர். கிரேக்கர்களும் ரோமானியர்களும் இயற்கை மற்றும் நந்தவனக்காட்சிகளின் சுவர் ஓவியங்களை உருவாக்கினர். இயற்கை பற்றிய அவதானமும் புரிந்துணர்வும் ஓவிய வெளிகளில் நிலக்காட்சிகளாகின்றன. நிலக்காட்சி ஓவியங்கள் பரந்த எல்லைகளைக்கொண்டதாக இயற்கைக்காட்சிகளை முதன்மைப்படுத்தி வரையப்படும் ஓவியங்களாகும். இயற்கைக்காட்சிகளை வெறும் காட்சிப்பதிவுகளாக அல்லாது அவற்றை ஓவியநிலைக்குக் கொண்டுசெல்லும் முயற்சியில் ஓவியர்கள் ஒவ்வொருவரும் தங்களுக்கேயான அணுகுமுறைகளைக் கையாழ்வதும்,கருத்து நிலைகளை உட்புகுத்துவதும் வழக்கமாகும். நிலவுரு வரைதலில் விடயத்தெரிவு, வர்ணத்தெரிவு மற்றும் உத்திமுறைகள் போன்றவற்றில் பரீட்சார்த்த முயற்சிகள் தொடர் இயக்கமாக கலை வரலாற்றில் காணப்பட்டுவருகிறது. யாழ்ப்பாணத்து ஓவியக்கலை வரலாற்றில் காத்திரமான கலைஞரான ஓவியர் ஆசை இராசையா இலங்கையின் தலைநகரில் சித்திர ஆசிரியராக சிலவருடங்கள் கடமையாற்றி, அத்தொழிலை இனக்கலவரம் காரணமாக உதறித்தள்ளிவிட்டுத் தனது பிரதேசமான வடபகுதிக்கே திரும்பிவந்து தன்னை ஓர் முழுநேர ஓவியக்கலைஞனாகத் தக்கவைத்துக்கொண்டவர். தன்பிரதேசத்தின் மேலுள்ள பற்றும் ஓவியத்துறையில் உள்ள ஈடுபாடும் இவரைச் சமகால ஓவியர்களிடையே தனித்துவம் கொண்டவராகக் காட்டியது. இவரது ஆக்கங்கள் பிரதிமை ஓவியங்கள், நிலக்காட்சி ஓவியங்கள், கருத்து வெளிப்பாட்டு ஓவியங்கள், முத்திரை வடிவமைப்புக்கள் எனப் பரந்தவை. இவரது ஓவியங்கள் யாழ்ப்பாணத்தின் மண்வாசைன கொண்டனவாகவும் யாழ்ப்பாண மக்களின் வாழ்வியலைக் கூறுவனவாகவும் வரலாற்றுப் பதிவுகளாகவும் விளங்குகின்றன. இவரது நிலக்காட்சி ஓவியங்களும் ஊடகக்கையாழுகையும் ஓவியத்துறையில் இவருக்கான தனித்துவமான அடையாளங்களாகப் பார்க்கப்படுகின்றன. மக்களது வாழ்வியல் மற்றும் பிரதேசத்தின் தனித்துவமான அடையாளங்கள் என்பவற்றை யதார்த்தபூர்வமாகக் காட்டுவனவாக இவரது நிலக்காட்சி ஓவியங்கள் அமைந்திருப்பதோடு இயற்கையின் தரிசனமானது மனிதசக்தியை விஞ்சிய மாபெரும் சக்தியாகக் காணப்படுகிறது என்பதனை பௌதிகத்தோற்றத்தின் விஸ்தீரணத்தை அழகியல் அம்சத்துடன் வெளிப்படுத்துவனவாகவும் அமைந்துள்ளன. இவ் ஆய்வுக்கான விடயப்பொருளாக அவரின் நிலக்காட்சி ஓவியங்கள் அமைகின்றன. இவ் ஆய்வின் தேடலாக இவரது நிலவுருக்களில் இயற்கையின் பிரசன்னம் எவ்வாறு அமைந்துள்ளது? பௌதிகத்தோற்றத்தினை, அதன் பண்பினை, பிரம்மாண்டத்தினை, அதன் அழகினை மற்றும் இயற்கையின் அதீத சக்தியினை வரையறுக்கப்பட்ட ஓவியசட்டகத்திற்குள் எவ்வாறு தோற்றுவிக்கிறார்? விடயத்தெரிவு மற்றும் பகுதிகளின் பிரிப்பிலும் பிரத்தியேகமான தன்மையை எவ்வாறு கொண்டிருந்தார்? என்ன வகையான வர்ணமிடும் நுட்பத்தைக் கொண்டிருந்தார்? இவரது நிலவுருக்கள் எவ்வகையாக வரலாற்றுப் பதிவுகளாய் அமைகின்றன? தனது உள்மனம் தொடர்பான ஆத்மீக*

*வெளியினை எவ்வாறு கட்டமைக்கிறார்? ஓவிய மூலக்கூறுகளை எவ்வாறு கையாள்கிறார்? அதன்மூலம் எவ்வாறு அர்த்தமுள்ள கலைப்படைப்பை உருவாக்குகின்றார்? என்பவை அமைகின்றன. பண்புசார் ஆய்வாக அமையும் இவ் ஆய்வு விவரண ஆய்வு முறை மற்றும் பண்பாட்டு மானிடவியல் ஆய்வு முறைகளை உள்ளடக்கியது. முதலாம்நிலைத் தரவுகளாக ஓவியரின் நிலக்காட்சி ஓவியங்களும் மற்றும் இரண்டாம்நிலைத் தரவுகளாக நூல்கள், சஞ்கிகைகள், நேர்காணல் மற்றும் இணையத்தளத் தகவல்கள் என்பனவும் அமைந்துள்ளன. பெரு வெளியை ஊடறுத்து நிற்பதாக பிரதான உருக்களை அமைப்பதன் மூலமும், மனித உருக்களை அளவில் சிறியனவாகக் கட்டமைக்கின்ற முறையினாலும் இயற்கைத் தோற்றத்தின் சக்தியை வெளிப்படுத்துவதோடு வர்ணத்தெரிவு, ஊடகக் கையாழுகை மற்றும் வேற்றியல்பு கொண்ட இழைமங்களை பொருத்தமான முறையில் இணைத்தல் என்பவற்றால் அழகினையும் வெளிப்படுத்தி, தான் காண்கின்ற அக உலகின் தோற்றத்தை இப் புற உலகின் காட்சிகளாகக் காண்பியநிலைப்படுத்துதல் என்பவை இவ் ஆய்வின் பேறுகளாக அமைகின்றன. இவ் ஆய்வின் பயனாக நிலக்காட்சி ஓவியத்தை அமைக்கின்றபொழுது பரந்து வியாபித்திருக்கின்ற இயற்கையை எவ்வாறு சட்டகத்திற்குள் கொண்டுவரவேண்டும் என்பதையும், பகுதிகளைப் பிரித்து அமைக்கின்றபொழுது எத்தகைய காட்சிமாற்றங்களைக் கொண்டுவரமுடியும் என்பதையும், ஊடகக் கையாழுகை இயற்கைத் தோற்றத்தில் உயிர்த்தன்மையினையும் ஓவியத்திலே லயத்தினையும் தோற்றுவிப்பதில் எத்தகைய பங்கினை வகிக்கின்றது என்பதையும் அறிந்துகொள்வதாக அமைவதோடு ஒரு நிலக்காட்சி ஓவியத்தை எவ்வாறு வாசிக்க வேண்டும், இரசிக்க வேண்டும் எனும் ஞானத்தை வழங்குவதாகவும் அமைகிறது.*

**திறவுச்சொற்கள்** - *நிலக்காட்சி ஓவியம், கையாழுகை, யாழ்ப்பாணம், லயம். இழைமம்*

# பாரம்பரிய மரச் சிற்பப் படைப்புக்களின் அழகியல்: யாழ்ப்பாணத்தின் திருநெல்வேலிப் பிரதேசத்தை மையமாகக்கொண்ட ஆய்வு

**சர்மிளா சூரியகுமார்**
*Visual Artist*

**ஆய்வுச் சுருக்கம்.**

கலை வெளிப்பாடுகள் அவை உருவாக்கப்படும் சூழலுக்கு ஏற்ப அக்காலத்து சமூகப் பண்புகளையும், மக்களின் வாழ்வியலையும் வெளிப்படுத்தக்கூடியவையாகக் காணப்படுகின்றன. எத்தகைய கலைப்படைப்பும் மக்களின் உளநிலையிலிருந்தே தோற்றம் பெறும். அந்த உளநிலையானது சமூகத்தின் இருப்பிலிருந்து மேலெழுகின்றது எனும் மார்க்சிச உளவியலாளர்களின் கருத்தின்படி, ஒரு சமூகத்தின் பண்பாடு சார்ந்த வெளிப்பாட்டுத்தன்மையில் அக்கால சிற்பங்கள் முக்கியம் பெறுகின்றன. அந்தவகையில் யாழ்ப்பாணத்து மரச்சிற்பங்களின் கலைவெளிப்பாடுகள் அச்சமூகத்தின் பண்பாட்டு ரீதியான வெளிப்பாட்டு மூலகம் ஆகும். யாழ்ப்பாணத்தில் திருநெல்வேலிப் பிரதேசத்தில் மரத்தினை ஊடகமாகக்கொண்டு கம்மாளர் அல்லது விஸ்வகுலம் எனும் மக்கள் தொகுதியினரால் குருசீட மற்றும் பரம்பரை முறைவழியாக தமக்கான சடங்குகள், சமய நெறிமுறைகளைப் பின்பற்றி மரச்செதுக்கல் சிற்ப வேலைபாடுகளை உருவாக்கிவருகின்றனர். சிற்பசாஸ்திர அளவுகள் மூலம் கலைப் படைப்புக்களை உருவாக்குதல் என்பது இவர்களது கலைப்படைப்பின் அடிப்படை அம்சமாகும். இன்றைய காலகட்டத்தில் யாழ்ப்பாணத்திலும் நவீன சமூகமயமாக்கலின் தாக்கம் அதிகமாகக் காணப்படுகின்றது. யாழ்ப்பாண மரபுசார்ந்த வெளிப்பாடுகளின் அழகியல் நுணுக்கங்களை எதிர்கால சந்ததியினருக்கு வழங்குவதிலுள்ள இருப்புநிலை என்பது இன்றையகாலகட்டத்தில் கேள்விக்குரியதாகி உள்ளது. ஆக்கமற்ற ரீதியிலான அபிவிருத்திச் செயற்பாடுகள், முறையற்ற பாதுகாப்பு முறைகள், பொருளாதார முன்னேற்றம், நவீன மயமாக்கல், மக்களின் கலைவெளிப்பாடுகள் மீதான அசட்டுத்தனமான மனநிலை மற்றும் அண்மைக்காலமாக நடைபெற்ற உள்நாட்டுப் போர் போன்ற செயற்பாடுகளினால் சமூகப் பண்பாட்டு வரலாற்று முக்கியத்துவம்வாய்ந்த பல படைப்புக்கள் அழிவடைந்துவிட்டன. இவற்றில் சிற்பங்களும் முக்கியம்பெறுகின்றன. யாழ்ப்பாணத்துச் சிற்பங்களில் மரச்சிற்ப வேலைப்பாடுகள் முக்கியமானவை. அண்மைக்காலத்தில் புதிய சிற்ப ஊடகங்களின் பாவனையும், நவீன கண்டுபிடிப்புகளும், புதிய இயந்திரங்களின் வருகையின் தாக்கங்களும் இப் பாரம்பரிய சிற்ப வேலைபாடுகளில் ஊடுருவுகின்றன. இதனால் பாரம்பரிய மரச்செதுக்கல் வேலைப்பாடுகளின் அழகியல்தன்மை மழுங்கடிக்கப்பட்டுள்ளது என்பதே ஆய்வுப்பிரச்சனையாகக் கொள்ளப்படுகிறது. திருநெல்வேலிப் பிரதேச பாரம்பரிய மரச்செதுக்கல் வேலைப்பாடுகளின் அழகியல் மற்றும் நுணுக்கங்களைக் கண்டறிதலும், நவீன இயந்திரங்களின் மூலமாக உருவாக்கப்படும் சிற்பங்களுக்கும் - பாரம்பரிய சிற்பக்கலைப் படைப்புகளுக்கும் இடையிலான அழகியல் ரீதியான வேறுபாடுகளைத் தொகுத்தலும் இவ்வாய்வின் நோக்கங்களாகும். யாழ்ப்பாணத்து மரச்சிற்ப அழகியலில் நவீன இயந்திரங்கள் தாக்கத்தினை ஏற்படுத்தியுள்ளன எனும் ஆய்வினுடைய கருதுகோளினடிப்படையில் 2000ஆம் ஆண்டிலிருந்து 2024ஆம் ஆண்டு வரையான காலப்பகுதியைக் கால

*எல்லைகளாகக்கொண்ட இவ்வாய்வானது கள ஆய்வு மற்றும் பண்புசார்ந்த ஆய்வு முறைகளைப் பயன்படுத்தி மேற்கொள்ளப்பட்டுள்ளது. திருநெல்வேலிப் பிரதேசத்தின் சிற்பக்கூடங்களிலிருந்து பெற்றுக்கொள்ளப்பட்ட கலைப்படைப்புக்களை மாதிரிகளாகக் கொண்டு மேற்கொள்ளப்பட்ட இவ்வாய்வில், மரச்சிற்பக் கலைஞர்களின் வாய்மொழிக் கருத்துக்கள், நேர்காணல்கள் முதல்நிலைத் தரவுகளாகவும் இலக்கிய மீளாய்வுகள், நூல்கள், மலர்வெளியீடுகள் என்பன இரண்டாம்நிலைத் தரவுகளாகவும் பயன்படுத்தப்பட்டுள்ளன. நவீன இயந்திரங்களின் பாவனை காரணமாக திருநெல்வேலிப் பிரதேசத்தின் மரச்செதுக்கற் கலையில் அழகியல் சார்ந்த நுணுக்கங்களில் தாக்கம் ஏற்படுத்தப்பட்டுள்ளதுடன், நவீன இயந்திரப் பாவனையின் பெறுபேறுகளானவை பாரம்பரிய வடிவிலான பெறுபேறுகளின் அழகியல் தன்மைகளை முழுமையாக பிரதிபலிக்கவில்லை என்பதுடன் பாரம்பரிய சிற்பங்களின் அழகியல் தன்மையும் இயந்திரங்களின் வெளிப்பாட்டுச் சிற்பங்கள் மூலமாக இழக்கப்பட்டுவருகின்றது என்பதும் ஆய்வின் பெறுபேறுகளாகப் பெற்றுக்கொள்ளப்பட்டன. சிற்பக் கலைஞர்களுக்கும், மரச்சிற்பம் தொடர்பான ஆய்வுகளை மேற்கொள்ளும் ஆய்வாளர்களுக்கும் மரச்சிற்பம் தொடர்பான பண்பாட்டுப் பெறுமானத்தை எடுத்துக்காட்டுவதாகவும், முறைசார்ந்து இயங்கும் ஆய்வாளர்களுக்கும் மாணவர்களுக்கும் துணைபுரிவதாகவும் இவ்வாய்வு அமைகின்றது. பண்புசார் ரீதியாக மேற்கொள்ளப்பட்ட இவ்வாய்வானது இதன் தொடர்ச்சியாக எதிர்காலத்திலும் மேற்கொள்ளப்படலாம் என்பதுடன், ஆய்வின் பரப்பின் அடிப்படையிலான மாற்றங்களை விஸ்தரித்தும் மேற்கொள்ளப்படலாம் என்பது எதிர்கால ஆய்விற்கான பரிந்துரைகளாகக் குறிப்பிடப்படுகின்றன.*

**திறவுச்சொற்கள் -** *மரச்செதுக்கல், சிற்பக்கலை, பாரம்பரியம், யாழ்ப்பாணம், திருநெல்வேலி*

# இலங்கைச் சமகால கருத்துருவாக்கக் காண்பியக் கலை வெளிப்பாடுகளில் உள்ள சவால்கள்

**பத்மநேசன் பிரசாந்**
*ஓவியத்துறை, SPRFVPA, யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம்*

**ஆய்வுச்சுருக்கம்**

*இவ் ஆய்வானது 20ஆம் நூற்றாண்டின் இறுதியில் ஏற்பட்ட புதிய தொழில்நுட்ப வளர்ச்சிகள், மேலைத்தேயவர்களின் வருகை, உலகமயமாக்கல், கலைச்சங்கங்கள், கலைப்பயிற்சி நிறுவனங்கள் போன்றவற்றுடன் சமகால காண்பிய ரீதியான கருத்துருவாக்கக் கலைகளை (Conceptual art) ஊக்குவிக்கும் முகமாக பல்வேறுபட்ட முயற்சிகளை மேற்கொள்ளும் அருங்காட்சியகங்கள், வணிகக் கலைக்கூடங்கள், கலைச்சந்தைகள் போன்றவற்றின் சமகால நிலவரங்களின் பன்முகப்படுத்தப்பட்ட தன்மையினை சுருக்கமாகத் தெளிவுபடுத்துவதாக அமைகிறது. இவ் ஆய்வு ஒவ்வொரு கலை வரலாற்று ஆசிரியரும், கலை விமர்சகரும் சமகாலத்தை எவ்வாறு ஒழுங்கமைக்க வேண்டும் என்பதில் வித்தியாசமான உணர்வைக் கொண்டிருப்பார்கள் என்பதனை ஒரு சில உதாரணங்கள் மூலமாக விபரிப்பதாகவும் சமகாலக் கலையின் வடிவத்தின் "போக்குகள், நிலவரங்கள், பாணிகள்'' பற்றித் தொடர்ந்து சிந்திப்பது முக்கிய விடயம் என்பதனை விபரிப்பதாகவும் அமைகின்றது. மேலும், இலங்கையில் சமகாலத்தில் பேசக்கூடிய வகையில் உள்ள கருத்துருவாக்கக் கலை வெளிப்பாடுகளின் வேறுபட்ட பன்மைத் தன்மைகளை ஆராய்வதனூடு அவற்றின் அடிப்படை நோக்கங்களைக் கருத்தில் கொள்வது அவசியமாகின்றது. கடந்த 30 வருடகால உள்நாட்டு யுத்த சூழ்நிலைகளினால் சமகால இலங்கைக் கலைஞர்கள் தமது சுய கருத்துருவாக்க வெளிப்பாடுகளை மேற்கொள்வதற்கான சுதந்திரம் கேள்விக்குள்ளான நிலையில் காணப்படுகின்றது. அதனடிப்படையில் கலைஞர்கள் தமது படைப்புகளினூடாக சமூக, பொருளாதார, அரசியல் பின்புலங்களின் மீதான எதிர் வினைச் செயற்பாடுகளினால் ஏற்பட்ட விளைவுகள் தொடர்பான கலை விமர்சகர்களின் ஒரு சில கருத்துக்களை உள்ளடக்கியதாக அமைகின்றது. மேலும் கலைஞர்கள் தொடர்ச்சியாகத் தமது கலைச் செயற்பாடுகளை மேற்கொள்வதற்கு வெவ்வேறுபட்ட சூழ்நிலைகளில் தமது இருப்பினை தகவமைப்பதற்கும், தக்கவைத்துக்கொள்வதற்கும் எடுத்தாளப்பட்ட யுக்திகளைக் கண்டறிவதாக அமைவதுடன், இதனூடாக எதிர்காலத்தில் நிகழப்போகும் மாற்றங்களை எவ்வாறு முகம் கொடுக்க முடியும் என்பதை எதிர்வு கூறும் முயற்சியினையும் இவ் ஆய்வு கொண்டுள்ளது. அத்துடன் காண்பியக்கலை ரீதியாக மரபு வழி பேணப்பட்டு வந்த உத்தி நுட்பங்களின் பல்வேறுபட்ட பரிணாம மாற்றங்கள் மூலமாக சமகால கருத்துருவாக்கக் கலைஞர்கள் எவ்வாறு தமது படைப்புகளை காண்பிய மொழியாக பார்வையாளர்கள், போசகர்களினோடு தொடர்பு கொள்ள எடுக்கும் முயற்சிகளின் வெற்றி, தோல்விக்கான காரணிகளை எடுத்து விவரிப்பது அவசியமாகின்றது. கலைஞர்கள் தமது கருத்துருவாக்கப் படைப்புகளை சந்தைப்படுத்தலில் ஏற்படுகின்ற இடர்பாடுகள் மற்றும் சந்தைப்படுத்தும் முகவர்கள், கலைப்பொருட்களை சேகரிக்கும் போசகர்களின் எண்ணப்பாடுகள் மாற்றமடைந்துவரும் சமூகக் கட்டமைப்பிற்கேற்ப வேறுபடும் தன்மைகளினை இனங் காணுவதாகவும் அமைகின்றது. எதிர்காலக் காண்பிய ரீதியான கருத்துருவாக்கக் கலை வெளிப்பாடுகளை மேற்கொள்ளவிருக்கும் கலைஞர்களை ஊக்குவிக்கும் தற்கால இலங்கையின் காண்பியக் கல்வி முறைமைகளும், சமூக நிலவரங்களின் வெளிப்படையான தோற்றப்பாட்டினை இவ்வாய்வுக்கட்டுரையில் எடுத்தியம்புவது சாலப்பொருத்தமானதாகும்.*

***திறவுச் சொற்கள் -*** *கருத்துருவாக்கக் கலை, காண்பியம், எண்ணப்பாடு, எதிர்வினைகள், நோக்கம்*

# மட்டக்களப்புக் கோட்டையில், ஒல்லாந்தரின் கோட்டை வடிவமைப்பும், நுட்பமுறைகளும்

**நாகதாஸ். பாரத்**
*Colombo AL HikMa College*

**ஆய்வுச்சுருக்கம்**

*இலங்கைக்கு வருகை தந்த முதலாவது ஐரோப்பிய இனத்தவரான போர்த்துக்கேயர், தமது ஆதிக்கத்தை நிலை நிறுத்தும் நோக்கத்தோடு, இலங்கையில் பல்வேறு இடங்களில் கோட்டைகளை அமைத்துக் கொண்டனர். மட்டக்களப்பில் கோட்டையின் அவசியத்தினை உணர்ந்த பின்னர், 1628ஆம் ஆண்டு மட்டக்களப்பிலும் கோட்டையினை அமைத்துக் கொண்டனர். போர்த்துக்கேயரிடமிருந்து கோட்டையினைக் கைப்பற்றிய ஒல்லாந்தர், 1682ஆம் ஆண்டு அதனைப் பலமான பாதுகாப்பு அரணாக மாற்றியமைத்தனர். அதன் பின்னர் ஒல்லாந்தரிடமிருந்து, பிரித்தானியர் கோட்டையினைக் கைப்பற்றி மீண்டும் பாதுகாப்பு அரணாக மாற்றியமைத்து, இதனை அரசியல் விடயங்களை மேற்கொள்ளுகின்ற கச்சேரியாகப் பயன்படுத்தினார்கள். மட்டக்களப்பு ஒல்லாந்தர் கோட்டையின், கட்டட வடிவமைப்பின் சிறப்புக்களை மக்கள் அறிந்து கொள்ளாமல் காணப்படுகின்றனர். இதனால் மட்டக்களப்பு ஒல்லாந்தர் கோட்டை அழிந்து போவதற்கான வாய்ப்புக்கள் அதிகம் காணப்படுகின்றது. ஆகவே கோட்டையினையும், கோட்டையின் கட்டட வடிவமைப்பின் முக்கியத்துவத்தினையும், அதனைப் பாதுகாக்கும் அவசியத்தினையும் முக்கியப்படுத்தி இவ் ஆய்வு செய்யப்பட்டுள்ளது. மட்டக்களப்பு ஒல்லாந்தர் கோட்டையின் கட்டட வடிவமைப்புக்களின் நுட்பமுறைகளைக் கண்டறிதல், இவ் ஆய்வின் பிரதான நோக்கமாகும். மட்டக்களப்புக் கோட்டையில் காணப்படுகின்ற போர்த்துக்கேயர், ஒல்லாந்தர், பிரித்தானியர் காலத்துக் கட்டட வடிவமைப்புக்களின் நுட்பமுறைகளை அறிந்து கொள்ளல், இவ் ஆய்வின் உப நோக்கங்களாகும். மட்டக்களப்பு ஒல்லாந்தர் கோட்டையின் கட்டட வடிவமைப்பின் நுட்பமுறைகளை இவ்வாய்வு ஆராய்வதால், இவ் ஆய்விற்கு விபரண அளவீட்டு ஆய்வு பொருத்தமானதாக அமைந்துள்ளது. ஆய்வுக்குடித்தொகையாக மட்டக்களப்புக் கச்சேரியின் உயர் அதிகாரிகள், கலாசார உத்தியோகத்தர்கள், மட்டக்களப்பு தொல்பொருள் ஆராய்ச்சியாளர்கள், கோட்டையினை ஆய்வுசெய்த ஆய்வாளர்கள் போன்றவர்கள் காணப்படுகின்றனர். இவ்வாய்வின் முதல் நிலைத்தரவு சேகரிப்பதற்காக வினாக்கொத்து, நேர்காணல் ஆகிய ஆய்வுக்கருவிகள் பயன்படுத்தப்பட்டுள்ளன. மேலே குறிப்பிடப்பட்டுள்ள அதிகாரிகளிடமிருந்து, நேர்காணல் மூலம் தரவுகள் திரட்டப்பட்டுள்ளது. இரண்டாம் நிலைத்தரவுகளாக புத்தகங்கள், நாட்குறிப்பேடுகள், சஞ்சிகைகள், கட்டுரைகள், இணையத்தளம் போன்றவற்றிலிருந்து தரவுகள் திரட்டப்பட்டுள்ளது. இவ்ஆய்விலே பரிந்துரைகளை நடைமுறைப்படுத்துவதன் மூலம், மட்டக்களப்பு ஒல்லாந்தர் கோட்டையினை இன்னும் பல நூற்றாண்டுகள் பாதுகாக்க முடியும்.*

**திறவுச்சொற்கள்** – *ஒல்லாந்தர் கட்டிடக்கலை, மட்டக்களப்பு ஒல்லாந்தர் கோட்டை, மட்டக்களப்புக் கட்டிடக்கலை, மட்டக்களப்புக் கச்சேரி*

# புகைப்படக்கலையில் செயற்கை நுண்ணறிவு.

**பிறைநிலா கிருஷ்ணராசா**
*ஊடகக் கற்கைகள் துறை, யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம்*

**ஆய்வுச் சுருக்கம்.**

*ஒரு கலையாக உலகம் முழுவதும் உள்வாங்கப்பட்டிருக்கும் புகைப்படவியலானது வருமானமீட்டுகின்ற வகையிலும், ஆவணப்படுத்துகின்ற வகையிலும், மக்களை ஆற்றுப்படுத்துகின்ற வகையிலுமென பல வழிகளில் வாழ்வியலோடு வேரோடியுள்ளது. புகைப்படவியலானது ஒளியை மையப்படுத்தி மேற்கொள்ளக்கூடிய செயன்முறை என்பதனால் புகைப்படவியலாளர்களின் திறமைகளைத் தாண்டி, புகைப்படக்கருவி, வில்லைகள் மற்றும் ஏனைய தொழிநுட்ப சாதனங்கள் என்பவை இங்கு முக்கிய இடம்பிடிக்கின்றன. காலத்திற்குக் காலம் ஏற்படும் தொழிநுட்ப விருத்தியின் அடிப்படையில் இந்தக் கருவிகளின் பரிமாணமும் மாற்றமடைந்தபடியிருக்கின்றன. இத்தகைய தொழிநுட்ப விருத்தியின் பரிமாணங்களில் ஒன்றாக செயற்கை நுண்ணறிவு காணப்படுகின்றது. இயந்திரங்களை வடிவமைத்தலில் ஆரம்பித்து தற்காலத்தின் அனைத்துத் துறைகளிலும் மற்றும் கலைகளிலும் இதன் பங்களிப்பும் தாக்கமும் பாரிய இடத்தைப் பிடித்துள்ளமையாலும், இளையோர் மத்தியில் இதற்கான செல்வாக்கு அதிகமாயிருப்பதாலும், புகைப்படக்கலையில் இதனுடைய போக்கினையும், சவால்களையும் அடையாளம் காண்பதற்குரிய தேவை ஏற்பட்டிருக்கிறது. செயற்கை நுண்ணறிவின் செல்வாக்கு சமகால புகைப்படக்கலையில் தாக்கம்செலுத்துவதோடு மட்டுமல்லாது சவாலாகவும் அமைந்துள்ளது என்பதை அறிவதே ஆய்வுப் பிரச்சனையாகக் கொள்ளப்பட்டது. இந்த ஆய்வினை மேற்கொள்வதற்காக எழுந்தமாதிரியாக வெவ்வேறு நாடுகளிலிருந்து பத்து புகைப்படவியலாளர்களும், பத்து புகைப்படவியலைச்சேர்ந்த துறைகளில் தொழிற்படும் நபர்களும், பத்து புகைப்படவியல் சாராத நபர்களும் தெரிவுசெய்யப்பட்டனர். இரண்டாம் நிலைத் தரவுகளுடன் பண்பியல் மற்றும் பகுப்பாய்வாக, இவ் ஆய்வு மேற்கொள்ளப்பட்டது. தெரிவுசெய்யப்பட்ட மாதிரிகளிடமிருந்து நேர்காணல்கள், குழுக் கலந்துரையாடல் மூலம் பெறப்பட்ட தரவுகள் பகுப்பாய்விற்கு உட்படுத்தப்பட்டன. செயற்கை நுண்ணறிவு மென்பொருட்கள் புகைப்படக்கலையில் எவ்வாறான தேவைகளுக்குப் பயன்படுத்தப்படுகிறது?, புகைப்படக்கலையில் செயற்கை நுண்ணறிவினால் ஏற்படும் நன்மை-தீமைகள் எவ்வாறானவை?. புகைப்படக்கலையானது செயற்கை நுண்ணறிவால் எத்தகைய சவால்களை எதிர்நோக்கியுள்ளது? போன்ற வினாக்கள் ஆய்வு வினாக்களாக முன்வைக்கப்பட்டன. இதன்மூலமாகப் புகைப்படக்கலையில் செயற்கை நுண்ணறிவின் சாதக பாதக நிலைகள் கண்டறியப்பட்டது. குறைவான வளங்களைப் பயன்படுத்தி நிறைவான, பிசிரில்லாத மற்றும் உடனடியான பெறுபேறுகளைப் பெற்றுக்கொள்வது, குறைவான மனிதவலு என்பதால் பணச்செலவைக் கட்டுப்படுத்துதல், நேரச்சிக்கனம், கற்பனைப் பெறுபேறுகளை இலகுவாக பெற்றுக்கொள்ளுதல் மற்றும் சர்வதேச போட்டிகளிலும் நிகழ்வுகளிலும் இதற்கான தனியானதொரு வகைப்பிரிப்பு என்பன சாதகமான விடயங்களாகக் கூறப்பட்டன. பாதக நிலைகளாக மனிதர்களுக்கான வேலைவாய்ப்பு குறைந்துபோதல். தொழில்சார் மற்றும் புகைப்படவியல் நெறிமுறைகளின்மீதான மோதல், புகைப்படக்கலையின் சில வரன்முறைகளை செயற்கை நுண்ணறிவால் கையாளமுடியாமலிருத்தல், மெய்மை*

*என்கின்ற நிலை இல்லாமல் போதல், மென்பொருட்களுக்கான பணச்செலவு, நம்பகத்தன்மை, நடுநிலைமை இல்லாதுபோதல், சர்வதேச ரீதியிலான நிகழ்வுகளில் தனியானதொரு வகைப்பிரிப்பால் புகைப்படவியற்கலையின் மெய்மைத்தன்மை குறைவடைதல், தொழிநுட்ப அறிவு தேவைப்படல் மற்றும் வருங்காலத்தில் புகைப்படவியல் சார்ந்து இயங்குவதற்கு செயற்கை நுண்ணறிவு பற்றிய போதிய அறிவிருத்தல் போன்ற விடயங்கள் ஆய்வின்மூலம் பெற்றுக்கொள்ளப்பட்டன. முறைசார்ந்தும், கல்வி ரீதியாகவும், தொழில்சார்ந்தும் புகைப்படக்கலையின்பால் இயங்கும் நபர்களுக்கும், கற்கைகளுக்கும், மாணவர்களுக்கும் துணைபுரியக்கூடிய இவ்வாய்வானது எப்படி புகைப்படச் சுருள்களிலிருந்து எண்ணிலக்க முறைத் தொழிநுட்பத்திற்கு மாற்றம்பெறும்போது அதைப்பற்றி அறிய ஆர்வமில்லாத புகைப்படவியல் சார்ந்தவர்கள் இடைநடுவே காணாமல் போனார்களோ அதைப்போல இந்த செயற்கை நுண்ணறிவிற்கான அறிவும் தெளிவும் இல்லாத நபர்கள் எதிர்காலத்தில் நிலைத்திருக்க முடியாது என்பதையும், புகைப்படக்கலையில் மனித சிந்தனையின் பகுத்தறிவின் உணர்திறனை இவை தொட்டுவிடுவது கடினம் என்பதையும் வெளிப்படுத்துவதோடு புகைப்படக்கலையின் சமகாலச் சவால்களில் செயற்கை நுண்ணறிவே பெரும் சவாலாகக் காணப்படுகின்றது என்பதை ஆய்வானது முடிவாகச் சுட்டிக்காட்டுகின்றது.*

**திறவுச் சொற்கள்** - *செயற்கை நுண்ணறிவு, புகைப்படக்கலை, சவால், தொழிநுட்பம், கலை*

# யாழ்ப்பாணத்தின் மெய்யுரு ஓவிய வரைதலும் சவால்களும்

**ஆ.காங்கேயன்**
*ஓவியத்துறை, SPRFVPA, யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம்*

**ஆய்வுச்சுருக்கம்**

*மெய்யுரு ஓவியம் என்பது ஒருவருடைய உருவப்படத்தை மட்டும் வெளிப்படுத்தாமல் அவருடைய ஆளுமை, அந்தஸ்து மற்றும் அவருடைய குண இயல்பு போன்றவற்றினை வெளிப்படுத்துவதோடு அந்த ஓவியத்தை வரைந்த ஓவியரின் கலைப்பார்வையினையும் வெளிப்படுத்தி நிற்கின்றது. இந்த ஆய்வுக் கட்டுரையானது யாழ்ப்பாணத்தின் மெய்யுரு ஓவியர்களை ஆராய்வதோடு மட்டுமல்லாமல் யாழ்ப்பாணச் சமூகத்தில் மெய்யுரு ஓவியம் வரைவதில் காணப்படுகின்ற சவால்களையும் முன்வைக்கின்றது. கனகசபாபதி, இராசரத்தினம் மற்றும் ஆசை ராசையா போன்ற திறமை மிக்க கலைஞர்கள் யாழ்ப்பாணத்தின் மெய்யுரு ஓவியத்தின் வரலாற்றிற்கு வித்திட்டனர். தென்னிலங்கைக் கலைகளுக்கு நிகராகவும் அதற்கு மேலாகவும் கலை வளர்ச்சியில் யாழ்ப்பாணம் உயர்ந்து காணப்பட்டது. இருப்பினும் யாழ்ப்பணத்தில் பல காரணிகள் கலை பற்றிய பார்வையைப் பின்நோக்கிக் கொண்டு செல்கின்றன. ஒரு விரிவான ஆய்வின் மூலம், யாழ்ப்பாணத்தில் மெய்யுரு ஓவியத்தின் தற்போதைய நிலையைப் புரிந்துகொள்வதை நோக்கமாகக் கொண்டுள்ளதுடன் இந்த மெய்யுரு ஓவியக் கலைஞர்கள் எதிர்கொள்ளும் பல்வேறு சவால்களையும் வெளிச்சம் போட்டுக் காட்டுகிறது. யாழ்ப்பாணச் சமூகத்தில் கலை பற்றிய பார்வை குறைந்து காணப்பட்டமை, கலைஞனின் திறன் மற்றும் வெளிப்பாடு குறைந்து செல்லுதல், போதுமான நிதி ஆதரவு இல்லாமை, முழுநேர ஓவியராக வாழ்வதில் உள்ள பொருளாதார நெருக்கடி மற்றும் பாரம்பரிய நடைமுறைகளில் நவீன தொழில்நுட்பத்தின் தாக்கம் ஆகியவை முக்கிய தடைக்கல்லாக வரையறுக்கப்படுகின்றது. உள்ளூர்க் கலைஞர்கள், கலை உற்பத்திகள் விற்பனையாளர்கள், கலாசார வல்லுநர்களுடன் நேர்காணல்கள், மற்றும் ஏற்கனவே உள்ள நூல்கள், ஓவியங்களை ஆய்வு செய்தல் போன்ற பல்வேறு முறைகளில் இந்த ஆராய்ச்சி மேற்கொள்ளப்படுகின்றது. பல கலைஞர்கள் சமகாலத் தழுவல்கள் மற்றும் பொருளாதார சாவால்களுக்கும் ஏற்ப மெய்யுரு ஓவியங்களை வரைகின்றனர். சிலர் பாரம்பரிய நுட்பங்களை பாதுகாப்பதில் முக்கியம் செலுத்துகின்றனர் என்பதைக் கண்டுபிடிப்புகள் வெளிப்படுத்துகின்றன. கூடுதலாக, யாழ்ப்பாணத்தின் சமூக மற்றும் அரசியல் அமைப்பு, உள்நாட்டு மோதல்கள் மற்றும் மறுகட்டமைப்பு ஆகிய விடயங்கள் மெய்யுரு ஓவியர்களின் கலை முயற்சிகளை மேலும் சிக்கலாக்குகிறது. அத்துடன் நவீன தொழில்நுட்ப வளர்ச்சியின் காரணமாக டிஜிட்டல் மெய்யுரு வரைதல் போன்றவை இதிலடங்குகின்றன. இதனை நிவர்த்தி செய்வதற்கு, யாழ்ப்பாணச் சமூகத்தினரின் கலை பற்றிய புரிந்துணர்வை மேம்படுத்துவதுடன் மெய்யுரு ஓவியரின் கலைத்திறனை அதிகரிப்பதையும் நோக்கமாகக் கொண்ட பன்முகத் தன்மையினை இவ்வாய்வு முன்மொழிகிறது. கலைஞர்கள் தங்கள் படைப்புகளைக் காட்சிப்படுத்துவதற்கான தளங்களை உருவாக்குதல் அதாவது கண்காட்சிக்கூடங்கள் மற்றும் நிகழ்நிலை (Online) போன்றவை, விழிப்புணர்வு மற்றும் யாழ்ப்பாணத்தில் மெய்யுரு ஓவியத்தின் முக்கியத்துவத்தை எடுத்துக்காட்டும் கல்வித் திட்டங்களை நிறுவுதல் மற்றும் பட்டறைகள் நடத்துதல் ஆகியவை அடங்கும். இறுதியில், இந்த ஆய்வு யாழ்ப்பாணத்தின் கலைப் பாரம்பரியத்தைப் பாதுகாப்பதற்கும், வளர்ச்சியடையச் செய்வதற்கும், மெய்யுரு ஓவியர்களுக்கு அவர்களின் சவால்களை சமாளிப்பதற்கும்,*

*அதிக அங்கீகாரத்தை அடைவதற்கும் ஆதரவளிக்க முயல்கிறது. யாழ்ப்பாணச் சமூகத்தினருக்கு மெய்யுரு ஓவியத்தின் முக்கியத்துவத்தை எடுத்துரைப்பதன் மூலம் யாழ்ப்பாணத்தின் வளமான கலை மரபுகள் தொடர்ந்து செழித்து வருவதையும், எதிர்கால சந்ததியினருக்கு ஊக்கமளிப்பதையும் உறுதி செய்ய இந்த ஆய்வு விளைகிறது.*

***திறவுச் சொற்கள்*** *- மெய்யுரு ஓவியர்கள், மெய்யுரு ஓவியங்கள், அரசியல், சந்தைப்படுத்தல்.*

# Research Landscape of "European Sculpture'' - A Bibliometric Analysis Based on Web of Science Database (2000 - 2024)

**P. Poologanathan[1], T.Thelaxsan[2]**
[1]*Assistant Librarian, University of Jaffna,*
[2]*Lecturer (Probationary), Department of Sculpture, University of Jaffna*

**Abstract:**

European sculpture refers to the sculptural traditions that have emerged from the various cultures and regions of Europe throughout history. It encompasses a rich and diverse array of artistic expressions spanning different periods, styles, and cultural contexts. This study attempts to analysis the research publications on *European Sculpture* from 2000 to 2024 sourced from Web of Science database using search term as title ''*European Sculpture''*. Totally, 271 documents were received from Web of Science database. Received data were analyzed by HistCite, VOSviewer and MS-Excel software, and these analyses included country- wise research output, Journal- wise, Institution-wise, Subject-wise, Citation-wise, Documents-wise, and Authors-wise. Totally n=271 records has been retrieved with 1,976 total global citations, 7.29 average citations per item and overall h- index is 24. Maximum number of publications has been produced in the year 2020 with 21 (8%) publications and most number of publications has been produced by USA 39 (14%) and the most commonly used key word is *Sculpture*, it is occurred in 46 records in the research. This study may more helpful the librarian and researchers related to sculptural study to find out further information and continue the future study about *''European Sculpture''*.

***Keywords***: Sculpture, European sculpture, Bibliometric, artistic expressions, Web of Science

# யாழ்ப்பாணக் கிறிஸ்தவ சிற்பக் கலைஞர்களும் சமகால சவால்களும்

**ருக்க்ஷனா வேலாயுதம்**
*Department of Fine Arts, University of Jaffna*

**ஆய்வுச் சுருக்கம்**

*ஒரு சமூகத்தின் இருப்பை நிலைநிறுத்துவதில் அச்சமூகம் சார்ந்து உருவாகியுள்ள கலைவெளிப்பாடுகளுக்கு பிரதான பங்குண்டு. அச்சமூகம் சார்ந்து உருவான காண்பியக்கலைகளைத் தவிர்த்து அதன் பண்பாட்டு வரலாற்றினைப் புரிந்துகொள்ளுதல் என்பது முழுமையடையாது என்ற அடிப்படையில் யாழ்ப்பாணக் கிறிஸ்தவ சிற்பக் கலைஞர்களின் கலைப்பயில்வுகள் மற்றும் சமகாலச் சவால்கள் பற்றிய விசாரணையாகவே இக்கட்டுரை அமைகின்றது. மேலைத்தேயத்திலிருந்து பரவி இலங்கைத் தீவிலும் தமிழ்ப் பண்பாட்டிலும் கிட்டத்தட்ட 400 வருடங்களைக் கடந்த நீண்ட வரலாற்றையுடைய கிறிஸ்தவமதம் உள்ளூரவரின் சமூகப் பண்பாட்டிலும் கலைப் பயில்வுகளிலும் ஒன்றுகலந்துள்ள நிலையில் எழுதப்பட்ட இலங்கைக் கலைவரலாற்றில் கிறிஸ்தவக் கலைகள் மற்றும் கலைஞர்கள் தொடர்பாக கவனத்திலெடுக்கப்படவில்லை. யாழ்ப்பாணத்தில் கிறிஸ்தவ சிற்பங்களைக் குருநகரில் புதுமைமாதா கோவிலைச் சூழவுள்ள கடைஞர் என்கின்ற சாதியைச் சேர்ந்த கலைஞர்களே உருவாக்கியுள்ளனர். இவர்கள் குருநகர் கடற்கரையோரங்களில் காணப்படும் சிப்பிகளைப் பொறுக்கி அவற்றை தீச்சுவாலையிலிட்டுக் கடைந்து, சுண்ணாம்பாக்கி வெள்ளை பூசுவதையே தமது ஆரம்பத் தொழிலாகச் செய்து வந்தனர். இதனாலேயே இவர்கள் கடைஞர்கள் என அழைக்கப்பட்டனர். இவர்களே பிற்காலத்தில் சிற்பக் கலைஞர்களாகவும் ஓவியர்களாகவும் உருவாகியதுடன் கட்டட மேஸ்த்திரிகளாகவும் இருந்துள்ளனர். ஆரம்பங்களில் மேலைத்தேய பாதிரிமார்களின் வழிகாட்டலுக்குக்கீழ் அவர்களால் வழங்கப்பட்ட உருவப்படங்களை மாதிரிகளாகக்கொண்டு சிற்பங்களை உருவாக்கிப் பழகிய உள்ளூர்க் கலைஞர்கள் மேலைத்தேய இயற்பண்பு மற்றும் மாயவாதப் பண்புகளைப் படிப்படியாகக் கற்றுக்கொண்டுள்ளனர். காலனியத்தைத் தொடர்ந்து பல்வேறு கலைஞர்கள் சுதந்திரமாகச் செயற்பட்டுவந்துள்ள நிலையில் அவர்களால் பல்வேறு சிற்பங்கள் யாழ்ப்பாணத்திலும் யாழ்ப்பாணத்திற்கு வெளியிலும் உருவாக்கப்பட்டுள்ளன. இவர்கள் ஆரம்பத்தில் தேவாலயங்களிலும் பிற்காலத்தில் தேவாலயத்திற்கு வெளியிலும் குறிப்பாக வீடுகள், சேமக்காலைகளிலும் சிற்பங்களைச் செய்துள்ளனர். இந்தப் பின்னணியில் பண்பியல் சார்ந்த ஆய்வாக இது அமைவதுடன் கள ஆய்வு மூலமான நேரடி அவதானிப்பு, நேர்காணல்கள் என்பவற்றைப் பயன்படுத்தி உருவவாதம் மற்றும் சமூகவரலாறு போன்ற கலைவரலாற்று ஆய்வு அணுகுமுறைகளைக் கையாண்டு வருணனை மற்றும் ஒப்பியல் ஆய்வாக முன்வைக்கப்படுகிறது. ஆரம்ப காலத்தில் கிறிஸ்தவக் கலைகளின் மையமாக குருநகர் விளங்கியுள்ள நிலையில் குறித்த கலைஞர்கள் பற்றியோ அங்குள்ள கலைவெளிப்பாடுகள் பற்றியோ ஆழமான வாசிப்புக்கள் கலைவரலாற்றில் பேசப்படாமலுள்ளன. ஆகவே அவற்றை ஆய்வு செய்தல் என்பது ஒரு சமூகத்தின் இருப்பையும், தொன்மையையும், அடையாளத்தையும் உறுதிப் படுத்துவதாகவும் ஆவணப்படுத்துவதாகவும் அமையும். நவீன தொழிநுட்ப வளர்ச்சி, வெகுசனப் பண்பாடுகள், கல்வித்துறைகளில் ஏற்பட்டுள்ள பல முன்னேற்றங்களினாலும் இன்றைய தலைமுறையினருக்குக் குறித்த கலைப்பயில்வுகளிலுள்ள*

*ஆர்வமின்மையாலும் எதிர்காலத்தில் குறிப்பிடத்தக்க தமிழ்க்கிறிஸ்தவ சிற்பக்கலைஞர்கள் இல்லாது போவதற்கான வாய்ப்புக்கள் அதிகமுள்ளன. ஆகவே இருக்கும் காலத்திலேயே அவர்களையும் அவர்களது படைப்புக்களையும் ஆய்வு செய்து ஆவணப்படுத்துவது அவசியமாகும். உள்ளூர்க் கலைஞர்களை ஊக்குவித்தல் வெளியூர்களிலிருந்து சிற்பங்களை வாங்குவதற்குப் பதில் உள்ளூர்க் கலைஞர்களுக்கு வாய்ப்பளித்தல் மற்றும் இன்றைய இளைஞர்களுக்கு இவைசார்ந்த முக்கியத்துவத்தை உணரச்செய்வதுடன் விளிப்புணர்வூட்டுதல் என்பன குறித்த கலைஞர்களின் சமகாலச் சவால்களுக்கு தீர்வாக அமையும்.*

**திறவுச் சொற்கள் -** *கலப்பொட்டு, காலனியம், குறியீடு, சுதை, சொரூபம், பாணி, யதார்த்தவாதம்*

# காண்பிய வெளியில் விலங்குடல்களின் வேறுபட்ட குறியீட்டுத்துவ வெளிப்பாடுகள் : விநாயக வடிவங்களினை அடிப்படையாகக் கொண்ட ஆய்வு

***Kulanthaivelu Sasitharan***
*சிற்பத்துறை, SPRFVPA, யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம்*

**ஆய்வுச் சுருக்கம் -**

*இந்த ஆய்வானது காண்பிய வெளியினுள் பயன்படுத்தப்படும் விலங்குகள் தொடர்பானது. மனித பரிணாம வளர்ச்சிக்காலம் தொட்டு இன்று வரை கலை வெளிப்பாடுகளுக்குள் விலங்குகளின் உருவங்கள் பயன்படுத்தப்பட்டு வருகின்றன. இந்த உலகில் வேறுபட்ட பல பண்பாடு கொண்ட மனித குழுக்கள், சமூகங்கள் இருந்தன. அப்பண்பாட்டின் அடிப்படையிலேயே அம்மனிதர்களின் சிந்தனையும் வெளிப்பாடுகளும் அமைந்திருந்தன அல்லது தாக்கம் செலுத்தின. எல்லாச் சமூகங்களிடமும் எழுந்த கலைப்படைப்புக்களில் அச்சமூகத்தின் பண்பாடுகளின் செல்வாக்கு அல்லது தாக்கம் இருப்பதை அவதானிக்க முடியும். காண்பிய வெளியினுள் விலங்குடல்களின் வேறுபட்ட தன்மைகள் பார்வைகள் மற்றும் அவை சார்ந்த குறியீட்டுத்துவத்தை அடிப்படையாகக் கொண்டதாகும். இவ்வாய்வு விநாயக வடிவங்களின் உருவவியலில் உள்ள விலங்கு உருவங்களின் காண்பியத்தனம் மற்றும் பண்பாடுசார் குறியீட்டுத்துவப் பார்வைகளை அடிப்படையாகக் கொண்டுள்ளன. இந்த ஆய்வின் மூலம் விலங்குடல்களின் குறியீடுகளுக்கூடாக விநாயக உருவவியலின் தத்துவத்தை மேலும் புரிந்து கொள்ளவும் மீள் வாசிப்புச் செய்யவும் உதவியாகக் காணப்படும். பண்பாடுகளுக்கு பின்னால் பல்வேறுபட்ட நம்பிக்கைகள், கதையாடல்கள், பழக்கவழக்கங்கள் மற்றும் அப்பண்பாடுசார் உளவியல் என்பன முக்கியமானதாக உள்ளன. இதனால் விலங்குடல்களின் மேல் கட்டப்படும் பார்வை என்பதும் வேறுபட்டதாகக் காணப்படுகின்றது. கலை வெளியில் விலங்குடல்களில் வாசிப்பு என்பது, போதாமையாகவோ அல்லது சில அழகியல் அம்சங்களுடன் கடந்து செல்லப்படுவதாகவோ காணப்படுகின்றது. இதன் காரணமாக விலங்குகளுக்கான முக்கியத்துவம் மற்றும் விலங்குகளுக்குப் பின்னுள்ள பெரும்பரப்பு வாசிக்கப்படாமல் கடந்து செல்லப்படுகின்றது என்பதே இவ் ஆய்வின் பிரச்சினையாகவுள்ளது. காண்பியவெளியில் தோன்றும் இவ் விலங்குருவங்களை வெறுமனே அழகியல் தன்மையுடனோ சாதாரண கண்ணோட்டத்துடனோ வாசிக்கப்படுவதைத் தவிர்க்க வேண்டும். சாதாரணமாகக் கடந்து செல்லாமல் விலங்குகளினை அவதானித்தல் என்பதும் மீள்வாசிப்பு செய்வது என்பதும் மிக முக்கியமானதாகவுள்ளது. அப்பண்பாடுகளின் எண்ணப்பாட்டுடன் சேர்ந்தே அதன் அழகியல் மற்றும் உருவவியல்பை வாசித்தல் வேண்டும். இவ்வாறு வாசிக்கும் பொழுதுதான் அக் கலைப்படைப்புக்கள் முழுமை பெறுகின்றன. இவ்வாய்வில் விநாயகரின் வடிவங்கள் அந்தந்தப் பண்பாட்டுகளில் விளக்கங்களோடு சேர்த்து மீள்வாசிப்பு செய்யப்படுகின்றன. இவ்வாய்வு முறையியல் நேரடி அவதானிப்பு, நேர்காணல்கள், இலக்கியங்கள், புராணங்கள் மற்றும் வேறுபட்ட பண்பாடுகளின் இணையவழி வாசிப்புக்களுக்கு ஊடாக மேற்கொள்ளப்படுகின்றது. தமிழர் பண்பாட்டில் விநாயகர் முதல் வணக்கத்துக்குரியவராகக் காணப்படுகின்றார். இவ்விநாயக உருவங்களில் மூஷிக வாகனனாகக் காணப்படும் விநாயக வடிவங்களே அதிகமான புழக்கத்தில் உள்ளன.*

*பெரும்பாலானோர் அறிவதும் மூஷிக வாகனத்தில் அமர்ந்திருக்கும் விநாயகரே ஆகும். விநாயக உருவவியல் என்பது ஒரு வகையான அதிமானுடப் பண்புகளைக் கொண்டது. இவை 20ஆம் நூற்றாண்டுகளில் மேலெழுந்த மீயதார்த்தப் பண்புகளை நினைவுபடுத்துகின்றது. இங்கு கடவுளின் உருவவியலிலேயே விலங்குடல் என்பது காணப்படுகின்றது. அத்துடன் அவர்களுக்குக் கொடுக்கப்படும் வாகனங்களும் இங்கு முக்கியம் பெறுகின்றன. பேராற்றல் படைத்த கடவுள்களுக்கு எதற்காக வாகனங்கள்? அப்படி இருக்கையில் பேராற்றல் படைத்தவர்களுக்கு வாகனங்கள் கொடுக்கப்பட்டதன் நோக்கம் என்ன? விலங்குடல் பற்றிய இந்த ஆய்வானது பெரும்பரப்பைக் கொண்டதாகக் காணப்படுகின்றது. இந்தப் பெரும்பரப்பின் ஒரு பகுதியாக விநாயக வடிவங்களில் உள்ள விலங்குருக்கள் என்பது ஆய்வுக்குட்படுத்தப்படுகின்றது. இந்த ஆய்வினால் எதிர்கால ஆய்வாளர்கள், பொதுமக்கள், கலைஞர்கள், பல்கலைக்கழக மாணவர்கள் எனப் பலதரப்பட்டவர்களுக்கு விலங்குடல் இணைப்பு பற்றிய ஒரு புரிதலும், மீள்வாசிப்பு ஏற்படும்.*

**திறவுச் சொற்கள் -** *விலங்குடல், அழகியல், உருவவியல், விநாயகவடிவங்கள், அவதாரங்கள், கடவுள்களின் வாகனங்கள்.*

# இந்துக் கோயிற் திரைச்சீலை ஓவிய முறையின் மரபும், மாற்றங்களும்: யாழ்ப்பாண நல்லூரர் பிரதேசத்தை மையமாக கொண்டது.

***Lavanya Lambotharajothi***
*ஓவியத்துறை, SPRFVPA, யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம்*

**ஆய்வுச்சுருக்கம்**

*இவ் ஆய்வானது யாழ்ப்பாணப் பிரதேசத்தின் இந்துக் கோயில்களில் பயன்படுத்தப்படுகின்ற திரைச்சீலை ஓவியங்களின் அமைப்புமுறை, அதன் படைப்புருவாக்கச் செயன்முறையின் மரபு ரீதியான அம்சங்கள் மற்றும் தற்காலத்தில் இவ் ஓவிய முறையில் ஏற்பட்டுள்ள மாற்றங்களையும் உள்ளடக்கியதாக அமைகின்றது. இந்துக் கோயில்கள் பக்தி நெறிக்கு முக்கியத்துவம் அளிக்கும் அதே பட்சத்தில் அழகுக் கலைகளின் மையமாகவும் அமைந்தன. அவற்றுள் ஓவியக்கலையும் சிறப்புற்று விளங்கியமையைக் காணலாம். நவீனமயமாதலின் போக்குகளால் கலைத்துறையில் ஒரு வகையில் முன்னேற்றங்கள் ஏற்பட்டாலும் மற்றொரு வகையில் மரபுகள் முற்றாக அழியும் நிலையும் காணப்படுகின்றது. மரபு ரீதியாக ஆலயங்களில் பயன்படுத்தப்பட்ட திரைச்சீலை ஓவியங்களை விடுத்து தற்காலத்தில் நவீன இலத்திரனியல் சாதனங்களின் மூலம் உருவாக்கப்பட்ட பனர் அச்சுப்பதித்தல் வடிவிலான திரைச்சீலை அமைப்புகளினையே பெருமளவில் ஆலய வெளிகளில் காணக்கூடியதாக உள்ளதுடன் உருவ அமைப்புக்களிலும் மரபுகள் மாற்றியமைக்கப்பட்டுள்ளன. இதுவே இவ் ஆய்வின் முக்கிய பிரச்சனையாக அமைகிறது. தென் பகுதி தொடர்பான கலை வரலாறுகள் பேசப்படுகின்ற நிலைமையில் வட பகுதியின் கலை வரலாறுகளும் பேசப்பட வேண்டும். யாழ்ப்பாணக் கலை வரலாற்றில் கோயிற் சுவர் ஓவியங்கள் பற்றிய சில ஆய்வுகள் இடம்பெற்றிருப்பினும் அவற்றிலும் திரைச்சீலை ஓவிய மரபு பற்றி பெரிதளவில் பேசப்படாத ஒரு நிலைமை காணப்படுகிறது. எனவே யாழ்ப்பாண இந்துக் கோயிற் திரைச்சீலை ஓவிய முறையின் மரபும் மாற்றமும் பற்றி ஆய்வினை மேற்கொள்ள வேண்டியுள்ளது. இதன் அடிப்படையில் இவ் ஆய்வானது பண்புசார் ஆய்வின் கீழ் ஒப்பீட்டு ரீதியான ஆய்வு முறையில் மேற்கொள்ளப்பட்டுள்ளது. இதற்காக வட மாகாணத்தில் குறிப்பாக இந்துப் பாரம்பரியத்திற்கு வரலாற்றுச் சிறப்புமிக்க யாழ்ப்பாண நல்லூரர் பிரதேசத்தில் காணப்படும் சில ஆலயங்களில் பயன்படுத்தப்பட்ட மற்றும் பயன்பாட்டில் உள்ள திரைச்சீலை அமைப்பு முறைகள் ஆய்விற்கு உட்படுத்தப்பட்டுள்ளன. அந்த வகையில் இருபரிமாண ஓவியத்தில் இருந்து முப்பரிமாண ஓவியம் வரை படிப்படியாக வளர்ச்சியடைந்த இந்துக் கோயில்களின் திரைச்சீலை ஓவிய முறையானது நவீன இலத்திரனியல் சாதனங்களின் பயன்பாட்டால் பெரிதும் பாதிக்கப்பட்டிருப்பதுடன் ஒருசில இடங்களில் கலை ஆதரிப்போரின் உதவியால் அவை பேணப்படுவதையும் அவதானிக்க முடிகின்றது. 'இந்துப்பண்பாட்டின் திரைச்சீலை ஓவிய மரபு தொடர்பாக ஆவணப்படுத்தி வருங்காலத்தில் அனைவருக்கும் இம்முறை பற்றி அறிய வழியமைப்பதுடன் மரபுரீதியான திரைச்சீலை ஓவியம் வரையும் தற்கால ஓவியர்களிற்கான பேசப்படும் அடையாளமொன்றினை ஏற்படுத்தக் கூடியதாகவும் இவ் ஆய்வு அமைகிறது.*

***திறவுச் சொற்கள்*** *- கோயில் ஓவியங்கள், சாஸ்திர நூல்கள், தெய்வ உருவமைப்புகள், திரைச்சீலை அமைப்பு முறை, நவீன மயமாக்கல்*

# Theatre and Performance

# சமகாலத்தில் கூத்துப் பிரதிகளும் அதன் இலக்கிய மதிப்பீடும்: மட்டக்களப்பு வடமோடித் தென்மோடிக் கூத்துப்பிரதிகளை அடிப்படையாகக் கொண்ட ஆய்வு

**மெய்யநாதன் கேதீஸ்வரன்**
*நாடகமும் அரங்கக் கலைகளும் துறை, SPRFVPA, யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம்*

**ஆய்வுச் சுருக்கம்.**

*கலைகள் என்பவை பண்பாட்டின் முக்கிய கூறுகளாகும். குறிப்பாக பாரம்பரியக் கலை வடிவங்களைக் குறிப்பிடலாம். இதன் அடிப்படையில் தமிழரின் கலை பண்பாட்டில் கூத்து என்பது தொடர்ச்சியாகப் பேணப்பட்டுவரும் ஒன்றாகும். கூத்து என்ற சொல் பழந்தமிழ் இலக்கியங்களிலும் பல்வேறு இடங்களில் புலவர்களால் பயன்படுத்தப்பட்டுள்ளமை தமிழர் மரபில் கூத்து எனும் கலைவடிவம் பெறும் முக்கியத்துவத்தை உணர்த்துவதாய் அமைகின்றது. இவ்வாறு பண்டைய தமிழ் சமூகம் தன்னோடு நிகழ்த்துதல் மரபைப் பேணி வந்துள்ளமையும் குறிப்பிடத்தக்கது. இதன் தொடர்ச்சியாகவே தமிழர் பண்பாட்டில் கூத்து என்பது அன்று தொட்டு சமகாலம்வரையிலும் பேணப்பட்டு வரும் கலை வடிவமாகக் காணலாம். ஈழத்தின் தமிழரிடத்திலும் இதன் தொடர்ச்சியே காணப்படுகின்றது. இதன் அடிப்படையில் நோக்கும் போது, மட்டக்களப்பில் உயிர்ப்புடன் பேணப்பட்டுவரும் வடமோடி, தென்மோடிக் கூத்துகள் முக்கியத்துவம் பெறுகின்றன. மட்டக்களப்பில் பல்வேறு கூத்து வடிவங்கள் அதன் மரபு மாறாது இன்றளவிலும் ஆற்றுகை செய்யப்பட்டு வருகின்றன. பெரும்பாலும் வடமோடி, தென்மோடிக் கூத்துக்கள் பல இடங்களில் ஆற்றுகை செய்யப்பட்டு வருகின்றன. அத்தோடு இக்கூத்துகள் தம்மகத்தே கூத்துப்பிரதிகளையும் (கூத்து ஏடு) கொண்டுள்ளதோடு, இக் கூத்துப்பிரதிகளின் பதிப்பு முயற்சிகளும் நீண்ட காலமாகச் செய்யப்பட்டுவருகின்றன. இக் கூத்துப்பிரதிகள் பல சமகாலம் வரை பதிப்புச் செயற்பாடுகள் காணப்பட்டாலும், அப்பிரதிகள் பெரும்பாலும் இலக்கியத்தரத்தில் மதிப்பீடு செய்யப்படுவதில்லை. கூத்துப்பிரதி என்பது சாதாரணமான கூத்துக் கொப்பி என்ற அடிப்படையில் பார்க்கப்படுகின்றது. வெறும் ஆற்றுகை அடிப்படையில் அறியப்படுவதாலும் இக்கூத்துப்பிரதியின் மீதான கவனம் பார்வை என்பது சமகாலத்தில் மாறுபட்ட அடிப்படையில் காணப்படுகின்றது. அதே நேரம் சமகாலத்தில் கூத்துப்பிரதி என்று ஒன்று இருப்பதே அறியாதவர்களும் உண்டு. இதனை ஆய்வுப்பிரச்சினையாகக் கொண்டு. மட்டக்களப்பு வடமோடி, தென்மோடிக் கூத்துகள் இலக்கியத்தரத்தில் நோக்கப்படுவதற்கு ஏதுவான காரணிகளை இலக்கியங்களில் இருந்து கண்டறிந்து, இலக்கியங்கள் குறிப்பிடும் நாடக இலக்கணங்கள் மற்றும் நாடகக்கூறுகளை இக் கூத்துப்பிரதிகளும் கொண்டுள்ளன என்பதனை வெளிக்கொணர்வதை ஆய்வு நோக்கமாகக் கொண்டு, இவ் ஆய்வு மேற்கொள்ளப்படுகின்றது. இதனூடாகப் பல்வேறு இலக்கியங்களைக் கற்பதைப் போன்று கூத்துப்பிரதிகளையும் கற்பதற்கான ஒரு தளம் சமகாலத்தில் உருவாகும் என்பதே இங்கு எதிர்பார்க்கப்படுகின்றது. ஆய்வு எல்லையாக மட்டக்களப்பில் ஆற்றுகை செய்யப்படும் இராமநாடகம் மற்றும் குருகேத்திரன் போர் எனும் வடமோடிக்கூத்துகளும் அத்தோடு அனுவுருத்திர நாடகம், அலங்கரரூபன் நாடகம் ஆகிய தென்மோடிக் கூத்துகளும் ஆய்வுக்காகத் தெரிவுசெய்யப்பட்டுள்ளன. அத்தோடு இலக்கியங்களில் தெரிவுசெய்யப்பட்ட குறிப்பிட்ட சில இலக்கியங்களையும் கொண்டு ஆய்வு மேற்கொள்ளப்படுகின்றது. இலக்கியங்கள், சஞ்சிகைகள், ஊடாகக் கிடைக்கப்பெறும் தரவுகளைக் கொண்டும், பகுப்பாய்வு செய்து பண்புசார் ஆய்வு முறையியலில் ஒப்பிலக்கிய அணுகுமுறையில் கூத்துப்பிரதிகளை இலக்கியங்களோடு ஒப்பிட்டு ஆய்வு மேற்கொள்ளப்படுகின்றது.*

**திறவுச் சொற்கள்** *: கூத்துப்பிரதி, நாடகஇலக்கணம், யாப்பமைதி, கூத்துமரபு, பண்பாடு*

# பாரம்பரிய கத்தோலிக்கக் கூத்துக்களின் தோற்றத்தில் தேசியவாதத்தின் தாக்கமும், சமகால நிலைத்திருப்பும் சவால்களும்: யாழ்ப்பாணப் பாரம்பரியக் கத்தோலிக்கக் கூத்துக்களை அடிப்படையாகக் கொண்ட ஆய்வு.

**T.Mathisaliny**
*Department of Drama and Theatre Arts, SPRFVPA, University of Jaffna.*

**ஆய்வுச் சுருக்கம்**

*இந்த ஆய்வானது இலங்கைத் தமிழர்களின் பாரம்பரிய அரங்க வரலாற்றில் யாழ்ப்பாணக் கத்தோலிக்க பாரம்பரியக் கூத்துக்களை மையப்படுத்திய, கத்தோலிக்கப் பாரம்பரியக் கூத்துக்களை மீள் வாசித்தல் மற்றும் தேசியவாத எழுச்சியின் தாக்கங்களை அடிப்படையாகக் கொண்டு கத்தோலிக்கக் கூத்துக்கள் எதிர்நோக்கும் சவால்களை தற்கால அல்லது சமகால நிலையில் நின்று ஆராய்கின்றது. காலனித்துவக் காலப்பகுதியில் காலனித்துவ வாதிகளினால் கைப்பற்றப்பட்ட நாடுகளில் தமது ஆட்சி, அதிகார நோக்கங்களை அடிப்படையாகக் கொண்டு தமது மதத்தினை விஸ்தரிப்பதன் மூலம் கலாசார ரீதியான அடைவுகளை இனம் காண முற்படுகின்ற வேளையில் கத்தோலிக்க மதமும் அதன் இறை கதை வரலாறுகளும் தமிழர்களுடனும் தமிழர் பாரம்பரியத்துடனும் இணைந்து கொண்டு ஒரு பாரம்பரிய மரபாக விளங்கிய புதிய வடிவமே கத்தோலிக்கக் கூத்துக்களாகும். இவ் ஆய்வின் ஆய்வுப் பிரச்சினையாக இன்றைய காலப்பகுதியில் இக் கூத்துக்களின் பாரம்பரியம் மறைவுற்று ஆங்காங்கே நிகழ்த்தப்படுவதனைக் காண முடிகிறது. இந் நிலைமையானது காலவோட்டத்தின் ஒரு நிகழ்ச்சியாக இருப்பினும் அரங்கத் துறையினைப் பொறுத்த வரையில் காலப்போக்கில் கத்தோலிக்கக் கூத்துக்களின் வீழ்ச்சியாகவே கொள்ள முடியும். எனவே இவ் ஆய்வின் வினாக்களாகக் கத்தோலிக்கக் கூத்துக்களின் மறைவிற்கான காரணங்கள் என்ன? இக் கூத்துக்களின் மறைவிற்குத் தேசியவாத எழுச்சியின் தாக்கம் எப்படியானது? இக் கூத்தின் மறைவானது அரங்கில் எவ் வகையில் தாக்கம் செலுத்துகின்றது? என்பவைகள் காணப்படுகின்றன. மேலும் இவ் ஆய்வின் ஆய்வு முறையானது பண்புசார் ஆய்வாக அமைகின்றதோடு இவ் ஆய்வின் அணுகுமுறையானது விபரண ஆய்வாக அமைகிறது. இங்கு பெரும்பாலான தரவுகள் நூல்கள், சஞ்சிகைகளை அடிப்படையாகக் கொண்டு ஆராயப்படுகிறது. இவற்றின் மூலம் பெற்றுக் கொள்ளப்படும் தகவல்களை அடிப்படையாகக் கொண்டு தற்கால பாரம்பரிய வடிவ நிலைமையினையும் பின் காலணித்துவ கோட்பாடுகளுடனும் தொடர்புபடுத்தி நோக்கப்படுகிறது. இதனடிப்படையில் யாழ்ப்பாணப் பிரதேசத்தை அடிப்படையாகக் கொண்டு கத்தோலிக்கக் கூத்துக்களின் மறைவிற்கான காரணங்களைக் கண்டறிவதன் மூலம் இக் கூத்தினை ஆற்றுகை செய்வதனை ஊக்குவிப்பதோடு, அளிக்கை செய்ய விரும்புவோரின் அவாவினை நிறைவேற்றி வைக்கும் முகமான செயற்பாடுகளை முன்னெடுப்பதற்கும் இவ் ஆய்வானது வழிவகுக்கிறது.*

**திறவுச் சொற்கள் -** *கத்தோலிக்கக் கூத்துக்கள், தேசியவாதம், கருத்தியல்கள், தாக்க விளைவுகள்*

# இலங்கைத் தமிழ் அரங்க மரபில் 'கூத்துருவ நாடக' முயற்சியும், எதிர்கொள்ளும் சவால்களும். (கொல் ஈனும் கொற்றம், கூத்துருவ நாடகத்தை அடிப்படையாகக் கொண்டது.)

**தைரியநாதன். யஸ்ரின் ஜெலூட்**
*நாடகமும் அரங்கக் கலைகளும் துறை, SPRFVPA, யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம்*

**ஆய்வுச் சுருக்கம் :**

*இலங்கைத் தமிழ் அரங்கப் போக்கில் கால மாற்றங்களுக்கு ஏற்ப பல்வகை அரங்குகள் மேற்கிழம்பின. அவற்றுள் மிகத் தொன்மையான காலத்தில் இருந்தே, மக்கள் இனத்தின் பண்பாட்டுக் கூறுகளோடு இணைந்தவையாக மரபுவழிக் கூத்துக்கள் காணப்படுகின்றன. அவை பிரதேசங்களின் தனித்துவமான மரபுச் சிறப்புக்களைக் கொண்ட கூத்துக்களாக நிகழ்த்தப்பட்டு வருகின்றன. பிரதேச மக்களின் சமய, சமூக, வாழ்வியல் நோக்கங்களை மையமாகக் கொண்டு இவை காலங்காலமாகப் பின்பற்றப்பட்டு நடைமுறையில் இருந்து வருகின்றன. இம் மரபுக் கூத்துக்கள் காலத்தே வந்த மாற்றங்களோடு தன்போக்கில் தம்மைத் தகவமைத்து கொண்டு வந்துள்ளன. அதேவேளை திட்டமிட்ட வகையில் மரபுவழிக் கூத்துக்களில் மாற்றத்தை ஏற்படுத்தியும், கூத்தின் கூறுகளை நவீன அரங்கப் படைப்பாக்கங்களில் கையாண்டு பல்வேறுபட்ட அரங்கச் செயற்பாடுகளைப் பலரும் மேற்கொண்டும் வந்துள்ளனர். தொன்மக் கதைகளைத் துணையாகக் கொண்டு, பிரதேச மரபுவழிக் கூத்துக்களின் கூறுகளையும், நவீன அரங்கியல் உத்திகளையும் ஒருங்கே இணைத்து, இலங்கையில் போர்க் காலத்திலும், போரின் பின்னரும் 'கூத்துருவ நாடகம்' ஒடுக்கப்பட்ட மக்களின் பிரச்சினைகளைப் பேசியுள்ளது. இத்தகைய அரங்க முயற்சிகள் இலங்கைத் தமிழ் அரங்கில் இடம்பெற்ற போதிலும், பிரதேச மரபுவழிக் கூத்து வடிவங்கள் பலவற்றையும் ஒன்றிணைத்த இக் கூத்துருவ நாடக முயற்சியும், எதிர்கொள்ளும் சவால்கள் குறித்துப் பெருமளவில் ஆராய்ச்சிக்கு உட்படுத்தப்படாமையும், மரபுவழிக் கூத்தினை அடிப்படையாகக் கொண்ட அரங்கப் படைப்புகள் மீது முன்வைக்கப்படும் வாதப் பிரதிவாதங்களும் இவ் ஆய்வினை மேற்கொள்ளத் தூண்டியது. 'கொல் ஈனும் கொற்றம்' கூத்துருவ நாடக எழுத்துரு ஆய்விற்கான முதல் நிலைத் தரவாகவும், அது தொடர்பாக இதுவரை வெளிவந்த எழுத்துகள் இரண்டாம் நிலைத் தரவுகளாகவும், ஆற்றுகையில் பங்கேற்ற அனுபவம், கூத்துருவ நாடக ஆற்றுகையின் இலத்திரனியல் ஒளிப்பட ஆவணம், பார்வையாளர்களிடம் பெற்ற தரவுகள், கட்டமைக்கப்படாத நேர்காணல் மூலம் பெற்ற தரவுகளை அடிப்படையாகக் கொண்டு பண்புசார் ஆய்வு முறை, ஆற்றுகைசார் அணுகுமுறை வாயிலாக இவ் ஆய்வு முன்னெடுக்கப்பட்டுள்ளது. கூத்துருவ நாடகத்தின் அரங்கியல் உத்தி முறைகள், பிரதேச மரபுவழிக் கூத்துக்களில் படைப்பாளிகளின் தலையீடு, மரபுவழிக் கூத்து உரிமம், மரபுவழிக் கூத்தினை அடிப்படையாகக் கொண்ட படைப்பாக்கச் சுதந்திரம், தமிழ்த் தேசிய அரங்கு தொடர்பான விடயங்களை இக்கட்டுரை ஆராய முற்படுகின்றது. இது மரபுவழிக் கூத்துக்களின் பின்புலத்தில் சுதந்திரமான அரங்கப் படைப்புக்களை மேற்கொள்வதற்கான வெளியினை உருவாக்கும். மாணவர், ஆய்வாளர், கலைஞர்கள், அரங்கச் செயற்பாட்டாளர்களுக்கும் பயனுடையதாகவும் அமையும்.*

**திறவுச்சொற்கள் -** *அரங்கு, மரபு, உரிமம், கூத்து, கூத்துருவ நாடகம்*

# தேசிய அரங்கக் கற்பனைகளும், ஈழத்தமிழ் அரங்கச் சூழலில் கூத்தைத் தகவமைத்தலும்

**பா.அகிலன்**
*Department of Fine Arts, University of Jaffna*

**ஆய்வுச் சுருக்கம்:**

*சுதந்திரத்திற்குப் பிற்பட்ட காலத்தில் மரபினை மீளக் கண்டுபிடித்தல் என்பது அரசியல் பண்பாட்டுச் சூழலின் மிக முக்கியமான வேண்டுகோளாக இருந்தது. குறிப்பாக 1950களது நடுப்பகுதியில் எஸ். டபிள்யு. ஆர்.டி. பண்டாரநாயக்காவின் தேசத்தைக் கட்டியெழுப்பும் திட்டங்கள் இதனை அதிகபட்சம் அதிகாரநிலைப்படுத்தியதுடன் சிங்கள பௌத்தப் பண்பாடு பற்றிய கற்பனை செய்யப்பட்ட கடந்தகாலம் நிகழ்காலத்து அரசியற் பண்பாட்டு வரலாற்றுத் தேவைக்கேற்றவாறு தகவகைப்பட்டது. இது சிங்கள பௌத்த அரசியல் உயர்குழாத்தினது மேல் மத்தியதரவர்க்க நலன்கள் மற்றும் அபிலாசை சம்பந்தப்பட்ட மேலிருந்து கீழே தரப்பட்ட ஒரு பயில்வாகவும், அதற்கேயான உள்ளேற்புக்களையும், வெளிவிடல்களையும் உள்ளடக்கிய அரசியல் நடத்தைக் கோலமாகவும் காணப்பட்டன. இத்தகைய பின்னணியில் பேராதனியப் பல்கலைக்கழகத்தில் பேராசிரியராக இருந்த சரச்சந்திரா சிங்கள அரங்கில் மரபினை மீள்கண்டுபிடித்தல் என்ற செயற்பாட்டுப் பின்னணியில் இருந்து மனமே, சிங்கபாகு எனும் இரண்டு நாடங்களைத் தயாரித்தார். அதனால் அருட்டப்பெற்ற அதே பல்கலைக்கழகத்தில் அவருக்கு ஒருசாலைப் பேராசிரியராக தமிழ்துறையிலிருந்த சுப்பிரமணியம் வித்தியானந்தன் கர்ணன்போர்,வாலிவதை இராவணேசன் முதலான கூத்துக்களை படச்சட்ட மேடைக்கு உரியதாக்கி நகரப் பார்வையாளர்களை நோக்கி எடுத்து வந்தார். இம் முயற்சி ஒரு தேசிய அரங்கை உருவாக்கும் முயற்சியாக அவரது மாணவர் குழாத்தினால் பார்க்கப்பட்டது. அதனைத் தொடர்ந்து வந்த தமிழ் நாடக அரங்கில் ஏறத்தாழ கால்நூற்றாண்டுக்கு மேலாக தேசிய நாடகம் பற்றிய பலவேறுபட்ட உரையாடல்கள் கூத்தை மையமாக் கொண்டு நிகழ்ந்தன. அதன் கனத்த நிழல்கள் இன்றுவரை ஈழத்து அரங்கு பற்றிய உரையாடல்களிற் தொடர்கிறது. இந்த முயற்சிகளின் மூலங்களை எவ்வாறு அடையாளங்காண்பது? தேசியவாதம் என்பது ஒற்றைப்படையான விடயமா? அதனை முன்னெடுக்கும் தரப்புகளது வர்க்க அபிலாசைகள் அவற்றுள் காணப்பட்டனவா? விளிம்புநிலை கற்கைகளது பின்னணியிலிலுருந்து கேட்பதானால் அதனைக் காலம் காலமாகப் பயின்ற தரப்புகள் 'குரல் தரத்தக்க நிலையில் இருந்தனவா'? அல்லது அது அவர்களிடமிருந்து கைப்பற்றப்பட்டு தகவமைக்கப்பட்டதா? இந்த தகவமைப்பின் அரசியற் பின்னணியில் ஒட்டுமொத்த தேசிய அரங்கக் கருத்தாடல்களது அடிப்ப்ட்டாக இருந்தவை எவை? அவை யாரை பிரநிதித்துவம் செய்தன? தேசியவாதத்தின் பெயரால் யாரை பிறத்தியார் ஆக்கின? எனும் ஆய்வுக்கேள்விகளை அடிப்படையாகக் கொண்ட இவ்வாசிப்பு எழுதப்பட்ட வரலாறுகள், கட்டுரைகள், நேர்காணல்கள். கள அவதானிப்புக்களை வாசிப்புக்கான மூலத்தரவுகளாகக் கொண்டு நகர்வதோடு விபரிப்பு, எடுத்துரைப்பு ஆகியவற்றை உள்ளடக்கிய பகுப்பாய்வாக அமைகிறது.*

**திறவுச்சொற்கள்** - *தேசிய அரங்கு, மரபினை மீளக் கண்டுபிடித்தல், வர்க்க நலன், விளிம்பு நிலை*

# சமகாலத் தமிழரங்கச் சூழலில் அரங்கக் குழுவாக இயங்குதலின் சவால்களும் சாத்தியப்பாடுகளும்: வவுனியா அரங்காலயா சுதந்திர அரங்க வலையமைப்பினை அடிப்படையாகக் கொண்ட ஆய்வு

**அருந்தவநாதன் பிரசாந்**
*நாடகமும் அரங்கக் கலைகளும் துறை, SPRFVPA, யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம்*

**ஆய்வுச் சுருக்கம்:**

*ஈழத்துத் தமிழ் அரங்கில் குழுவாக இயங்கும் பண்பாட்டிற்கு குறிப்பிடத்தக்க நீட்சி காணப்படுகிறது. ஈழத்துத் தமிழ் அரங்கை பொறுத்தவரையில், இந்தியாவிலிருந்து நாடக சபாக்கள் இலங்கைக்கு வருகை தந்து நாடகங்களை நிகழ்த்தியதன் விளைவாகவும் அந் நாடகம், நாடகக் குழுக்களுடன் ஏற்பட்ட உறவு மற்றும் ஈர்ப்புக் காரணமாகவும் ஈழத்துத் தமிழ் நாடகப் பரப்பில் நாடக சபாக்களை உருவாக்குவதில் பல்வேறு முயற்சிகள் நடைபெற்றது. சபாக்களும் உருவாகின. இதுவே ஆரம்பம் எனலாம். ஈழத்து நவீன நாடக வளர்ச்சியும், நாடகம் கல்விப்புலம் சார்ந்து அவதானிப்புக்குள்ளானதும் பாடத்திட்டத்தில் உள்வாங்கப்பட்டதும் மற்றுமொரு பெரு வளர்ச்சியாக அவதானிக்கலாம். இவற்றினடியாகக் கால சூழ்நிலைகளின் பொருட்டு அரங்கக் குழுக்கள் தோற்றுவிக்கப்படுவதும் செயலிழந்து போவதும், ஒப்பீட்டளவில் குறைவான குழுக்களே தொடர்நிலையைப் பேணுவதையும் அவதானிக்க முடிந்துள்ளது. 'நாடகக் குழுக்கள்' எனும் எண்ணக்கருவை இவ் ஆய்வு சமகாலம் சார்ந்து அணுகுகிறது. வரலாற்றில் அரங்கச் செயற்பாடுகளை மேம்படுத்துவதில் அரங்கக் குழுக்கள் தவிர்க்க முடியாதவையாகவும் காணப்படுகிறது. எனினும் அரங்கக் குழுவாக இயங்குதலின் தத்துவார்த்தமும் தேவையும் சவால்களும் ஒழுங்கமைப்புக்கள் பற்றியும் ஆழமாக அறிதலும் உரையாடுவதும் போதாமையாகவே உள்ளது. அந்த வகையில் ஈழத்துத் தமிழ் அரங்கில் பல்வேறு அரங்கக் குழுக்கள் செயற்பட்டுக் கொண்டிருக்கின்றன. இவ் ஆய்வு அவ்வாறான குழுக்களில் ஒன்றான 'வவுனியா அரங்காலயா சுதந்திர அரங்க வலையமைப்பின்' இயங்கு முறையையும், 20 வருட கால நகர்வின் பொறிமுறைகளையும் சமகாலத்தில் குழுவாக இயங்குவதில் உள்ள சவால்கள் மற்றும் அதனை எதிர் கொள்ளத்தக்க சாத்தியப்பாடுகளை அறியும் வகையில் ஆய்வு செய்யப்படுகிறது. அரங்கக் குழுவாக இயங்குவதின் சவால்களை அடையாளம் காணுதல், சவால்களை வெற்றி கொண்டு இயங்கும் பொறிமுறைகளை அனுபவக் கல்வியாக பதிவு செய்வதுடன் புதிய பரீட்சார்த்த முயற்சிகளையும் அதன் விளைவுகளிலிருந்து தற்புதுமைகளை கண்டடைதலுமாக இவ் ஆய்வு நகர்கிறது. ஈழத்துத் தமிழ் அரங்கச் சூழலில் அரங்கக் குழுக்கள் நீடித்த செயற்பாட்டையும் நிலைபேறு தன்மையை அடைதல் என்பதும் சவாலாகக் காணப்படுகின்றது. அரங்கக் குழுவாக இயங்குவதின் பின்னணியிலுள்ள தமிழ்ச் சமூகத்தின் கண்ணோட்டமும் சமூக அங்கீகாரம் பெறுதலில் உள்ள இடைவெளிகளும் அரங்கக் குழுக்கள் நீடித்த தன்மையை பேணுவதில் பிரச்சினையாக அடையாளம் காணப்படுகிறது. இவ் ஆய்வின் பிரச்சினைகளை அடையாளம் காணவும் நோக்கத்தினைக் கண்டறியவும் பண்புசார் ஆய்வு முறையியலில் எடுத்துரைப்புப் பகுப்பாய்வு முறைமையில் கட்டமைக்கப்படாத நேர்காணல்களை அடிப்படையாகக் கொண்டும் குறித்த அரங்கக் குழு மீதான நீண்ட கால அவதானிப்புக்களினடியாகவும் இவ் ஆய்வு மேற்கொள்ளப்படுகின்றது. இவ் ஆய்வின் மூலம், அரங்கு என்பது சமூக உரையாடல்களாக மாறுவதன் ஊடாக குழு இயங்குதலுக்கான அங்கீகாரத்தினைப் பெறமுடியும். சூழ்நிலைகளுக்கேற்ப*

*தகவமைத்துக் கொள்வதும் தற்புதுமையான திட்டமிடல் மற்றும் பொறிமுறைகள் ஊடாக சவால்களை வெற்றி கொள்ள முடியும். கலைஞர்களுக்கிடையேயான கூட்டுமனப்பான்மையும் சமூக உறவினையும் வலுப்படுத்துதல் போன்ற விடயங்களைக் கண்டறிய முடியும் எனும் கருதுகோளுக்கமைவாக முன்னெடுக்கப்படுகிறது. அரங்கக் குழுவாக இயங்குவதின் அனுபவ சவால்களிலிருந்து கற்றுக் கொண்ட பாடங்களின் அடிப்படையில் புதிய வழிமுறைகளைக் கண்டடைய முடிவதுடன் தற்புதுமையான முயற்சிகளையும், பொறிமுறைகளையும் சாத்தியப்பாடுகளையும் அடையாளம் காண்பதுடன் உரையாடல்களாக மாற்றி எதிர்கால அரங்க நடவடிக்கைகளையும் முயற்சிகளையும் வலுப்படுத்த முடியும். அரங்கக் குழுவாக இயங்க விரும்புபவர்கள் மற்றும் புதிய முயற்சிகளில் ஈடுபடுவோருக்கான முன்னனுபவ கற்கையாக வழிகாட்டுதல் அரங்கக் குழுக்களுக்கான அங்கீகாரத்தினையும் ஊக்கப்படுத்தலையும் வழங்க உதவி புரியும்.*

**திறவுச்சொற்கள்** - *அரங்கு, குழுப்பயன்பாடு, தொழில்முறை, சமூக உரையாடல், பொறிமுறை*

# உடலுளத் தாக்கத்தில் செல்வாக்குச் செலுத்தும் தொலைக்காட்சித் தொடர் நாடகங்கள் குறித்த சமகாலப் போக்கு

**கேசவன் பிரேமகலா**
*இந்துநாகரிகத்துறை, இந்துக் கற்கைகள் பீடம். யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம்.*

**ஆய்வுச்சுருக்கம்**

*மனித வாழ்க்கையானது சலிப்படையாமல் நகர்ந்து செல்வதற்கு பொழுதுபோக்கு மிகவும் இன்றியமையாததாகும். அதனடிப்படையில் எத்தனை பொழுதுபோக்கு விடயங்கள் இருந்தாலும் இன்றைய நவீன தொழிநுட்ப வளர்ச்சியின் காரணமாக மக்கள் மத்தியில் பெரும் வரவேற்பைப் பெற்றுக்கொண்ட ஓர் சாதனமாகத் தன்னைப் பரிணமித்துக் கொண்ட பெருமைக்குரியது தொலைக்காட்சி எனலாம். இயந்திரமாக ஓடிக்கொண்டிருக்கின்ற மக்கள் வாழ்வில் ஒரு சிறு ஓய்வைத் தரும் விடயங்களில் ஒன்றாக அன்று தொடக்கம் இன்றுவரையும் சின்னத்திரை ஒன்றித்துள்ளது என்பதனை எம்மால் மறுக்க முடியாது. அதிலும் தொலைக்காட்சித் தொடர் நாடகங்களானவை கற்பனை என்ற நிலையையும் தாண்டி ஒவ்வொரு வீட்டினதும் முக்கிய அம்சங்களில் ஒன்றாக மாறிக்கொண்டிருப்பது அவதானிக்கத்தக்கதே. இத்தகைய மாற்றமானது சமூகத்தில் ஒவ்வொரு மனிதனதும் உடலுளப் பாங்கில் செல்வாக்குச் செலுத்துவதனைக் காணலாம். தொடர் நாடகங்களில் நடிக்கும் கதாபாத்திரமாகவே தன்னை நினைத்து நிஜ வாழ்விலும் அப்பாத்திரத்தின் குணநலன்களை, நடை உடைகளை உள்ளீர்த்தல் என்பதில் சாதகபாதகம் இரண்டுமே தங்கியுள்ளது. இவ்வாய்வானது தொலைக்காட்சியில் ஒளிபரப்பப்படும் இந்தியத் தமிழ் தொலைக்காட்சித் தொடர் நாடகங்களினால் மனித வாழ்வில் ஏற்பட்டுள்ள உடலுளத் தாக்கத்தை அடிப்படையாகக் கொண்டு மேற்கொள்ளப்பட்டுள்ளது. அந்தவகையில் தொடர் நாடகங்களின் இயல்பு, அது எவ்வாறு உடலுள ரீதியான சாதக பாதக விளைவுகளை ஏற்படுத்துகின்றது, இதனை பயன்பாட்டுக்குரியதாக்கும் வழிமுறைகள் என்பவற்றை நோக்காகக் கொண்டு வடிவமைக்கப்பட்டுள்ளது. அத்துடன் இவ்வாய்வானது இரத்தினபுரி மாவட்டத்தின் நிவித்திகலை பிரதேசத்தில் எழுமாற்றாக தெரிவுசெய்த சில கிராமங்களை அடிப்படையாகக் கொண்டு அமையப்பெற்றுள்ளதுடன் ஒரு சமூகச் சூழல்சார் ஆய்வாக அமையப்பெறுவதனால் இங்கு பண்புசார் ஆய்வு முறையியல் பயன்படுத்தப்பட்டுள்ளது. இவ் ஆய்விற்கான தரவுகள் கள ஆய்வு மூலம் வெளிக்கொணரப்பட்டுள்ளதுடன், அவதானித்தல் முறை, நேர்க்காணல், கலந்துரையாடல் போன்றவற்றை கருவிகளாகக் கொண்டும் ஆய்வு முன்னெடுக்கப்பட்டுள்ளது. அத்துடன் இவ் ஆய்வானது துறை ரீதியான மேலதிக ஆய்வு செய்வோருக்கும், பாடசாலை மாணவர்கள், தொலைக்காட்சி சமூகம் போன்ற இன்னும் பலருக்கும் பயன்படுவதோடு, சமூகத்தில் மக்களிடையே ஒரு மாற்றத்தைக் கொண்டுவரவும் பாதகத்தைத் தவிர்த்து சாதகத்தை உள்ளீர்த்து முன்னேறிச் செல்லவும் வழிவகுக்கும் என்பது திண்ணம்.*

**திறவுச் சொற்கள்** - *தொலைக்காட்சி, சின்னத்திரை, தொடர் நாடகங்கள், உடலுள ரீதியான மாற்றம்*

# அனுபவங்களில் இருந்து சமகால ஆற்றுகைக்கான பனுவலிக்கு மை நேம் இஸ் தமிழ் ஆற்றுகையை அடிப்படையாகக் கொண்ட ஆய்வு.

**யோண் மரியதாஸ் கிருதர்ஷன் நீக்கிலஸ்**
*நாடகமும் அரங்கக் கலைகளும் துறை, SPRFVPA, யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம்*

**ஆய்வுச் சுருக்கம்.**

*இலங்கைத் தமிழர்கள் நாற்பது வருடகாலப் போர் வரலாற்றையும் அனுபவங்களையும் தாங்கியிருக்கின்ற ஒரு இனம். அதிகாரத்தின் எல்லைக்குள்ளிருந்து அடக்குமுறையைப் பற்றிப் பேசுவது என்பது எப்போதும் விசாரணைக்கு உட்படுத்தப்படுவதாகவே இருக்கிறது. இந்த நிலையில் அந்த அனுபவங்களை எப்படி அரங்குக்கு அல்லது ஆற்றுகைகளுக்குக் கொண்டுவருவது என்ற ஆய்வுப் பிரச்சனையிலிருந்து ஆரம்பமாகும் இவ் ஆய்வானது சுவிஸ்லாந்து, பாசில் நகர சர்வதேச அரங்க விழா 2022லும், ஜெர்மனி ஸ்பீல் ஆர்ட் சர்வதேச அரங்க விழாவிலும் ஆற்றுகை செய்யப்பட்ட "மை நேம் இஸ் தமிழ்" எனும் ஆற்றுகையின் பனுவலையும் அவ் பனுவலின் தயாரிப்புப் படிமுறையையும் அடிப்டையாகக் கொண்டது. புலத்தில் நிகழ்ந்தது, புலப்பெயர்வில் நிகழ்ந்தது, முதல் தலைமுறையில் தமிழ் தொடர்புள்ளோருக்கு நிகழ்ந்தது ஆகிய மூன்று அனுபவங்களைத் தொகுக்கும் இப் பனுவல் தமிழ், அதிகாரம், அடையாளம், பயங்கரவாதம் பற்றிப் பேசுகிறது. மூன்று நபர்களின் தமிழோடான சொந்த அனுபவங்களைத் தொகுத்து மலேசியாவைச் சேர்ந்த லியோ புய் டின் ஆற்றுகை பனுவலாக வடிவமைத்துள்ளார். "திகம் திகம்" என்னும் பனுவல் தயாரிப்பு படிமுறையைப் பயன்படுத்தும் இவர் உண்மையை வளைத்தல் என்னும் நுட்பத்தையும் கால வரிசைக் கோட்டோடு விளையாடுதலையும் ஒத்த மற்றும் எதிர் உணர்வுநிலையிலுள்ள சம்பவங்களை வரிசைப் படுத்துதல் போன்ற நுட்பங்களைப் பயன்படுத்துகிறார். பனுவலின் சக்தி அல்லது பனுவல் பெறுகின்ற முக்கியத்துவம் பற்றிய இவ் ஆய்வானது பண்புசார் ஆய்வு முறையியலைப் பயன்படுத்துவதோடு கட்டமைப்புப் பகுப்பாய்வு, பிரதிபலிப்பாக்கம் மற்றும் நிலைநிறுத்துதல் போன்ற ஆய்வு அணுகுமுறைகள் பயன்படுத்தி ஆய்வு செய்யப்படுகிறது. 2022ம் ஆண்டில் தனிமொழிகளை மட்டும் வரிசைப்படுத்துவதாக அமைந்த பனுவல் 2023ம் ஆண்டில் தனிமொழிகளையும் உரையாடல்களையும் உள்ளடக்கியதாக மேம்படுத்தப்பட்டதால் இவ் இரு பனுவல்களுக்கு இடையேயான பொதுமைகள், பரிமாணமாறுபாடுகள், முன்னேற்றங்கள் பற்றியும் உரையாடுகிறது. பனுவலுக்கூடாக ஒரு எழுதப்படாத வரலாற்றினை எழுதுவதற்கும், ஒடுக்கப்படுகின்ற அல்லது சிறுபான்மை இனக்குழுக்கள் தாங்கள் பேச விரும்புகின்ற விடயங்களைப் பேசுவதற்கும், பனுவலுக்கான முக்கியத்துவத்தை அதிகரிப்பதற்கும் பயன் தருவதாக இவ் ஆய்வு அமையும்.*

**திறவுச் சொற்கள்** - *ஆற்றுகைப் பனுவல், திகம் திகம், பரிமாண மாறுபாடுகள், உண்மையை வளைத்தல்*

# Text and Performance

# The Performative Divine: Velichappadu's Role in Challenging Marginalization in Malabar

**Sunesh Parayil**
*Department of Mass communication, Vels University, Chennai, Tamilnadu*

**ABSTRACT**

In Malabar region of Kerala, India, the Velichappadu- oracle of god, is a unique socio-religious practice where individuals, primarily from marginalized communities, transform into god figures known as Velichappadu. This transformation elevates them to the status of a deity, jiggling sharp ceremonial sword, vermilion outfit, aramani (waistlet) and chilanka (anklet),the sprayings of turmeric powder, and dances to the beat of the chenda while speaking with believers as deities. Velichappadu is religiously attached with the Kodungallur Bhagavathi temple, Trissur Kerala, and believes to have connection with the myth of Kannagi. The study explores the velichappadu's evolution from artist to deity and examines how it is acting as a tool for social change by erasing the lines of marginalization. By analyzing historical contexts, ritualistic practices, and community perceptions, this study aims to uncover how the Velichappadu tradition serves as a mechanism for challenging social norms, empowering marginalized groups, and fostering communal solidarity in the region of Malabar. Through Ethnography and other qualitative research methods, including participant observation and interviews, the study sets the stage for a comprehensive exploration of the Velichappadu phenomenon and its broader implications for social transformation in contemporary Kerala.

**Keywords** : Velichappadu, arts of marginalized, social change, Castes in Kerala.

# Music as a Textual Enhancer: A Study of Utirippūkkaḷ

**Gayathree Srikandavel**
*Department of Translation Studies, Faculty of Arts, University of Jaffna*

**ABSTRACT**

Screen Adaptation is cited as an example of intersemiotic adaptational ultrasemiotic category of translation. Within this dynamic landscape, the shift in sign systems unfolds certain textual enhancers with significant contributions. The resultant target text is embedded with layers of text. Music as a textual enhancer is one of the contemporary challenges in creative arts especially within the context of audio-visual narratives. This study intends to focus on the role of music as a textual enhancer in screen adaptation where the process is across different sets of semiotic signs and with embedded texts. Among various translations from a written text into an audiovisual text in Tamil milieu the translation from Ciṟṟaṉṉai into Utirippūkkaḷ is selected and this study embarks with the novella Ciṟṟaṉṉai and its translation Utirippūkkaḷ as a case study. The study endeavours to unravel the multifaceted role of music as a textual enhancer in the screen adaptation, a category of intersemiotic translation. This study aims to shed light on Music, the underlying text to understand how textual enhancers contribute in the process of intersemiotic translation. The source text and the translation are studied and descriptive method is employed to identify and discuss music as a textual enhancer.

**Key Words -** Intersemiotic Translation, Screen Adaptation, Textual Enhancer, Music

# Translating Text to Cinema: A Comparative Study of Chetan Bhagat's Novels and Their Film Adaptations

**Amaljith N.K, Dr. K Karpaga Sundaram, K Prabakar**
*Department of Visual Communication, Kalasalingam Academy of Research and Education*

**ABSTRACT**

Chetan Bhagat, one of India's bestselling authors, has achieved significant success with his novels, several of which have been adapted into Bollywood films. The process of adapting Bhagat's novels into films involves a series of steps, each contributing to the successful translation of the written word to the visual medium. Bollywood, always on the lookout for compelling stories, found in Chetan Bhagat's novels a treasure trove of narratives that mirrored the aspirations and dilemmas of the urban Indian youth. The transition from page to screen, however, is not always seamless. Filmmakers faced the challenge of condensing the rich tapestry of Bhagat's novels into a two to three-hour cinematic experience while retaining the essence of the source material. One of the most successful adaptations of Chetan Bhagat's work is the film "3 Idiots," based on "Five Point Someone." Directed by Rajkumar Hirani, the film not only retained the humour and emotional depth of the novel but also added its unique touch. The film, starring Aamir Khan, became a massive hit, resonating not only with the youth but with audiences of all ages. The success of "3 Idiots" set the stage for more Chetan Bhagat novels to be adapted into Hindi cinema. The adaptation of Chetan Bhagat's novels to Hindi films has been a fascinating journey, reflecting the evolving tastes and aspirations of Indian audiences. While some films successfully captured the spirit of the novels, others faced challenges in maintaining the depth of the source material. The cinematic odyssey of Chetan Bhagat's works serves as a testament to the dynamic relationship between literature and cinema, showcasing the power of storytelling to transcend mediums and connect with a diverse audience. As the Indian film industry continues to evolve, the adaptation of novels like Chetan Bhagat's will remain an integral part of the cinematic landscape, providing audiences with both entertainment and a reflection of contemporary society. Through a comprehensive analysis of the narrative, characters, and cinematic techniques employed in the film, this study aims to critically examine the adaptation of Chetan Bhagat’s novels to Bollywood films by examining the creative interpretations, cultural resonances, and impact on the audience. Qualitative content analysis is used as the methodology for the research.

**Keywords** : Novel, Cinema, Adaptation, Chetan Bhagat, Bollywood

# மரபின் காலனியவாக்கமும் காலனிய நீக்கமும்: கோடை நாடகத்தை அடிப்படையாகக் கொண்ட ஆய்வு

**யாழினி நடேசு**
*நாடகமும் அரங்கக் கலைகளும் துறை, SPRFVPA, யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம்*

**ஆய்வுச்சுருக்கம்**

*இந்த ஆய்வானது பாரம்பரிய மரபுகளின் காலனியாக்கமும் காலனிய நீக்கமும் கோடை நாடகத்தை அடிப்படையாகக் கொண்ட ஆய்வு என்னும் தலைப்பை அடிப்படையாகக்கொண்டு அமைகிறது. ஒவ்வொரு இனக்குழுமமும் தமக்கே உரித்தான வாழ்க்கை முறை, சமய நம்பிக்கை, மொழி, கலை, உணவுப்பழக்கம் போன்றவற்றுடன் தம் வாழ்வியல் தனித்துவத்தை அடையாளப்படுத்துவர். அவர்களினால் உருவாக்கப்படும் கலைகளும் அவர்களின் வாழ்வியலில் ஒரு பகுதியாகவே விளங்குகின்றன. காலனித்துவ பாதிப்பினால் இனக்குழுமங்களின் கலைகள் பாரம்பரிய மரபுகள் இல்லாமல் ஆக்கப்பட்டு ஐரோப்பிய மரபுகள் புகுத்தப்படுவதால் கால ஓட்டத்தில் பூர்வீக முறைகள் இழக்கப்பட்டு பூர்வீக மரபுகளின் அசல் தன்மை இல்லாது ஐரோப்பிய மாதிரிகள் பிரதானப்படுத்தப்படுவதை காணக்கூடியதாக இருக்கிறது. காலனிய ஆட்சியினால் மொழி, உள்ளூர் சமயம், பண்பாடுகள் போன்றவற்றின் மீதான செல்வாக்கு காலனிய பாடத்திட்ட ஆதிக்கத்திற்குட்பட்ட பாடசாலைகளுக்கு சமூகமளிக்க வேண்டிய நிலை பணப்பொருளாதாரத்தை அடிப்படையாகக் கொண்ட சமூக மாற்றம் என்பன இடம்பெற்றது. மேலாதிக்கத்தன்மை கொண்ட ஒரு பண்பாடு இன்னொரு பண்பாட்டின் மீது ஆதிக்கத்தை மேற்கொள்வதால் பண்பாட்டுக் கலப்பு ஏற்படுகின்றது. நாகரிகப்படுத்துதல் என்ற போர்வையில் மேன்நிலையாக்கத்தினை ஏற்படுத்திட அதற்கு உந்தப்பெற்ற மக்கள் காலனித்துவக் கருத்துக்கள் மற்றும் வாழ்க்கை முறைகள் என்பவையே மேலானவை, சிறந்தவை அவற்றைப் பின்பற்றுதலே மேன்நிலையாக்கம் செய்யும் என்று அதன்படி செயற்பட்டனர். இவ்வாறு இன்றுவரையிலும் காலனித்துவ எச்சங்கள் தொடர்கின்ற போக்குக் காணப்படுகின்றது. ஆயினும் மரபுக்கு திரும்புதல் சார்ந்த கருத்தியல்கள் பரவலாக எல்லா துறைகளிலும் நிகழ்கின்றது. இவ்வாறாக மரபு சார்ந்த விடயங்களை மீளத் தேடுதல் போன்ற மரபை நோக்கிய போக்குக் காணப்படுகின்றது. ஆகவே காலனியத்திற்குள் உட்பட்ட இனக்குழுமங்களில் ஒன்றான தமிழர்களின் மரபை நோக்க காலனியநீக்கம் என்பது அவசியமாகின்றது. காலனியநீக்கம் செய்வதற்கு காலனியமயப்பட்டு இருக்கின்ற விடயங்கள் பற்றிய தெளிவு தேவை. நாடக எழுத்துருக்கள் எப்பொழுதும் வாழ்வியலோடு தொடர்புபட்டு வாழ்வியலைப் பேசுகின்றதாகவே காணப்படுகின்றது. ஆகவே காலனியர் இலங்கையில் தமது ஆட்சியினை நிலை நாட்டிய போது அவர்களின் வருகையினால் ஏற்பட்ட விளைவுகளை கலை, பண்பாடு, மரபு மற்றும் சமூக சிந்தனையின் அடிப்படையில் மகாகவி து.உருத்திரமூர்த்தி அவர்களின் கோடை நாடகத்தினை அடிப்படையாகக் கொண்டு நோக்குவதாக இவ் ஆய்வு அமைகின்றது. இந்த நாடகத்தில் நாதஸ்வர குடும்பத்தின் கதையின் ஊடாக உள்ளூர் மரபிற்கும் காலனித்துவத்திற்கும் இடையிலான மோதல் காட்டப்பட்டுள்ளது. இந்நாடகத்தில் படைக்கப்பட்ட சில பாத்திரங்கள் பாரம்பரிய மரபுகளை கலைகளை பாதுகாக்கவும் மரபிலிருந்து விடுபடாது இருக்கவும் போராடுகின்றன. சில பாத்திரங்கள் கால மாற்றத்திற்கு ஏற்ப கல்வி, அரச உத்தியோகம் என பணப்பொருளாதார நோக்கில் பயணிப்பதாகவும் இருவேறுபட்ட*

*சிந்தனை கொண்ட பாத்திரங்கள் இந்நாடகத்தில் படைக்கப்பட்டுள்ளது. இவ்வாய்வானது நூல்கள் சஞ்சிகைகள் இணையம் மூலம் பெற்றுக்கொண்ட தரவுகளை அடிப்படையாகக்கொண்டு பண்புசார் முறைமையினைப் பயன்படுத்தி காலனியரின் ஆட்சியினால் நிகழ்ந்த மாற்றங்கள் எவை? மரபிற்கும் காலனியத்திற்கும் இடையிலான சிக்கல் என்ன? மேன்நிலையாக்கம் நாகரிகப்படுத்துதல் போன்றவற்றின் அடிப்படை என்ன? காலனியநீக்கத்தின் அவசியம் யாது? போன்ற ஆய்வு வினாக்களை கொண்டு முன்னெடுக்கப்பட்டுள்ளது. ஏன் பாரம்பரிய மரபுகளைத்தேட வேண்டும் என்பதே ஆய்வுப்பிரச்சினை ஆகும். இவ் ஆய்வின் நோக்கமானது காலனியமயப்படுத்தப்பட்ட தமிழரது பாரம்பரிய மரபுகளைக் கண்டறிந்து காலனியநீக்கத்திற்கு வழிவகை செய்தல் ஆகும். இவ்வாய்வானது அரங்கத் துறை சார்ந்தோருக்கும் பின்காலனித்துவ சிந்தனையினால் தமது சுயத்தினை அல்லது பண்பாட்டை தேடுபவர்களுக்கு உறுதுணையாக அமையும்.*

**திறவுச் சொற்கள்** - *காலனியாக்கம், சமூகநிலை, நாடகப்பனுவல், பண்பாட்டுக்கலப்பு, காலனியநீக்கம்*

# Exploring the Extinct Folk Art forms of Birbhum District, West Bengal, India

**Anindita Niyogi**
*Department of Performing Arts, Pondicherry University.*

**Abstract:**

This seminar paper delves into the vibrant world of West Bengal's disappearing folk arts, focusing on three significant forms: Bhadu Gaan, Habu Gaan, and Patachitra. These art forms, deeply rooted in the cultural fabric of the region, hold immense historical, social, and artistic value, particularly within marginalized communities. This paper aims to unravel the intricate narratives, techniques, and symbolism embedded within Bhadu Gaan, Habu Gaan, and Patachitra. The paper begins by providing a historical overview of each folk art form, tracing its origins, evolution, and traditional significance. Special attention is given to the marginalized communities that have historically safeguarded and perpetuated these traditions, despite facing social and economic challenges. Furthermore, the paper explores the artistic techniques and stylistic elements characteristic of Bhadu Gaan, Habu Gaan, and Patachitra, shedding light on the craftsmanship and creativity involved in their creation. The paper highlights the unique aesthetics and storytelling methods employed by practitioners. Moreover, the paper discusses the contemporary challenges and threats faced by Bhadu Gaan, Habu Gaan, and Patachitra, including dwindling practitioners, diminishing patronage, and cultural commodification. It underscores the urgent need for concerted efforts to preserve and promote these endangered art forms, not only as cultural artifacts but also as vital components of West Bengal's intangible cultural heritage.

**Keywords** - disappearing folk-arts, rural art, rural artists, Bhadu gaan, Habu gaan, Pata-chitra, Bahurupi.

# சமகால இசைநோக்கில் கைசிகப் பண்ணும் ஏகாதசியும்

**சண்முகம்பிள்ளை செல்வப்பிரகாஷ்**
*சுவாமிவிபுலானந்த அழகியற் கற்கைள் நிறுவகம், கிழக்குப் பல்கலைக்கழகம்*

**ஆய்வுச்சுருக்கம்**

*இவ்வாய்வானது தமிழிசைப் பண்களில் சிறப்பாகக் கொள்ளப்படும் கைசிகப் பண்ணைப் பற்றிய தேடல் ஆகும். இந்துக்கள் அனுஷ்டிக்கும் ஏகாதசி இருபத்து நான்கினுள்ளும் பிரதானமாக தற்காலத்தில் மார்கழி மாதத்து வைகுண்ட ஏகாதசியே கொள்ளப்படுகிறது. ஆழ்வார்கள் மங்களாசாசனம் பண்ணிய திவ்யதேசங்களிலும் ஏனைய தமிழகத் திருத்தலங்களிலும் இதே போல் எமது ஈழம் பூராகவும் கொண்டாடப்பட்டு வருகிறது வைகுண்ட ஏகாதசியாகும். ஆனால் இசையோடு தொடர்பாக இன்றைய பைரவி ராகம் எனும் பண்டைத் தமிழ் கைசிகப் பண்ணினுடைய பெயர் கொண்டு கைசிக ஏகாதசி என அழைக்கப்படும் ஏகாதசி கார்த்திகை மாத வளர்பிறையில் வருகின்றது. இந்த ஏகாதசி மற்றும் இதன்போது பாடும் கைசிகப் பண்ணின் சிறப்பு பற்றியதாக இவ்வாய்வு அமையும் இன்றைய காலகட்டத்தில் எமது சமூகத்திற்கு இந்தப் பண்ணை பாடுவதாலும் ஏகாதசியாலும் கிடைக்ககூடிய பயன்பாடு பற்றி இவ்வாய்வு அமைகிறது. தற்கால சூழலில் இந்த ஏகாதசி விரதமகிமையும் இந்தப் பண்ணினை அத்தினத்தில் பாடுவதால் ஏற்படும் நன்மை பற்றி உலகிற்கு வெளிப்படவில்லை என்பது பிரதானமான ஆய்வுப் பிரச்சினையாகக் காணப்படுகிறது. இசை, நடனம் போன்ற கலை பயிலும் பள்ளிகளிலோ, கல்லூரிகளிலோ, பல்கலைக்கழகங்களிலோ கூட இந்த ஏகாதசி பற்றிப் பேசப்படவில்லை என்பதையும் ஆய்வுபிரச்சினையாகக் கொண்டு இவ்வாய்வு அமைகிறது. இவ்வாய்வானது மேற்கொள்ளப்படுவதனுடைய பிரதானமான நோக்கம் தற்காலத்தில் இசை பயில்பவர்களிடையே கைசிக ஏகாதசியின் முக்கியத்துவத்தை வெளிப்படுத்துவது ஆகும். அத்தோடு இந்த கைசிகப் பண்ணினுடைய பெருமை புராண காலம் முதலே பேசப்பட்டுள்ளது என்பது எமது தமிழ் சமூகத்திற்கும் கலைச் சமூகத்திற்கும் கொண்டு சேர்ப்பதுடன் வருங்காலத்தில் இது தொடர்பான அந்த ஏகாதசி நன்நாளிலே கைசிகப் பண்பாடல் விழாக்களையும் நாட்டிய நாடக, இசை நாடகங்களையும் செய்வதற்கு இவ்வாய்வு ஊன்று கோலாய் அமையும் என்பதே இவ் ஆயவின் பிரதான நோக்கமாகும். இவ்வாய்வானது விபரண ஆய்வுமுறையினையும், கள ஆய்வு முறையினையும் வரலாற்று ஆய்வு முறையினையும் பின்பற்றி மேற்கொள்ளப்படுகிறது.*

**திறவுச் சொற்கள்** - *கைசிக புராணம், கைசிகப்பண், வராகபுராணம், பைரவிராகம், ஏகாதசி மகாத்மியம்*

# நிமித்தமறிதலில் கோடிழைதல் குறித்த நம்பிக்கை வழக்கம் : தமிழ் பக்தி இலக்கியங்களை முன்னிறுத்திய நோக்கு

**Kishanthiny Thiruchchelvam,**
*Dept. of Hindu Civilization, University of Jaffna.*

***ஆய்வுச்சுருக்கம்:***

*வருங்காலத்தை அறியும் ஆவல் தொன்று தொட்டு இந்துக்கள் மத்தியில் வேரூன்றியுள்ளது. இதற்காக நிமித்தம், குறிகேட்டல், ஜாதகம் பார்த்தல், பிரசன்னம் பார்த்தல், கைரேகை பார்த்தல் என்று பல வழிமுறைகள் பின்பற்றப்பட்டுள்ளன. அவற்றுள் நிமித்தம் என்ற வகைப்பாட்டினுள் கைக்கொள்ளப்படும் ஒரு வழிமுறையே கோடிழைதல் ஆகும். இது பழந்தமிழர் இலக்கியங்களில் அகத்திணை மரபாகப் பார்க்கப்பட்ட ஒரு நம்பிக்கை சார்ந்த வழக்கமாகும். இதன் தொடர்ச்சியாக, இந்துசமய இலக்கியங்களிலும் அகத்திணை செல்வாக்குச் செலுத்தும் நிலையில், இறைவன் மீது கொண்ட பக்தி மேலீட்டினால் அவனை (இறைவனை) அடைவனோ? அன்றி மாட்டேனோ? என்பதை அறிவதற்காக கோடிழைத்து நிமித்தம் காணப்பட்டதை அறிய முடிகின்றது. தேவாரம், திருக்கோவையார், நாலாயிரதிவ்வியபிரபந்தம் மற்றும் கைலைபாதி காளத்திபாதி போன்ற இலக்கியங்களிலுள்ள பாடல்களில் கோடிழைதல் குறித்த நம்பிக்கை வெளிப்படுத்தப்பட்டுள்ளது. அவற்றை இந்த ஆய்வுப்புலம் இனங்கண்டுள்ளது. அந்தவகையில் இந்துசமய வாழ்வியலில் நிமித்தமறியும் நுட்பங்களுள் ஒன்றான கோடிழைதல் தொடர்பான செய்திகளை இந்துசமய இலக்கியங்களில் இனங்காணுதல், அகத்திணைக் கொள்கைகளுள் ஒன்றான கோடிழைதல் பக்தித் தளத்தில் பெற்ற முக்கியத்துவத்தை மதிப்பிடுதல் ஆகியவற்றை நோக்கங்களாகக் கொண்டு இந்த ஆய்வானது முன்னெடுக்கப்பட்டுள்ளது. மேலும் புராதன இந்துக்களின் வாழ்வியலில் நிமித்தமறியும் உபாயங்களில் ஒன்றாகக் கோடிழைத்துப் பார்த்தல் வழக்கத்திலிருந்ததைப் பக்தி இலக்கியங்கள் புலப்படுத்தியுள்ளன. ஆனால் இன்றைய காலகட்டத்தில் இவ்வாறான உபாயங்கள் இந்து மரபிலிருந்து வழக்கொழிந்து செல்வதனை அவதானிக்க முடிகின்றது. ஆகையால் இவ்வாறான புராதன மரபுகளை ஆவணப்படுத்த வேண்டியதன் தாற்பரியமே இந்த ஆய்வின் பிரச்சினையாகக் கொள்ளப்படுகிறது. இந்த ஆய்வுக் கட்டுரையானது அடிப்படையில் விவரண ஆய்வாக அமைகிறது. இந்து இலக்கியங்களில் இழையோடியுள்ள கோடிழைதல் குறித்த கருத்துக்கள் உள்ளடக்கப்பகுப்பாய்வு முறையியலுக்கு உட்படுத்திக் கட்டமைக்கப்பட்டுள்ளது. இந்த ஆய்வுக்கான மூலங்களாக திருமுறைப் பாடல்கள், அவற்றின் தொகுப்புக்கள் மற்றும் அவற்றுக்கான உரை விளக்கங்கள் என்பன முதன்மை மூலங்களாகவும் கோடிழைதல் தொடர்பாக வெளிவந்த கட்டுரைகள், நூல்கள், இணையப்பக்கங்கள் என்பன துணைமை மூலங்களாகவும் கொள்ளப்படுகின்றன. உலகியல் தளத்தில் பிரயோகிக்கப்பட்ட நம்பிக்கைசார் நிமித்தங்கள் உலகியலைக் கடந்த ஆன்மிகத் தளத்திலும் பயில்நிலை பெற்றுத் திகழ்ந்துள்ளது. அகவுணர்வுகளை வெளிப்படுத்துவதாக அமைந்த பாடல்களில் அகத்திணைக் கொள்கைகளுள் ஒன்றாகிய கோடிழைதல் குறித்த கருத்தாடல்கள் இந்து இலக்கியங்களில் கோடியையே, மணற்கோடு, சுழிக்கணக்கு, கூடலே கூடு, கூடலிழைக்குமே என்ற பதங்களினூடாக வெளிப்படுத்தப்பட்டுள்ளன. இது அகத்திணைக் கொள்கைகளைக் கடந்த நிலையில் ஆன்மிகத் தளத்தில் இறைவனிடத்தில் சேரும் விருப்பம் நிறைவேறுமா? என்பதை அறிவதற்காக*

*பார்க்கப்பட்ட நிமித்தமுறையாகும். இறைவன் வருவான் என்றால் இறைவனை அடைவேன் என்றால் கோடு இயை என நேர்மறைப் பொருளில் சுட்டப்பட்டுள்ளமையின் மறுதலை வாதம் கோடு கூடவில்லையாயின் இறைவனை அடையார் என்பதேயாகும். மேலும் இந்துக்களின் வாழ்வியலில் இழையோடியுள்ள நம்பிக்கைசார் தொன்மங்கள் குறித்து ஆய்வினை மேற்கொள்ளும் ஆய்வாளர்களுக்கும் பக்தி தளத்தில் அவ்வகையான முறை பிரயோகிக்கப்பட்டுள்ளமையை இளைய தலைமுறையினருக்கு அளிக்கை செய்வதற்கும் இந்த ஆய்வானது துணைபுரியும் என்பது திண்ணம்.*

**திறவுச் சொற்கள்** *: இந்துசமய இலக்கியங்கள், கோடிழைதல், நம்பிக்கை, அகத்திணை, நிமித்தம்*